DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurence;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

உதயம் 1395 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 30, 2022

# கடமையின் போது துப்பாக்கிதாரி ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்ட OPP பொலிஸ் உத்தியோகத்தர் Grzegorz Pierzchala



கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள ஹேகர்ஸ்வில் என்னும் நகரத்தில் கடந்த செவ்வாய் கிழமை மதியம் கடமையில் இருந்தபோத சுட்டுக்கொல்லப்பட்ட 28 வயது மாகாணப் பொலிஸ் உத்தியோகத்தர் **Grzegorz Pierzchala** இனது மரணம் தொடர்பாக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளள ஒன்றாரியோ மாகாண பொலிஸ் தலைமை அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் கொல்லப்பட்ட உத்தியோகத்தர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணத்தை தழுவிய அன்று தான் தனது 10 மாத தகுதிகாண் காலத்தை கடந்ததற்கான அறிவிப்பை தலைமை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொண்டதாகவும் இது தொடர்பாக அவர் மகிழ்ச்சியோடு தன் பணியைச் செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரது அகால மரணம் தொடர்பாக கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடொ மற்றும் ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் ஆகியோர் இந்த படுகொலையானது தங்களுக்கு மிகுந்த அதிர்ச்சியைத் தந்துள்ளதாகவும் இந்த கொலை கண்டிக்கப்பட வேண்டியது என்றும் தெரிவித்துள்ளனர்.

(உள்ளே விபரமான கட்டுரை 7ம் பக்கத்தில்)

# கனடாவில் இயங்கிவரும் "இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் — கனடா" நடத்திய "வர்த்தக தீபம்"

26-12-2022 ஞாயிற்றுக்கிழமை மாலை ஸ்காபுறோ கொன்வென்சன் சென்றர் விழா மண்டபத்தில் கனடாவில் இயங்கிவரும் "இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம்-கனடா" நடத்திய "வர்த்தக தீபம்" சிறப்பாக நடைபெற்றது.

விழாவின் ஆரம்பத்தில் சங்கத்தின் தலைவர் திரு கேதா நடராஜா தலைமை உரையாற்றினார்.

இந்த விழாவில் வர்த்தகத்துறையில் கனடாவில் சாதனைகள் படைத்த வண்ணம் மனித நேயப் பணிகள் ஆற்றிவரும் சிலருக்கு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றன. இங்கே காணப்படும் படத்தில் கனடிய தமிழ் வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும் வெள்ளி விழாவைக் கொண்டாடிய வர்த்தகப் பிரமுகருமான சாந்தா பஞ்சலிங்கம் அவர்கள் மேடையில் கௌரவிக்கப்பெறுவதைக் காணலாம். (பின் பக்கம் விபரமான செய்தி)




Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX COMMUNITY

JENITA AREVIN
BROKER
DOWNTOWN SPECIALIST
416.320.3201
JENITA@AREVIN.CA
ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
ACCOUNTING
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

ANUJA KUMARASAMY
வீடு வாங்க விற்க...
647-267-7482
RE/MAX REALTRON TEAM

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் சச்சிதானந்தன்


2023
Happy
NEW
Year
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
Logan Kanapathi
MPP Markham–Thornhill
Tel: 905-305-1935
logan.kanapathico@pc.ola.org

உதயன் கதிரோட்டம்

# இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளை மறைக்க தேர்தல் "பூச்சாண்டி' காட்டும் அரசும் அரசியல்வாதிகளும்...

இலங்கையில் கடந்த வருடம் தோன்றிய பொருளாதார நெருக்கடியின் உச்சக் கட்டம் இன்னும் தணிந்து போகாத நிலையில் அங்கு அரசியல்வாதிகளும் உயர் அரச அதிகாரிகளும் தங்கள் சலுகைகளையும் ஊதியங்களையும் சன்மானங்களையும் பெற்று எவ்வித இடையூறும் அற்ற வாழ்க்கையை மேற்கொண்டு வருகின்றார்கள். அவர்களில் பெரும்பான்மைச் சிங்களவர்கள் மட்டுமல்ல தமிழ் அரசியல்வாதிகளும் முஸ்லிம் அரசியல்வாதிகளும் இந்த அரசின் வாய்ப்புக்கள் வசதிகள் அனைத்தையும் அனுபவிக்கின்றனர்.

எனவே இவற்றை தொடர்ச்சியாக அனுபவிக்கும் வகையில் திட்டங்கள் காய் நகர்த்தப்படுகின்றன என்ற செய்திகள் வெளியாகியுள்ளன. மக்களை திசை திருப்பு வகையிலும் பொருளாதார நெருக்கடிகளின் பாரத்தை தேர்தல் செலவுகளில் காட்டுவதற்கும் அனைத்து தரப்பினரும் தந்திரமாக செயற்பட ஆரம்பித்துள்ளார்கள். அவர்களுக்கு அடித்தட்டு மக்களின் துன்பங்கள் மற்றும் வறுமை போன்றவற்றை பற்றிய அக்கறையே இல்லாமல் மீண்டும் தாங்களும் தங்கள் சகாக்களும் அரசியல் பரப்பில் உள்ள அனைத்து தர பதவிகளையும் பெற்று பிரச்சனைகள் எதுவுமின்றி வாழுவதற்காய் அத்திவாரம் இட்டுள்ளதாகத் தெரிகின்றுத.

தற்போது தேர்தல் பரபரப்பொன்று உருவாகியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. அதாவது உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் புதிய ஆண்டில் நடைபெறுமென்று ஊகங்கள் உலவுகின்றன. அத்தேர்தலை எதிர்கொள்ளும் விதத்தில் அரசியல் கட்சிகள் தம்மைத் தயார்படுத்தத் தொடங்கியிருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. இந்த பரபரப்பில் சாதாரண மக்களும் ஏழைகளும் தங்கள் பிரச்சனைகளை மறந்து தாங்கள் தலைவர்கள்' என எண்ணுகின்றவர்களுக்காக வாக்கு வேட்டை ஆடப் புறப்படுவார்கள். அவ்வாறு தேர்தல் பிரச்சார வேலைகள் செய்யும் சாதாரண மக்களுக்கு ' பிச்சை' போடுவது போன்று சன்மானங்கள் வழங்கப்படும் என அறியப்படுகின்றுத.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படப் போவதாக உத்தியோகபூர்வமாக எதுவித அறிவித்தலும் வெளியிடப்படவில்லை. ஆனால் ஊகங்களின் அடிப்படையிலேயே இது தொடர்பான செய்திகள் பொதுவெ-ளியில் உலாவருகின்றன. இன்னும் ஓரிரு மாதங்களுக்குள் அத்தேர்தல் நடத்தப்படக் கூடுமென்று ஊகங்கள் மாத்திரமே உலவுகின்றன.

நாட்டில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அத்தேர்தல் உரிய நேரத்தில் நடத்தப்படவில்லை. அத்தேர்தல் நடத்தப்பட வேண்டுமென ஒருசாரார் கோருகின்றனர். ஆனால் மற்றொரு தரப்பினரோ நாட்டின் இன்றைய நிலையில் எந்தவொரு தேர்தலும் நடத்தப்படுவது உசிதமல்ல என்று வலியுறுத்துகின்றனர்.

இலங்கையில் மிக மோசமான பொருளாதார நெருக்கடி நிலவியதால் மக்கள் அனைவருமே பெரும் துன்பத்தை அனுபவித்தனர். அவ்வாறான பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு தற்போதுதான் படிப்படியாக மீண்டெழுந்து வர முயலுகிறது. ஆனால் தவறான ஒரு ஜனாதிபதி பதவியில் அமர்ந்திருப்பதனால் காலங்கள் கடந்தும் நாட்டின் கஸ்டங்கள் நீங்குவதாகத் தெரியவில்லை என தொழிற்சங்கத் தலைவர்களும் சமூகத் தொண்டர்களும் குரல் எழுப்பி வருகின்றனர்.

மேலும் இலங்கையின் திறைசேரி தற்போது போதிய நிதியின்றிக் காணப்படுகின்றது. அத்தியாவசிய சேவைகளுக்கு நிதி ஒதுக்குவதற்கே சிரமப்படுகின்ற நிலைமை உள்ளது. இவ்வாறான பொருளாதார நெருக்கடி நிலவுகின்ற போது, தேர்தலொன்றை நடத்துவதென்பது வீணான நிதிவிரயத்தை ஏற்படுத்துமென்பதே நாட்டின் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டோரின் வலியுறுத்தலாக உள்ளது.

அரசுக்கு எதிரான தரப்பினரே உள்ளூராட்சித் தேர்தலை நடத்துமாறு கோருகின்றனர் என்று சொல்லப்பட்டாலும் ஆட்சியில் உள்ளவர்களும் எதிர்க்கட்சிகளில் உள்ளவர்களும் ஒரே விதமான மனநிலை கொண்டவர்களாக உள்ளார்கள் என்பதே பொது மக்களின் எண்ணமாக உள்ளதை அறிந்து கொள்வதற்கு ஊடகங்களுக்கு கூட ஆர்வம் இருப்பதாகக் தெரியவில்லை.

நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலவுகின்ற இவ்வேளையில், இச்சந்தர்ப்பத்தை சாதகமாகப் பயன்படுத்தி மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளலாமென எதிரணியினர் எண்ணுவதாகத் ரணில் தரப்பினர் கூறி வந்தாலும் அதுவும் ஒரு ஏமாற்று வேலை என்பதை மக்கள் புரிந்து வைத்துள்ளார்கள். அதுதவிர, தேர்தலுக்காக பெருமளவு நிதியைச் செலவ-டுவதால் நாட்டில் பொருளாதார நெருக்கடி மேலும் மோசமடையுமென்றும், அதன் மூலம் அரசு மீது மக்களுக்கு வெறுப்பை தேடித்தரும் என்பதும் எதிர்பார்த்த ஒன்றாகும். ஆனால் தகுதியற்ற ஜனாதிபதியாகத் விளங்கும் ரணில் அவர்கள் தனது சுயவிமர்சனம் செய்து கொள்ள ஆயத்தமாக இல்லை என்பதும் வெளிப்படையாக தெரிகின்றது.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான ஆயத்தங்களில் ஈடுபடத் தொடங்கியுள்ளதைக் காண முடிகின்றது. வடக்கு, கிழக்கு தமிழர்களின் அரசி-யலைப் பொறுத்தவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தவிர்க்க முடியாததொரு அரசியல் கூட்டணியாகும். தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளென்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பைக் குறிப்பிட்டாலும் அவர்களுக்கும் மக்கள் ஆதரவு குறைந்து வருவதை காணக்கூடியதாக உள்ளது. எனினும் அரசாங்கத்தை காப்பாற்றும் வகையில் தகுதியற்ற ஜனாதிபதியான ரணிலையும் காப்பாற்றும் தந்திரத்தைத் தான் தமிழ்த் தேசி-யக் கூட்டமைப்பு செய்யும் என்பதும் தமிழ் மக்களுக்கு நன்கு தெரிந்த உண்மையாகும்

இது இவ்வாறிருக்க. தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்திருந்த அரசியல் கட்சிகள் மீண்டும் ஒன்றுசேரப் போவதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்கள் வெளிவருகின்றன. அத்தகவல்கள் எத்தனை தூரம் உண்மையென்பது இதுவரை தெரியவரவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்திருந்த அரசியல் கட்சிகள் மீண்டும் ஓரணியில் ஒன்றுசேர்வது வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு உண்மையிலேயே மகிழ்ச்சியளிக்குமென்பதில் சந்தேகம் கிடையாது. ஆனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அரசாங்கத்திற்கும் ரணிலிற்கும் 'முண்டு'கொடுக்கும் வேலையைத் தான் தொடர்ந்து செய்து வருகின்றது என்பதால் இந்த ஒற்றுமை சாத்தியமில்லை என்றே தமிழ் மக்கள் முடிவுகள் எடுக்கத் தொடங்கிவிட்டார்கள் என யாழ்ப்பாணத்திலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

Canada

We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## கனடா சித்தன்கேணி ஒன்றியத்தின் 28ஆவது குளிர் கால ஒன்றுகூடலும் கலைவிழாவும்

கனடா சித்தன்கேணி ஒன்றியத்தின் 28ஆவது குளிர் கால ஒன்றுகூடலும் கலைவிழாவும் எதிர்வரும் டிசம்பர் 30ம் திகதி வெள்ளிக்கிழமை Rough River Community Center, Markham என்ற இடத்தில் மாலை 5:30 மணிமுதல் நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகிறது.

அன்றயதினம் பிள்ளைகளின் பல விதமான கலை நிகழ்ச்சிகளும், பரிசளிப்பு நிகழ்வும், இரவு விருந்தும் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் அனைவரும் கலந்து, உங்கள் உறவுகள் நண்பர்களை சந்தித்து மகிழ அன்புடன் அழைக்கின்றனர். உங்கள் வரவை எதிர்பார்க்கும் நிர்வாகத்தினர்.

சித்தன்கேணி ஒன்றியம் - கனடா.

**மேலதிக விபரங்களுக்கு:**

| | |
|---|---|
| **மணிகண்டன்:** | (416) 844-0706 |
| **லிசா:** | (416) 838-3239 |
| **குமுதினி:** | (647) 782-1977 |

## ஸ்காபுறோ — ஆதிபராசக்தி குருமன்றத்தில் புது வருடச் சிறப்புப் பூஜை



ஸ்காபுறோ - நாஸ்ரின் வீதியில் அமைந்துள்ள ஆதிபராசக்தி குருமன்றத்தில் எதிர்வரும் 01-01-2023 ஞாயிற்றுக்கிழமையன்று காலை 9.00 மணி தொடக்கம் புது வருடச் சிறப்புப் பூஜை நடைபெறும் என அறிக்கப்படுகின்றது. தொடர்புகளுக்கு 647 436 9647 என்னும் இலக்கத்தை அழைக்கவும்

**முதியவர் பராமரிப்பாளர் தேவை**

மிஸ்ஸிஸ்ஸாகாவில் வீட்டில் இருக்கும் வயதான பெண்மணி ஒருவரை காலை 10 மணியில் இருந்து மாலை 6 மணிவரை கவனித்துக்கொள்வதற்கு பெண் உதவியாளர் ஒருவர் உடனடியாக தேவைப்படுகிறார். தகுந்த சம்பளம் வழங்கப்பெறும்.

**தொடர்புகட்கு:**
(416) 725-6167

**மணமகன் தேவை**

யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட, கனேடிய பிரஜாவுரிமை பெற்ற இந்து உயர் வேளாளர் குல மகளுக்கு பெற்றோர் தகுந்த வரன் தேடுகின்றனர். உயரம் 5 அடி 4 அங்குலம். வயது 33. Completed Doctor of Medicine (Caribbean International Medical University) – Awaiting for Residency Assignment Proposal from Canada, USA, UK & Sri Lanka will be considered.

**தொடர்புகட்கு:** (416) 282-5379 **அல்லது** (416) 953-8297
Email: Kandiah4u@hotmail.com



உலக செய்திகள்
World News

# பேரழிவில் சீனா.. தினமும் 10 லட்சம் பேருக்கு கொரோனா.. மருந்துகள் அனுப்ப தயாரான இந்தியா



சீனாவில் தினமும் 10 லட்சம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டு வரும் நிலையில் 5 ஆயிரம் பேர் இறந்து வருகின்றனர். இதனால் அங்கு மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தான் சீனாவின் பகையை மறந்து உதவி செய்ய இந்தியா முன்வந்துள்ளது. அதன்படி காய்ச்சல் மருந்துகளான இப்யூபுருபன், பாராசிட்டாமாலை சீனாவுக்கு ஏற்றுமதி செய்ய இந்தியா தயாராக உள்ளது. 2019 இறுதியில் சீனாவில் இருந்து புறப்பட்ட கொரோனா வைரஸ் கடந்த இரண்டரை ஆண்டுகளாக உலகம் முழுவதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பல கோடி பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்ட நிலையில் கொத்து கொத்தாக மக்கள் பலியாகினர்.

இந்நிலையில் தான் கடந்த ஓராண்டாக கொரோனா பாதிப்பு என்பது இந்தியா உள்பட பல நாடுகளில் குறைந்து வந்தது. இந்நிலையில் தான் தற்போது சில நாடுகளில் கொரோனா பாதிப்பு என்பது அதிகரிக்க தொடங்கி அதிர்ச்சியளித்துள்ளது.

அதன்படி சீனா, அமெரிக்கா, தென்கொரியா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளில் கொரோனா பாதிப்பு என்பது அதிகரிக்க தொடங்கி உள்ளது. குறிப்பாக சீனாவில் இதுவரை இல்லாத அளவுக்கு ஓமிக்ரான் உருமாறிய பிஎப் 7 வைரஸால் பாதிப்பு என்பது தொடர்ந்து அதிகரித்து வருகிறது. சீனாவில் இப்போது தினமும் 10 லட்சம் பேருக்கு கொரோனா உறுதி செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது. மேலும், தினசரி 5,000 பேர் வரை கொரோனாவால் உயிரிழப்பதாக சொல்லப்படுகிறது. சீனா மர்மதேசமாக உள்ளதால் அங்கிருந்து அதிரப்பூர்வ தகவல் வெளியிடாமல் மறைக்கப்படும் நிலையில் சுகாதார நிபுணர்கள், சர்வதேச பத்திரிகைகள் சீனாவின் நிலையை கணித்து இந்த தகவலை கூறியுள்ளன.

சீனா எதிர்பாராத நிலையில் கொரோனா பாதிப்பு என்பது தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால் மருத்துவமனைகள் நிரம்பி வழிகின்றன. குறிப்பாக ஐசியூவில் ஏராளமானவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பல பேருக்கு மருத்துவமனையில் படுக்கை இல்லாத சூழல் ஏற்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. இது ஒருபுறம் இருக்க சீனாவில் மாத்திரை, மருந்துகள் தட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. குறிப்பாக காய்ச்சல் தடுப்பு மருந்துகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால் மரணங்களும் நிகழ்வதாக அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது.

இந்நிலையில் தான் இந்தியாவை பகையாளியாக நினைக்கும் சீனாவுக்கு மனிதாபிமானம் அடிப்படையில் உதவி செய்ய இந்தியா முன்வந்துள்ளது. அதன்படி காய்ச்சல் மருந்துகளான இப்யூபுருபன் மற்றும் பாராசிட்டமால் ஆகியவற்றை ஏற்றுமதி செய்ய தயாராக உள்ளதாக இந்தியா சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக இந்திய மருந்து ஏற்றுமதி கவுன்சிலின் தலைவரான சாஹில் முன்ஜால் தெரிவித்துள்ளார். உலகில் ஜெனரிக் மருந்துகளை தயாரிக்கும் நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ள நிலையில் தான் இக்கட்டான சூழலில் சீனாவுக்கு உதவ இந்தியா முன்வந்துள்ளது. மேலும் இதுபற்றி இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் அரிந்தம் பாக்சி, "சீனாவின் கொரோனா பாதிப்பு நிலைமையை கண்காணித்து வருகிறோம். நாம் எப்போதும் உலக நாடுகளில் மருந்தகமாக செயல்பட்டு வருகிறோம். இந்தியா சார்பில் உதவி செய்ய தயாராக இருக்கிறோம்" என தெரிவித்துள்ளார். இருப்பினும் கூட டெல்லியில் இருந்த சீன தூதரகம் சார்பில் இதுபற்றி எந்த பதிலும்.

Pharmexcil அறிக்கையின்படி 2021-2022ம் ஆண்டில் சீனாவுக்கு இந்தியா குறைந்த அளவில் மட்டுமே மருந்து ஏற்றுமதி செய்துள்ளது. அதாவது இந்தியாவின் மருந்து ஏற்றுமதியின் மொத்த அளவில் சீனாவுக்கு என்பது வெறும் 1.4 சதவீதம் தான். இந்தியா அமெரிக்காவுக்கு தான் அதிகளவில் மருந்துகளை அனுப்பி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# சீனாவில் கொரோனா தாக்கம் வீழ்ச்சி? இந்தியாவில் புதிய அலை உருவாகாது மருத்துவ நிபுணர்கள் நம்பிக்கை



சீனாவில் கொரோனா தாக்கம் வீழ்ச்சி அடைந்து இருப்பதாக அந்நாடு அறிவித்துள்ள நிலையில், இந்தியாவில் புதிய அலையாக பரவ வாய்ப்பு இல்லை என்று மருத்துவ நிபுணர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

சீனாவில் பரவி வரும் பி.எப்-7 மற்றும் மூன்று வகை வைரஸ்கள் உலக நாடுகளையே அச்சுறுத்தும் வகையில் மாறி விட்டன.

ஒமைக்ரானின் மரபணு மாற்றங்களான 4 வைரஸ்கள் ஒன்றிணைந்து சீனாவில் இந்த மாதம் தொடக்கத்தில் இருந்து அதிகரித்த கொரோனா தாக்கம் தற்போது மெல்ல மெல்ல வெளிநாடுகளுக்கும் பரவி வருகிறது.

### சீனாவில் குறைகிறது

சீனாவை மீண்டும் பயமுறுத்திய புதிய கொரோனா பரவல் 10 நாட்களுக்கு முன்பு உச்சத்தை தொட்டு தற்போது குறையத் தொடங்கி இருக்கிறது.

அதே சமயத்தில் அமெரிக்காவிலும், ஐரோப்பிய நாடுகளிலும் அந்த வைரஸ் தாக்கம் தற்போது சற்று அதிகரித்துள்ளது.

கடந்த 3 ஆண்டுகளில் சர்வதேச அளவில் கொரோனா பரவல் உச்சம் தொட்டதை ஆய்வு செய்த சர்வதேச நிபுணர்கள் புதிய கொரோனாவால் மிகப்பெரிய பாதிப்புகள் வர வாய்ப்பு இல்லை என்று உறுதிபடத் தெரிவித்து உள்ளனர்.

### ஜனவரியில் சற்று அதிகரிக்கும்

இந்தியாவிலும் கடந்த கால கொரோனா புள்ளி விவரங்களின் அடிப்படையில் தற்போதைய பி.எப்-7 வைரஸ் தாக்கம் எப்படி இருக்கும் என்று எய்ம்ஸ் மருத்துவமனை மூத்த மருத்துவ நிபுணர்கள் ஆய்வு செய்து தகவல்களை வெளியிட்டு உள்ளனர்.

அதன்படி அடுத்த மாதம் (ஜனவரி) இந்தியாவில் கொரோனா தாக்கம் சற்று அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

அதே சமயத்தில் இந்த அதிகரிப்பு புதிய கொரோனா அலையாக மாற வாய்ப்பே இல்லை என்றும் மருத்துவ நிபுணர்கள் உறுதிபடத் தெரிவித்துள்ளனர்.

இதற்கு முன்பு கொரோனா தாக்கம் வெளிநாடுகளில் அதிகரித்த போதெல்லாம் 30 முதல் 35 நாட்களுக்குள் அதன் பிரதிபலிப்பு இந்தியாவில் எதிரொலித்தபடி இருந்தது.

இதன் அடிப்படையில் பார்த்தால் அடுத்த மாதம் இந்தியாவில் பி.எப்-7 ரக வைரஸ் சற்று அதிகமாக மக்களிடையே பரவக்கூடும். அதன் அறிகுறிகள் முன்பு போல மிக பயங்கரமாக இருக்காது. சாதாரண ஜலதோஷம் போலத்தான் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வீரியம் குறைவு

பி.எப்-7 உள்ளிட்ட தற்போது பரவிக் கொண்டிருக்கும் 4 விதமான வைரஸ்கள் ஒமைக்ரான் தொடக்க கால வைரஸ்கள் போல சக்தி வாய்ந்தவை அல்ல. தற்போதைய வைரஸ்கள் அனைத்தும் வீரியம் குறைந்தே பரவி வருகின்றன.

எனவே இது புது கொரோனா அலையாக உருவெடுக்காது என்று மூத்த மருத்துவ நிபுணர்கள் தெரிவித்து உள்ளனர்.

இந்நிலையில், தற்போது கொரோனா தாக்கத்தில் இருந்து மீண்டுள்ள சீனா கட்டுப்பாடுகள் அனைத்தையும் நீக்கி விட்டது. வெளிநாட்டு பயணிகளுக்கு இருந்த கட்டுப்பாடுகளையும் விலக்கி இருக்கிறது.

இதன் மூலம் கொரோனா தாக்கம் வீழ்ச்சி அடைந்து இருப்பதை சர்வதேச அளவில் சீனா உறுதிப்படுத்தி இருக்கிறது.

சீனாவைத் தொடர்ந்து சில நாடுகளில் பி.எப்-7 வைரஸ் பரவினாலும் இந்தியாவில் அதன் தாக்கம் சுத்தமாக இல்லை என்ற நிலைதான் தற்போது உள்ளது.

### பி.எப்-7 பாதிப்பு இல்லை

கடந்த வாரத்தில் வெளிநாடுகளில் இருந்து வந்த பயணிகளில் 6 ஆயிரம் பேரிடம் சோதனை அடிப்படையில் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த 6 ஆயிரம் பேரில் 38 பேருக்கு மட்டும்தான் லேசான கொரோனா தாக்கம் இருந்தது. அந்த 38 பேருக்கும் பி.எப்-7 ரக வைரஸ் பாதிப்பு இல்லை என்பது ஆய்வுகளில் உறுதிப்படுத்தப்பட்டது.

இதன் மூலம் இந்தியாவில் புதிய வைரஸ் பரவல் இல்லை என்பதும் நிம்மதிப் பெருமூச்சு விட வைத்துள்ளது. என்றாலும் வெளிநாடுகளில் புதிய வகை கொரோனா பரவுவதால் இந்தியாவில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் மருத்துவ நிபுணர்கள் அறிவுறுத்தி உள்ளனர்.

தற்போது அமெரிக்கா, ஜப்பான் நாடுகளில்தான் புதிய கொரோனா பாதிப்பு அதிகரித்தபடி உள்ளது. அடுத்த 30 நாட்களில் இந்தியர்கள் முன்னெச்சரிக்கையுடன் சுய கட்டுப்பாட்டை கடைப்பிடித்தால் இந்தியாவிற்குள் புதிய கொரோனா பரவலை முற்றிலுமாக தடுத்து நிறுத்த முடியும் என்றும் மருத்துவ நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் தற்போது 3,468 பேர் கொரோனாவுக்கு சிகிச்சை பெற்று வருகிறார்கள். பி.எப்-7 ரக வைரஸ் பாதிப்பால் யாரும் தீவிர சிகிச்சை பிரிவில் இல்லை. எனவே புதிய அலை வர வாய்ப்பு இல்லை என்று மருத்துவ நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

என்றாலும் நாடு முழுவதும் 20 ஆயிரம் மருத்துவமனைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

புதிய வகை கொரோனாவை எதிர்கொள்ள 1 லட்சத்து 70 ஆயிரம் டாக்டர்கள், 3 லட்சத்து 20 ஆயிரம் நர்சுகள், 1 லட்சத்து 60 ஆயிரம் மருத்துவ பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு இருக்கிறது.


Sapphire Banquet & Catering

Specializing in Videography & Photography

- Anniversary Party
- Birthday Party
- Bridal Shower
- Engagement Party
- and more...
- Family Get-together
- Graduation Party
- Religious Ceremonies
- Wedding Showers

SHIVA SUBRAMANIAM
(647) 406-4868

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மன்னாரில் மீண்டும் "அம்மாச்சி உணவகம்" – ஆர்வமுள்ளோரை தொடர்பு கொள்ள கோரிக்கை



மன்னார் மதவாச்சி பிரதான வீதியில் நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள அம்மாச்சி என்ற பாரம்பரிய உணவகத்தை மீள இயங்கச் செய்வதற்கான நட வடிக்கையை விவசாய பணிப்பாளர் அலுவலகம் முன்னெடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெளி மாவட்டங்களிலிருந்து மன்னார் பகுதிக்கு வருவோருக்காகவும் மற்றும் மன்னார் மாவட்ட மக்கள் பாரம்பரிய உணவு வகைகளை உண்டு மகிழவும் 2018 ஆம் ஆண்டு முருங்கன் பிரதான வீதியில் பாரம்பரிய உணவகமான அம்மாச்சி உணவகம் விவசாய திணைக்களத்தால் திறந்துவைக்கப்பட்டிருந்தது.

ஆனால் கொவிட் தொற்று நோய் காலப்பகுதியில் இவ் அம்மாச்சி உணவகம் மூடப்பட்டபின் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இவ் உணவகம் தொடர்ந்து மூடப்பட்டு வந்தது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கையில், தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு முருங்கன் பகுதி அம்மாச்சி உணவகம் மீண்டும் புதுப் பொலிவுடன் பாரம்பரிய உணவகமாக இயங்க உள்ளது.

அம்மாச்சி உணவகத்துடன் இணைந்து பயணிப்பதற்கு சமையல் மற்றும் வியாபாரம் செய்வதில் ஆர்வம் உள்ள அமைப்புகளைச் சார்ந்தவர்களும் மற்றும் தனிப்பட்ட பெண்களிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆர்வமுள்ளோர் முருங்கன் விவசாய போதனாசிரியர் அலுவலகம் 0772911198, 0765459436 பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் உயிலங்குளம் 0776614703, 0776640526 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளும்படியும் வேண்டப்பட்டுள்ளனர்.

**- மன்னார் நிருபர்**



# மன்னார் தேசிய உப்பு நிறுவனத்திற்கு கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தஸாநாயக்க விஜயம்

மன்னாருக்கு வருகை தந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தஸ ாநாயக்க வெள்ளிக்கிழமை (23) காலை மன்னார் பெரிய கடை பகுதியில் அமைந்துள்ள தேசிய உப்பு நிறுவனத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன் போது இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கே. திலீபன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். இதன் போது தேசிய உப்பு நிறுவனத்தின் செயற்பாடுகள் மற்றும் உற்பத்தி தொடர்பாக கேட்டறிந்து கொண்டதோடு,உப்பு உற்பத்தி யையும் பார்வையிட்டார்.

மேலும் அங்கு மேற்கொள்ளப்பட்ட வேண்டிய ஏனைய நடவடிக்கை குறித்தும் கலந்துரையாடினர்.

இதன் போது உப்பு கூட்டுத்தாபனத்தின் தலைவர் கலந்து கொண்டதோடு, மன்னார் தேசிய உப்பு நிறுவனத்தின் அதிகாரிகளும் பணியாளர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# மன்னாரில் கர்ப்பிணி தாய்மார்களுக்கான போசாக்கு பொதிகள் வழங்கி வைப்பு

மன்னார் மாவட்டத்தில் கர்ப்பிணி தாய் மார்களின் நலனை கருத்தில் கொண்டு தெரிவு செய்யப்பட்ட கர்ப்பிணி தாய்மார்களுக்கான போசாக்கு பொதி மற்றும் மகப்பேற்று உபகரணங்கள் வெள்ளிக்கிழமை (23) காலை மன்னார் மெசிடோ நிறுவன அலுவலகத்தில் அதன் பணிப்பாளர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.




பொருளாதார நெருக்கடி காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்ட கர்ப்பிணி தாய் மார்களின் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தினால் போசாக்கு பொதிகள், மகபேற்று உபகரணங்கள், சுகாதார உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அதே நேரம் மன்னார் மாவட்டத்தில் உயிலங்குளம் பகுதியில் இயங்கி வரும் வன்முறையால் பாதிக்கப்படும் சிறுவர்கள், பெண்களை பராமரிக்கும் இல்லத்திற்கு அவசர தேவையை கருத்தில் கொண்டு அவர்களுக்குமான சுகாதார போசாக்கு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

**- மன்னார் நிருபர்**





# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker
Cell : 416-624-4843
எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# சிறப்பாக இடம்பெற்ற பேசாலை புனித மரியாள் ஆரம்ப பாடசாலை மாணவர்கள் கௌரவிப்பு

மன்னார் வலய கல்விப் பணிமனைக்குட்பட்ட பேசாலை புனித மரியாள் ஆரம்ப பாடசாலை மாணவர்கள் கௌரவிப்பு மற்றும் ஒளி விழா நிகழ்வு வெள்ளிக்கிழமை (23) பாடசாலையில், பாடசாலை அதிபர் செபஸ்டியான் ராஜேஸ்வரன் பச்சேக் தலைமையில் இடம்பெற்றது.

வடக்கு மாகாணத்தில் 600 மாணவர்களை கொண்ட கல்வி செயல்பாட்டில் தொடர்ந்து பல சாதனைகளை தக்க வைத்து வரும் குறித்த பாடசாலை நாட்டில் ஏற்பட்ட கொவிட் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக பல நிகழ்வுகள் முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் 2019ம், 2020ம், 2021ம், ஆண்டுகளில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்கள் 66 பேர் உட்பட ஏனைய கல்வி செயல்பாடுகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் உட்பட 250 பேர் சான்றிதழ்கள், கேடயங்கள், நினைவு சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலா நாதன், மன்னார் பிரதேச சபை உப தவிசாளர் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு மாணவர்களை கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# தமிழரசுக்கட்சியின் முல்லைத்தீவு மாவட்டக்கிளைத் தெரிவு சுமூகமாக இடம்பெற்றது



இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முல்லைத்தீவு மாட்டக்கிளையின் நிர்வாகத் தெரிவுக்கூட்டம் 24.12.2022 அன்று இடம்பெற்றது.

முல்லைத்தீவு - மாங்குளம், பொதுச்சந்தைக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள புதுக்குடியிருப்பு பிரதேசசபைக்குரிய மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த கூட்டமானது, இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நிர்வாகச் செயலாளர் சூசைப்பிள்ளை சேவியர் குலநாயகத்தின் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட கிளைக்கு புதிய தலைவர், செயலாளர், பொருளர், உபதலைவர், உபசெயலாளர், மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

அந்தவகையில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முல்லைத்தீவு மாவட்டக்கிளையின் புதிய தலைவராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவப்பிரகாசம் சிவமோகன் தெரிவுசெய்யப்பட்டதுடன், புதிய செயலாளராக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனும், புதிய பொருளாளராக தம்பிப்பிள்ளை யோகானந்தராசாவும் தெரிவுசெய்யப்பட்டார்.

நிகழ்வில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வில் ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

**- ஜெகதீஸ்வரன் டிஷாந்த்**

# தலைமன்னாரில் தொடர்ச்சியாக திருடப்பட்டு வரும் பாலன் குடில் சிற்பங்கள்



மன்னார் மாவட்டத்தில் தலைமன்னார் பகுதியில் கடந்த சில வருடங்களாக கிறிஸ்துமஸ் நாட்களில் அமைக்கப்படும் பாலன் குடில் சிற்பங்கள் திருடப்பட்டு வருவதாகவும். இந்த விடயம் தொடர்பாக தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், தலைமன்னார் மக்களால் சிறப்பாக கொண்டாடப்பட்டு வரும் விழாக்களில் ஒன்று கிறிஸ்து பிறப்பு நிகழ்வாகும். இந்நிகழ்வை ஆயத்தப் படுத்துமுகமாக கத்தோலிக்கர் தமது இல்லங்களிலும் வீதிகளிலும் பாலன் கொட்டில்கள் மற்றும் கிறிஸ்துமஸ் மரங்களை வடிவமைப்பது வழமையான ஒரு விடயமாகும்.

இவ்வாறு ஒவ்வொரு வருடமும் மார்கழி 24.12.2022 அன்று தலைமன்னார் மேற்கு மக்களினால் தமது பிரதான முச்சந்திக்கு அருகாமையில் பாலன் கொட்டில் மற்றும் கிறிஸ்மஸ் மரம் வைப்பது வழமையான ஒரு நிகழ்வாகும்.

இவ்வாறு அமைக்கப்பட்டுவரும் பாலன் கொட்டில்களில் உள்ள சிற்பங்களை திருடுவது கடந்த 2019ம் ஆண்டு உருவாக்கப்பட்ட பாலன் கொட்டிலில் இருந்து புனித சூசையப்பர் மற்றும் அன்னை மரியாளின் சிற்பங்கள் திருடப்பட்டிருந்தது.

கடந்த வருடம் தலைமன்னார் ஸ்ரேசன் ஆலயத்தில் வடிவமைக்கப்பட்டிருந்த பாலன் கொட்டிலில் இருந்த பாலன் இயேசுவின் திருச்சுரூபம் திருடப்பட்டிருந்தது.

அதே போன்று இவ் வருடம் பிரதான வீதியில் வைக்கப்பட்டிருந்த பாலகன் இயேசுவின் திருச்சுரூபம் திருடப்பட்டுள்ளது.

இச் செயற்பாடானது தலைமன்னார் ஸ்ரேசன் பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக தலைமன்னார் வாழ் கத்தோலிக்க மக்களுக்கு வேதனை அளித்துள்ளது.

இச் செயற்பாடானது இனம் மாதங்களுக்கு இடையில் முரண்பாடு தோற்று விப்பதற்காக குறிப்பிட்ட குழுவினர் மேற்கொண்டு வருகின்றனரோ? என்கிற சந்தேகம் ஏற்படுகிறது. இவ் விடயம் தொடர்பாக தலைமன்னார் மக்களினால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் சிறப்புற இடம்பெற்ற ஒளிவிழா!







முல்லை. மாவட்ட செயலக நலன்புரிச் சங்கத்தினரின் அனுசரணையுடன் 2022ம் ஆண்டுக்கான ஒளி விழா மாவட்ட செயலக பண்டார வன்னியன் மாநாட்டு மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (27) காலை 9.30மணிக்கு சிறப்புற இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளர் ம.கி வில்வராஜா தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில், மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

இதன்போது அளம்பில் பங்குத் தந்தை அருட்திரு. யூட் அமலதாஸ் அடிகளால் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பூசை வழிபாடுகள் பக்தி பூர்வமாக இடம்பெற்றதைத் தொடர்ந்து, ஆசியுரை நிகழ்த்தப்பட்டது.

குறித்த நிகழ்வில் கரோல் கீதம் இசைக்கப்பட்டு, மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்களின் பிள்ளைகள் மற்றும் மறைக் கல்வி மாணவர்கள் ஆகியோரின் ஆளுமைகளை வெளிப்படுத்துகின்ற பல்வேறுபட்ட கலை நிகழ்வுகளும் சிறப்புற இடம்பெற்றன.

மேலும் இந் நிகழ்வில் இறுதியில், கலைநிகழ்வுகளை நிகழ்த்திய மாணவர்களிற்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்) க.கனகேஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.குணபாலன், மாவட்டச் செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக நலன்புரிச் சங்கத் தலைவரும், மாவட்ட பொறியியலாளருமான எந்திரி S.கஜானந், கிளைத் தலைவர்கள், உத்தியோகத்தர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

**- ஜெகதீஸ்வரன் பிரஷாந்த்**

# உலக நாடுகளின் மத்தியஸ்தம் இல்லாமல் நடைபெறும் பேச்சுவார்த்தை காலத்தை வீணடிக்கும் செயலாகும் – சாள்ஸ் எம்.பி. தெரிவிப்பு



இந்தியா அமெரிக்கா பிரித்தானியா போன்ற ஏதாவது ஒரு நாட்டின் மத்தியஸ்தம் இல்லாமல் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்துவதில் எந்த பலனும் இல்லை. இது வெறுமனே காலத்தை கடத்தும் செயல்பாடு என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் வைத்து ஞாயிற்றுக்கிழமை (25) ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், தற்போது நாட்டினுடைய புதிய ஜனாதிபதி தமிழ் மக்களுக்கு உரிய தீர்வை நோக்கிய அறிவிப்பு அல்லது முன்மொழிவை அவர் பல இடங்களில் கூறி இருக்கிறார். அவர் கூறுவதற்கு சர்வதேச நாடுகளுடைய அழுத்தங்கள் காரணமாக இருக்கலாம்.

ஏனென்றால் இன்று இலங்கையில் ஏற்பட்டு இருக்கின்ற பொருளாதார நெருக்கடியை சர்வதேச நாடுகளுடைய உதவி இல்லாமல் இலங்கையால் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள முடியாது.

ஆகவே சர்வதேச நாடுகளை திருப்தி படுத்துவதற்கு நாட்டினுடைய ஜனாதிபதி இந்த முன் மொழிவை முன் வைக்கக் கூடும். ஆனால் என்னைப் பொருத்தவரையில் முதலில் தமிழ் கட்சிகள், வடக்கு கிழக்கில் இருக்கின்ற மத தலைவர்கள் ஒரு இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும்.

ஒவ்வொருவரும் வரைவு தொடர்பாக தீர்வு திட்டம் தொடர்பாக ஒவ்வொரு விதமாக கதைப்பது என்பது அவர்களது கட்சிகள் நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்று கதைக் கின்றார்களோ தெரியாது.

என்னை பொருத்தவரையில் தமிழர்களுடைய தீர்வு என்பது ஒட்டுமொத்த கட்சிகளும் முதலில் ஒரு இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும். இணக்கப்பாட்டுக்கு வந்ததன் பிற்பாடு அரசியல் யாப்பில் எப்படிப்பட்ட மாற்றங்கள் கொண்டு வந்தால் தமிழர்கள் இறைமையுடன் வாழ முடியும் என்ற ஒரு வரைபிற்கு வர வேண்டும்.

ஏனெனில் 1948 ஆம் ஆண்டிலிருந்து ஆட்சியாளர்களுடன் பேசிக் கொண்டிருக்கின்றோம். ஒப்பந்தங்கள் செய்யப்பட்டது. அவை கிழிக்கப்பட்டது. இந்திய இலங்கை ஒப்பந்தங்கள் கூட முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை.

ஆகவே வெறுமனே இலங்கை அரசாங்கத்துடன் பேசி தமிழ் மக்களுக்கு உரிய தீர்வை பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை எனக்கில்லை.

குறிப்பாக சர்வதேச நாடுகள் உடைய மத்தியஸ்தம் குறிப்பாக இந்தியா அமெரிக்கா அல்லது பிரித்தானியா இந்த மூன்று நாடுகளைச் சார்ந்த ஏதோ ஒரு நாடுகள் மத்தியஸ்தம் இல்லாமல் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை செய்வது என்பது காலத்தை கடத்துகின்ற செயலாகத்தான் இருக்கும்.

அந்த பேச்சுவார்த்தை மூலம் தமிழ் மக்களுக்கு உரிய இறைமை உடன் வாழக்கூடிய தீர்வு வரும் என்பது எனக்கு நம்பிக்கை இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர் (25-12-2022)**

# கடமையின் போது துப்பாக்கிதாரி ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்ட OPP பொலிஸ் உத்தியோகத்தர் Grzegorz Pierzchala

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள ஹேகர்ஸ்வில் என்னும் நகரத்தில் கடந்த செவ்வாய் கிழமை மதியம் கடமையில் இருந்தபோத சுட்டுக்கொல்லப்பட்ட 28 வயது மாகாணப் பொலிஸ் உத்தியோகத்தர் **Grzegorz Pierzchala** இனது மரணம் தொடர்பாக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளள ஒன்றாரியோ மாகாண பொலிஸ் தலைமை அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் கொல்லப்பட்ட உத்தியோகத்தர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணத்தை தழுவிய அன்று தான் தனது 10 மாத தகுதிகாண் காலத்தை கடந்ததற்கான அறிவிப்பை



தலைமை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொண்டதாகவும் இது தொடர்பாக அவர் மகிழ்ச்சியோடு தன் பணியைச் செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரது அகால மரணம் தொடர்பாக கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடொ மற்றும் ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் ஆகியோ-ர் இந்த படுகொலையானது தங்களுக்கு மிகுந்த அதிர்ச்சியைத் தந்துள்ளதாகவும் இந்த கொலை கண்டிக்கப்பட வேண்டியது என்றும் தெரிவித்துள்ளனர்.

**OPP** எனப்படும் ஒன்றாரியோ மாகாண பொலிஸ் சபையின் முக்கிய அதிகாரிகள் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் உத்தியோகத்தர் . **Grzegorz Pierzchala**, ஹால்டிமண்ட் என்னும் கிராமப் புற நகரத்தில், மதியம் 2:30 மணிக்குப் பிறகு, ஒரு வாகனத்தை பரிசோதிக்க முனைந்த போது சுடப்பட்டு, பின்னர் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது அவர் உயிர் பிரிந்தது என்று **OPP** பொலிஸ் சபையின் கமிஷனர் தோமஸ் கேரிக் அவர்கள் கூறுகையில், ஹால்டிமண்ட் என்னும் கிராமப் புறப் பகுதியில் உள்ள பொலிஸ் எல்லைப் பிரிவில் பணிபுரிந்த பியர்சாலா, கொல்லப்பட்ட உத்தியோகத்தர் வீதிப் பரிசோதனையின் போது கொல்லப்பட்டதாக சம்பவ இடத்திலிருந்த சாட்சிகள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து, 25 வயதுடைய ஆண் மற்றும் 30 வயதுடைய பெண் ஆகிய இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் காயங்களுடன் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் ஆனால் சந்தேக நபர்களுடனான விசாரணைகளை மேற்கொண்ட போது பியர்சாலா தனது ஆயுதத்தை எந்த சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தவில்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் கேரிக் தெரிவித்துள்ளார் .

கொல்லப்பட்ட இளைய வயது பொலிஸ் உத்தியோகத்தரின் இழப்பு தொடர்பாக கவலை தெரிவித்த மற்றுமொரு உத்தியோகத்தர் தனது செய்தியில் "இருபத்துஐந்து வயதில், அவர் ஒரு போலீஸ் அதிகாரியாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்த ஒரு மனிதர், மேலும் அவர் தனது கனவை நனவாக்கவும், எங்கள் சமூகத்தை பாதுகாப்பாக வைத்திருக்க தன்னால் முடிந்ததைச் செய்யவும் ஒரு சிறிய வாய்ப்பு கிடைத்தது," என்று எப்போது கூறி வந்தார். கனேடிய ஆயுதப்படையின் உறுப்பினர் ஒருவர் கொலையாளியின் துப்பாக்கிச் சூட்டுக்கு. துரதிஷ்டவசமாக அவர் இன்று இரையாகிப் போய் மாபெரும் தியாகத்தையும் செய்துள்ளார்." என்று தெரிவித்துள்ளார்.

செவ்வாய் மாலை செய்தியாளர் கூட்டத்தில் பேசிய **OPP** கொல்லப்பட்ட அதிகாரியைப் பற்றிப் பேசும்போது எட் சஞ்சுக் என்னும் உயர் பொலிஸ் அதிகாரி சற்று தடுமாறிய வண்ணம் திணறியபடி தனது கருத்துக்களைப் பகிர்ந்தார் என அறியப்படுகின்றது.

"நான் எனது பல வருட கால பொலிஸ் சேவையில். ஒருபோதும் எனது வார்த்தைகளை இழக்கவில்லை, ஆனால், இன்று நான் உண்மையில் வார்த்தைகளை இழக்கிறேன்," என்று அவர் கூறினார்.

" கொல்லப்பட்ட இளம் பொலிஸ் உத்தியோகத்தர் பியர்சாலா துணிச்சல் மிக்கவர் அவர் ஒரு அற்புதமான அதிகாரி, , மேலும் நீங்கள் கற்பனை செய்யக்கூடிய மிகப்பெரிய தங்கத்தை ஒத்த தனது இதயத்தை வைத்திருந்தார்" என்று செவ்வாயன்று தொலைபேசி பேட்டியில் சஞ்சுக் என்னும் பொலிஸ் உயர் அதிகார் தெரிவித்தார்.

"இது எங்கள் **(OPP)** குடும்பத்திற்கு ஒரு தீவிர இழப்பு, இந்த அதிர்ச்சிகரமான இழப்பைச் சமாளிக்க நாங்கள் குடும்பத்திற்கும் எங்கள் அதிகாரிகளுக்கும் நிச்சயமாக எதிர்காலத்தில் உதவுவதற்கு காத்திருக்கிறோம்."

மாலை 5:45 மணியளவில், துப்பாக்கிச் சூடு நடந்த சில மணிநேரங்களுக்குப் பிறகு, ஒன்றாரியோ மாகாண காவல்துறை அவசர எச்சரிக்கையை விடுத்தது, துப்பாக்கிச் சூடு நடந்த இடத்தில் இருந்து இரண்டு சந்தேக நபர்கள் தப்பி ஓடுவதைக் காணப்பட்டதை அடுத்து, அவர்களில் ஒருவர் ஆயுதம் ஏந்தியதாக நம்பப்படுவதாகக் கூறி, அனைத்துப் பகுதிவாசிகளையும் தங்கள் தங்கள் வீடுகளிலேயே இருக்குமாறு கேட்டுக் கொண்டு அறிக்கைகளை வெளியிட்டனர் எனினும் மேற்படி இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்ட சிறிது நேரத்திலேயே மெற்படி எச்சரிக்கை ரத்து செய்யப்பட்டது.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு யார்க் பல்கலைக்கழகத்தில் இளம் பொலிஸ் உத்தியோகத்தர் பியர்சாலாவின் மல்யுத்த பயிற்சியாளராக இருந்த டொராண்டோ காவல்துறை அதிகாரி ஷான் ஜெரிஸ், இளம் மாணவ-விளையாட்டு வீரர் வேலையைப் பற்றியும் அது எப்படி திறமையாக விளங்கியது என்றும் தனது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றமான குயின்ஸ் பார்க் வளாகத்தில் சிறப்புக் காவலராகப் பணிபுரிந்தபோது, பியர்சாலா அவர்கள் அனைவராலும் கவனிக்கப்பெறுகின்ற ஒருவராக விளங்கினார் என்றும் அவர் **OPP** க்கு விண்ணப்பிக்க வேண்டும் என்று அவருக்குத் தானே தெரியப்படுத்தியதாகவும் அவரது உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஒன்றாறியோ போலீஸ் கல்லூரியில் பட்டம் பெற்றபோது, கெரிஸ் தனது பேட்ஜை அவருக்கு வழங்க முடியும் என்று நம்பினார், ஆனால் கோவிட்-19 கட்டுப்பாடுகள் அதைத் தடுத்தன.

"அவரும் விட்டுக்கொடுப்பவர் அல்ல. அவர் செய்த எல்லாவற்றிலும் அவர் விடாமுயற்சியுடன் இருந்தார்."

"ஒரு போலீஸ் அதிகாரியாக உள்ளவர்கள் உதவவும், உலகை சிறந்த இடமாக மாற்றவும் விரும்புகிறார்கள். சிலர் அது நடக்க விரும்பவில்லை."

செப்டம்பர் முதல் மாகாணத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட நான்காவது போலீஸ் அதிகாரி பியர்சாலா ஆவார்.

இவ்வாறு தெரிவித்தார் ஒன்றாறியோ மாகாண காவல்துறை சங்கத் தலைவர் ஜான் செராசுலோ அவர்கள். அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில் , பியர்சாலாவின் மரணம், காவல்துறை அதிகாரிகள் தினமும் தங்களைத் தாங்களே ஆபத்தில் ஆழ்த்துவதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

"ஒன்றாறியோ மாகாணம் முழுவதும் அவர்கள் நாளொன்றுக்கு 24 மணி நேரமும், வாரத்தில் 7 நாட்களும், வருடத்திற்கு 365 நாட்களும் ஆபத்தான வேலையைச் செய்கிறார்கள். காவல்துறையில் வழக்கமான அழைப்பு என்று எதுவும் இல்லை என்பதை இந்தச் சூழ்நிலை எடுத்துக்காட்டுகிறது," என்று அவர் ஒரு அறிக்கையில் கூறினார்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில் " கொல்லப்பட்ட கிரெக்கின் சேவை மற்றும் தியாகம் ஒருபோதும் மறக்கப்படாது" என்றும் "வாழ்க்கையில் அவர் எப்போதும் நாயகனாக நினைவுகூரப்படுவார், மரணம் அல்ல. எங்கள் உறுப்பினர்கள் ஒன்றாறியோவின் குடிமக்களுக்கு சேவை செய்வதற்கும் பாதுகாப்பதற்கும் என்ற காரணங்களுக்காகவே அவர்கள் தினமும் பொலிஸ் பணிகளுக்கு செல்கிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

Thana Insurance Inc

NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 27 | 23 | 29 | 27 | 35 | 30 | 44 | 36 | 61 | 48 | 84 | 63 |
| 25 K | 37 | 33 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 | 148 | 105 |
| 50 K | 69 | 62 | 88 | 74 | 103 | 92 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 240 | 406 | 318 | N/A | N/A |
| 200 K | 260 | 231 | 338 | 282 | 398 | 353 | N/A | N/A | N/A | N/A | N/A | N/A |

20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 | 450 | 296 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | N/A | N/A | N/A | N/A |

INVESTMENTS




Protect
once
helps your life



LIFE INSURANCE
ஆயுட் காப்புறுதி
Thana Manickavasagar
Insurance Broker
Cell : 416-728-5772
Office : 416-519-3896
thana7@gmail.com www.thana.ca
fax : 647-547-8147
80 Nashndene Road ,#D218, Scarborough,ON,M1V 5E4


இந்தியா செய்திகள்
India News

# ஜெயலலிதா சிகிச்சையில் மறைப்பதற்கு ஒன்றுமில்லை என்கிறார் சசிகலா



ஜெயலலிதா மரணத்திலும் அவருக்கு அளிக்கப்பட சிகிச்சையிலும் மறைப்பதற்கு ஒன்றுமில்லை என சசிகலா கூறினார். அவர் மேலும் கூறியதாவது: ஜெயலலிதா சிகிச்சையில் எய்ம்ஸ் மற்றும் மாநில டாக்டர்கள் சிகிச்சை அளித்தனர். இது தொடர்பாகவும் டாக்டர்கள் அறிக்கை வெளியிட்டனர். விரைவில் டிஸ்சார்ஜ் ஆவோம் என டாக்டர்களுக்கு பரிசு பொருள் வழங்கிட ஜெயலலிதா தயாராக இருந்தார். இது தொடர்பான பரிசு பொருட்களும் ஆர்டர் செய்யப்பட்டன. வெளிநாட்டில் சிகிச்சை அளிக்க ஜெயலலிதா விரும்பவில்லை. அவரது சிகிச்சையில் மறைப்பதற்கு ஒன்றுமில்லை. மாநிலங்களில் கவர்னர் ஆதிக்கம் அதிகம் இருந்தது. இதில் பெண்கள் மீண்டு வருவது கஷ்டம். இதில் எந்த அளவிற்கு கஷ்டப்பட முடியுமா அவ்வளவு கஷ்டப்பட்டோம். தமிழக மக்களுக்கு நாங்கள் இருவரும் இணைந்து பணியாற்றினோம். இவ்வாறு அவர் கூறினார்.

# தனது காரையும், 1 கோடி ரூபாய் பணத்தையும் கட்சிக்கு கொடுத்தவர் நல்லகண்ணு



நல்லகண்ணு 98 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதைக் கண்டு அளவு கடந்த மகிழ்ச்சி அடைவதாகவும் நூறாண்டுகளை கடந்து அவர் வாழ வேண்டும் எனவும் வாழ்த்து தெரிவித்துள்ளார் வைகோ. இது தொடர்பாக வைகோ விடுத்துள்ள பதிவில் கூறியிருப்பதாவது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினரும், தேசிய கட்டுப்பாட்டுக் குழு தலைவருமான முதுபெரும் தலைவர் அண்ணன் ஆர்.நல்லகண்ணு அவர்கள் 98 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதைக் கண்டு அளவு கடந்த மகிழ்ச்சி அடைகிறேன். 25 ஆண்டுகள் விவசாய தொழிலாளர் சங்கத் தலைவராகவும், 13 ஆண்டுகள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளராகவும் சிறப்பாக கடமையாற்றிய அண்ணன் நல்லகண்ணு அவர்கள், பல்வேறு அடக்குமுறைகளை, சிறைத் தண்டனைகளை எதிர்கொண்ட போராளித் தலைவர் ஆவார்.

நெல்லை சதி வழக்கில் அவரைச் சிக்க வைத்து, அவருக்கு விலங்கு மாட்டி சித்ரவதை செய்து, அவரது மீசையையும், கன்னத்தையும் தீயிட்டுப் பொசுக்கி காவல்துறை வெறித்தனமாக நடந்து கொண்டதைக் கண்டு அவரது தாயார் மயக்கம் போட்டு கீழே சரிந்து விழுந்தார். இவரை மலை உச்சிக்கு கொண்டு சென்று கீழே உருட்டித் தள்ளி கொலைசெய்து விடுவதாக காவல்துறையினர் மிரட்டினாரகள். இவைகளுக்கெல்லாம் வளைந்து கொடுக்காமல், பாறையைப் போல துணிச்சலுடன் அந்த அடக்குமுறைகளை எதிர்கொண்ட தியாக வேங்கைதான் தோழர் நல்லகண்ணு.

அவரின் 80 ஆவது ஆண்டு பிறந்தநாள் விழாவின்போது, அவருக்காக கட்சி திரட்டிக் கொடுத்த ஒரு கோடி ரூபாய் நன்கொடையை கட்சிக்கே திருப்பி அளித்தார். தமிழ்ச் சான்றோர் பேரவை நிறுவனத் தலைவர் அருணாசலம் அவர்கள் கொடுத்த காரையும் கட்சிக்கே வழங்கினார். தமிழக அரசு அளித்த அம்பேத்கர் விருதுடன் கொடுத்த ஒரு லட்சம் ரூபாயையும் கட்சிக்கும், விவசாய தொழிலாளர் சங்கத்திற்கும் அன்பளிப்பாக வழங்கினார்.

அண்மையில் தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள், தகைசால் தமிழர் விருது அளித்து 15 இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்கியபோது, அந்தத் தொகையுடன் தனது பங்காக 5 ஆயிரத்தையும் சேர்த்து முதல்வரின் நிவாரண நிதிக்கே வழங்கினார் அண்ணன் நல்லகண்ணு. நதிநீர் உரிமைகளுக்காகவும், சுற்றுச் சூழலைக் காப்பாற்றவும், மணற் கொள்ளையைத் தடுத்து நிறுத்தவும் தொடர்ந்து போராடிக் கொண்டு வருபவர்தான் தோழர் நல்லகண்ணு.

இத்தகைய அரும்பெரும் குணங்களை பெற்று, தமிழகத்தின் மூத்த தலைவராக திகழ்ந்து, தமிழ் மக்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து குரல் கொடுத்து போராடி வரும் அண்ணன் நல்லகண்ணு அவர்கள் நூறாண்டுகளையும் கடந்து வாழ்வாங்கு வாழ வேண்டும் என வாழ்த்துகிறேன்.

# சென்னையை மீண்டும் சுனாமி தாக்கினால்...? 2 கி.மீ. தூரத்துக்கு கடல்நீர் புகுந்து பாதிப்பை ஏற்படுத்தலாம்



**அதிர்ச்சி தரும் ஆய்வு தகவல்கள்**

சென்னையை மீண்டும் சுனாமி தாக்கினால் நகருக்குள் 2 கி.மீ. தூரத்துக்கு கடல்நீர் புகுந்து பாதிப்பை ஏற்படுத்தலாம் என்று அதிர்ச்சி தரும் வகையில் ஆய்வு தகவல்கள் வெளிவந்துள்ளன.

**மறக்க முடியுமா?**

சுனாமி எனப்படும் ஆழிப்பேரலை கடந்த 2004ம் ஆண்டு டிசம்பர் 26ந் தேதி காலை ஏற்படுத்திய பேரழிவை காலத்துக்கும் நம்மால் மறக்க முடியாது. அந்த அளவுக்கு திடீரென சமத்ரா தீவில் கடலுக்குள் ஏற்பட்ட பூகம்பத்தால் சுனாமி சீறிவந்து இந்தியா உள்ளிட்ட 14 நாடுகளில் கரையோர பகுதிகளை வாரிச் சுருட்டி வீசியது. இதில் 2 லட்சம் பேருக்கு மேல் உயிரிழந்தனர்.

தமிழகத்தில் சென்னை முதல் கன்னியாகுமரி வரை கடலோரப் பகுதிகள் அனைத்தையும் சுனாமி ஆழிப்பேரலை துவம்சம் செய்தது.

எனினும், ராமேசுவரம் முதல் உவரி வரையிலான கடற்கரைப் பகுதிகளை மட்டும் இலங்கை இயற்கை அரணாக காத்தது. அதே நேரம் சுனாமி ஏற்படுத்திய பேரழிவை இலங்கை எதிர்கொண்டது. அங்கு மட்டும் 50 ஆயிரம் உயிர்கள் பலியாயின.

தமிழகத்தில் சுனாமியின் கோரத்தாண்டவத்திற்கு 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

2004ம் ஆண்டு டிசம்பர் 26-ந்தேதி சுனாமி தாக்குதல் ஏற்பட்டதை நினைவு கூர்ந்திடும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் சுனாமி நினைவு தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

**மீண்டும் சுனாமி வந்தால்...?**

இந்நிலையில், மீண்டும் சுனாமி தாக்குதல் ஏற்பட்டால் சென்னையையொட்டிய கடலோரப் பகுதிகளில் 2 கிலோ மீட்டர் தூரம் வரையில் கடல்நீர் ஊருக்குள் புகுந்து பாதிப்பை ஏற்படுத்தலாம் என ஆராய்ச்சியாளர்கள் அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளனர்.

சென்னையில் உள்ள தேசிய கடலோர ஆராய்ச்சி மையம், ஐதராபாத்தில் உள்ள இந்திய தேசிய கடல் தகவல் சேவை மையம் ஆகியவற்றின் ஆய்வில் மேற்கண்ட தகவல் தெரியவந்துள்ளது.

இந்த ஆய்வில் எந்தெந்த பகுதிகளில் மீண்டும் சுனாமி தாக்குதல் ஏற்பட்டால் எவ்வளவு பாதிப்பு ஏற்படும் என்பது பற்றிய தகவல்கள் தெரிவிக்கப்பட்டு உள்ளன.

கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள பகுதிகளில் சுமார் அரை கிலோ மீட்டர் தூரத்துக்கு கடல் நீர் உள்புகலாம் என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. நெமிலியில் இருந்து கடலூர் வரையிலான பகுதிகளும் பாதிப்புக்குள்ளாகும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாமல்லபுரம், கல்பாக்கம், பெரிய குப்பம் உள்ளிட்ட இடங்களில் 4 மீட்டர் வரையில் தண்ணீர் உட்புக வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

சென்னையில் ராயபுரம், கடற்கரை ரெயில் நிலையம், திருவல்லிக்கேணி, கலங்கரை விளக்கம், சாந்தோம் ஆகிய பகுதிகளிலும், நேப்பியர் பாலம், அடையாறு பாலம் ஆகியவற்றை சுற்றி உள்ள பகுதிகளிலும் கடல்நீர் உள் புகுந்து பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் ஆய்வில் கூறப்பட்டு உள்ளது.

இதேபோன்று இந்திய கடலோரப் பகுதிகளில் சுமார் 7500 கிலோ மீட்டர் தூரத்துக்கும் பல்வேறு நிலப்பரப்புகளின் அடிப்படையில் எச்சரிக்கை தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

2004ம் ஆண்டு சுனாமி தாக்குதல் ஏற்பட்டபோது கடலூர், நாகப்பட்டினம் போன்ற மாவட்டங்களில் 3 கிலோ மீட்டர் வரை கடல்நீர் ஊருக்குள் புகுந்து உள்ளது.

அப்போது சென்னையில் ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்கும் விசாகப்பட்டினத்தில் ஒரு மீட்டர் தூரத்துக்கும் மட்டுமே தண்ணீர் புகுந்தது. கடலை ஒட்டிய நிலப்பரப்பு சம தளமாக இருந்தால் கடல்நீர் உள் புகுவது அதிகமாக இருக்கும் என்றும் ஆய்வில் கணிக்கப்பட்டு உள்ளது.

அதே நேரத்தில் கரையில் இருந்து சற்று உயரமான பகுதிகளில் கடல் நீர் புகுவது குறைவாகவே உள்ளது என்றும் கண்டறியப்பட்டு உள்ளது.

கிழக்கு கடற்கரை சாலைப்பகுதியை பொருத்தவரையில் உத்தண்டி முதல் முட்டுக்காடு வரையிலும் பனையூர் பகுதியும் மீண்டும் சுனாமி ஏற்பட்டால் பாதிப்பை சந்திக்கும் என்பது தெரிய வந்துள்ளது.

இந்த பகுதியில் சுமார் 500 மீட்டர் தூரம் வரையில் தண்ணீர் ஊருக்குள் வரலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. மாமல்லபுரம், சலவன் குப்பம் பகுதிகளில் ஒரு கிலோ மீட்டர் தூரம் வரையில் கடல் நீர் ஊருக்குள் வரும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடலின் இயற்பியல் அம்சங்களை ஆய்வு செய்து என்னென்ன பாதிப்புகள் எந்தெந்த பகுதியில் ஏற்படலாம் என்பதை ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டு உள்ளனர். கடலுக்கு அடியில் சில இடங்களில் சாய்வான பகுதிகள் இருந்தால் அங்கு அதிக அளவு பாதிப்பு ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

**100 ஆண்டுகளுக்கு ஒருமுறை**

சுனாமி தாக்குதலைப் பொறுத்தவரையில் 100 ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் அது ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவும் கணிக்கப்பட்டு இருக்கிறது. 1881-ம் ஆண்டு அந்தமான் நிக்கோபார் தீவுகளில் சுனாமி ஏற்பட்டுள்ளது.

அதன் பிறகு கடந்த 2004-ம் ஆண்டு தான் மீண்டும் சுனாமி தாக்குதல் கடலோரப் பகுதிகளை பாதிப்புக்கு உள்ளாக்கி இருக்கிறது. எனவே மீண்டும் உடனடியாக ஒரு சுனாமி வருவதற்கு வாய்ப்பு இல்லை என்கிற ஆறுதல் செய்தியையும் ஆராய்ச்சியாளர்கள் கூறியிருக்கிறார்கள். எனவே உடனடியாக சுனாமி வந்து விடுமோ என்று யாரும் பீதி அடையத் தேவையில்லை.

# கனடா இந்து

CANADA HINDU

Published by Thurkeswaram, Sridurka Hindu Temple, 30 Carnforth Road, Toronto, ON M4A 2K7 TEL : 416-759 9648

# துர்க்கேஸ்வரத்தில் பாலஸ்தாபனம் 22-1-2023 ஞாயிற்றுக்கிழமை

**றொறன்ரோவில் அருட்பிரசித்தம் பெற்ற திருக்கோவிலான துர்க்கேஸ்வரத்தில் பாலஸ்தாபனம் நடைபெறவுள்ளது. ஜனவரி 20ம் திகதி வெள்ளிக்கிழமை விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பித்து, பூர்வாங்கக்கிரியைகளும், யாகபூஜைகளும் ஜனவரி 21ம் திகதி சனிக்கிழமையும் தொடர்ந்து நடைபெற்று, ஜனவரி 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10:15 மணிக்கு பாலஸ்தாபனம் இடம் பெறும்.**

கனடாவில் மிகப்பெரும் கும்பாபிஷேகம் 2001ம் ஆண்டு, துர்க்கேஸ்வரத்தில் நடைபெற்றது யாவரும் அறிந்ததே. 2023ம் ஆண்டு மீண்டும் இவ்வாலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு ஏதுவாக, பாலஸ்தாபனத்தை 22-1-2023 ஞாயிற்றுக்கிழமை நிகழ்த்த ஆலயத்தினர் தீர்மானித்துள்ளனர். பாலஸ்தாபனம் பற்றிய விளக்கத்தினை ஆலய பிரதமகுருக்களிடம் கேட்டபோது,

"கடந்த காலங்களில் இவாலயத்தில் நடைபெற்ற பூஜைகள், ஹோமங்கள் மற்றும் அருட்பெருவிழாக்களால் அதிஅருட்சக்தி பெற்று விளங்கும் விக்கிரகங்களில் உள்ள சக்தியை மந்திரபூர்வமான கிரியைகளால் கும்பங்களில் வரவழைத்து, அதன் பின்னர் சன்னிதானங்களில் உள்ள விக்கிரகங்களை பாலாலயம் என அழைக்கப்பெறும் சிறு ஆலயத்தில் ஸ்தாபித்து, கும்பங்களை அபிஷேகித்து தெய்வங்களை வழிபடுவதற்கான விஷேட ஏற்பாடே பாலஸ்தாபனமாகும். பாலஸ்தானம் நிகழ்ந்த பின்னர், ஆலயத்தில் சன்னிதானங்கள் மீளப்புதுப்பிக்கப்பெறும். புனருத்தாரண வேலைகள் துரிதமாக நடைபெறும். கும்பாபிஷேகத்துக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பெறும். இவ்வாறாக, மூன்றரை மாதங்கள் நடைபெற்று பின்னர் மே மாதம் 4ம் திகதி, 2023ம் ஆண்டு வியாழக்கிழமை மஹாயாக மஹாகும்பாபிஷேகம் நடைபெறும்"

என்று சிவஸ்ரீ. தியாகராஜாக்குருக்கள் கணஸ்சுவாமிகள் தெரிவித்தார். ஆலயத்தில் ஏற்கெனவே புதிய வர்ணம் தீட்டும் திருப்பணிகள் ஆரம்பித்துவிட்டன. ராஜகோபுரத் திருப்பணிகள் பூர்த்தியுறும் நிலையில் உள்ளன. துர்க்கேஸ்வரம் கும்பாபிஷேகம் பற்றி பக்தர் ஒருவரிடம் கேட்டபோது,

"பக்தர்கள் அம்பாளின் திருவருளைப் பெறவேண்டும் என்பதற்காக பல சிறப்பான ஹோமங்களையும் வழிபாடுகளையும் இவ்வாலயம் தொடர்ந்து செய்துவருகிறது. எதையுமே மேன்மையாகவும் மகத்துவம் மிளிரவும் செய்யும் இவ்வாலயத்தின் கும்பாபிஷேகமும் அவ்வாறே அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை"

எனக் குறிப்பிட்டார்.

## துர்க்கேஸ்வரம் மஹாகணபதிப் பெருமானுக்கு விநாயக சஷ்டி வழிபாடு

**08-12-2022 வியாழன் முதல் 28-12-2022 புதன் வரை**

துர்க்கேஸ்வரத்தில் விநாயகர்சஷ்டி விரதத்தினை முன்னிட்டு, அலங்கார மண்டபத்தில் உயர்பீடத்தில் பஞ்சமுகவிநாயகர் வீற்றிருக்க, கும்பங்கள் நிலை நிறுத்தி, விம்பத்திலும் கும்பத்திலும் அருள் நிறைத்து, விநாயகருக்குப் பிரீதியான நைவேத்தியங்கள் படைத்து, அறுகினாலும், மலர்களினாலும் அர்ச்சித்து வழிபாடுகள் நிகழவிருக்கின்றன.

தினமும் மாலை 6.30 மணிக்கு கும்பபூஜை, சங்கல்ப்பம் நிகழ்ந்து, தொடர்ந்து மஹா கணபதிக்கு அபிஷேகம் நடைபெறும். இரவு 7.31 மணிக்கு விஷேட பூஜை, வழிபாடுகள் நிகழ்ந்து, தொடர்ந்து வசந்த மண்டபத்தில் வீற்றிருக்கும் துர்க்கேஸ்வரம் றொறன்ரோப் பெரும் பிள்ளையாருக்கு விஷேட வழிபாடுகள் நடைபெற்று, சுவாமி வீதிவலமும் அருட் தரிசனமும் பக்தர்களுக்கு கிட்டவுள்ளது.

அருள்நிறை துர்க்கேஸ்வரம் கணபதியை வழிபட்டு அருள்பெற நித்தமும் பக்தர்கள் துர்க்கேஸ்வரத்துக்கு வருகை தருகின்றனர். இவ்விழா டிசெம்பர் 28ம் திகதி புதன்கிழமை பூர்த்தியாகும்.

**1-1-2023 ஞாயிறு மாலை 5 மணிக்கு துர்க்கேஸ்வ்ரத்தில் "கனடா TMS" V.S.தெய்வேந்திரன் தலைமையில் கனடாக் கலைஞர் வழங்கும் பக்திப் பாமாலை**

உ
சிவமயம்

ராமநாத இந்துமத கிரியாபீடம்

*திருமணம் - வீடு குடிபுகுதல் - ருது சாந்தி பூஜை - புண்யாகவாசனம் - 60ம் கல்யாணம் (சஷ்டியாப்த பூர்த்தி) - 31ம் நாள் துடக்கு கழித்தல் - வீட்டுக்கிருத்தியம் (திவசம்) - ஆட்டத்திவசம் - மாசியம் - சிரார்த்தம் - புரட்டாதி மாளையம - கணபதி ஹோமம் - லட்சுமி ஹோமம் - நவக்கிரக ஹோமம் - தோஷ நிவர்த்தி பூஜைகள் - சத்தியநாராயண பூஜை - வளைகாப்பு மற்றும் அனைத்து இந்துமத சேவைகளும் பெற்றுக்கொள்ளலாம்*

இன்னும் பல ஆண்டுகளுக்கான பஞ்சாங்கத்தினை நாம் கணித்து வைத்திருப்பதனால் திருமண மண்டபங்களை முன்கூட்டியே ஒழுங்கு செய்ய முகூர்த்தங்களை நம்மிடம் கணித்துக் கொள்ளலாம்

வைபவங்களுக்கான மங்கள இசை ஏற்பாடும் செய்து தரப்படும்

647-927 1434 ராம்ஜி ஐயா 647-618 7755

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மாங்குளம் விபத்தில் ஒருவர் பலி!




மாங்குளம் பகுதியில் நோயாளரை ஏற்றி பயணித்த மல்லாவி ஆதார வைத்தியசாலைக்கு சொந்தமான நோயாளர் காவு வண்டி மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து சம்பவம் 23-12-2022 இரவு மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட செல்வபுரம் பகுதியில் A9 வீதியில் இடம்பெற்றுள்ளது.

மல்லாவியில் இருந்து சிறுநீரக நோயாளி ஒருவரை அவசர சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அழைத்து சென்ற நோயாளர் காவு வண்டியுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

தனது செய்கை நிலத்தை பார்வையிட்டு, வீதியின் மறுபுறத்துக்கு மோட்டார் சைக்கிளில் கடக்க முற்பட்ட போது குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக மாங்குளம் போலீசார் தெரிவித்தனர்.

சிறுநீரக நோயாளியினை ஏற்றிக்கொண்டு அவசர ஒலியினை எழுப்பிக்கொண்டு வந்த மல்லாவி நோயாளர் காவுவண்டியுடனேயே குறித்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த நபர் மற்றுமொரு நோயாளர் காவுவண்டி ஊடாக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன் விபத்தில் சேதமாகிய மல்லாவி நோயாளர் காவு வண்டியில் இருந்த நோயாளர் மற்றும் நோயாளர் காவுவண்டியின் சாரதி ஆகியோர் 1990 இலக்க அவசர சேவை ஊடாக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.



இந்த விபத்தில் கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் பகுதியை சேர்ந்த கந்தசாமி சுப்பிரமணியம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவர் பார ஊர்திகள் சங்க முகாமையாளராக சேவையாற்றி ஓய்வுபெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

விபத்து தொடர்பான விசாரணைகளை மாங்குளம் பொலிசார் முன்னெடுத்து வருகின்றனர்.

**- ஜெகதீஸ்வரன் டிஷாந்த்**

# மன்னாரில் பிரமாண்டமாக நடைபெற்ற சாரணர் இயக்கத்தின் 110 வது ஆண்டு நிறைவு விழா



இலங்கையில் சாரணர் இயக்கம் தனது சேவையை ஆரம்பித்து 110 வது ஆண்டு நிறைவை கொண்டாடும் விதமாக வெள்ளிக்கிழமை (23) பிரம்மாண்ட விழிப்புணர்வு நடைபவனி மற்று சாரண இயக்க 110 ஆண்டு நிறைவு நிகழ்வும் மன்னார் நகரசபை மைதானத்தில் மன்னார் சாரணர் இயக்கத்தின் ஏற்பாட்டில் சாரணர் இயக்க மன்னார் மாவட்ட ஆணையாளர் ஸ்ரான்லி டிமேல் தலைமையில் இடம்பெற்றது.


மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் அனுசரணையில் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக மதியம் 2 மணியளவில் ஆரம்பமான விழிப்புணர்வு நடைபவனியில் இளைஞர்கள் மத்தியில் ஊடுருவி வரும் போதை பொருளுக்கு எதிராக எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு மாணவர்கள் ஊர்வலமாக வருகை தந்ததுடன் இன நல்லிணக்கம் மற்றும் சமத்துவத்தை வெளிப்படுத்தக்கூடிய பதாகைகளையும் காட்சிப்படுத்திய வாறு ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

அதனை தொடர்ந்து மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் சாரணர் மாணவ மாணவிகளுக்கான தீப்பாசறை நிகழ்வும் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஸ்ரான்லி டிமேல் மற்றும் இலங்கை சாரண சங்க பிரதி பிரதம ஆணையாளர் ஜனாப் M.F முஹித் ,சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பரந்தாமன், மன்னார் சாரணர் இயக்க தவிசாளர் அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லாஸ், இலங்கை சாரணர் சங்கத்தின் தலைமை காரியாலய உதவி ஆணையாளர் அமல்ராஜ், மன்/சித்திவிநாயகர் இந்து கல்லூரி அதிபர் பாலபவன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வைத்தியர் சுதாகரன் மற்றும், மன்னார் மெசிடோ நிறுவன பணிப்பாளர் ஜாட்சன் பிகிறாடோ, வர்த்தகர் லீனஸ் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இவ் நிகழ்வில் மன்னார் மாவட்டத்தை சேர்ந்த 10 பாடசாலைகளைச் சேர்ந்த 400 மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர் (24.12.2022)**







Dr. புஷ்பா வன்னித்தம்பி
பல் வைத்தியர்
Dr. Pushpa.V & Associates
Dentist
New Patients Welcome
Open 7 Days a week
சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்
Sunday by Appointment only

Scarborough
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
416-289-7187
Markham
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
905-201-8900

# மன்னாரில் சுனாமி நினைவேந்தல் அனுஷ்டிப்பு



சுனாமி அனர்த்தம் இடம்பெற்ற இன்றுடன் 18 வருடங்கள் ஆகின்ற நிலையில் தேசிய பாதுகாப்பு தினம் நாடு முழுவதும் அனுஷ்டிக்கப் பட்டுள்ளது.

அதற்கமைய மன்னார் மாவட்டத்திலும் சுனாமி நினைவேந்தல் நிகழ்வுகள் திங்கட்கிழமை (26) காலை இடம்பெற்றன.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் தேசிய பாதுகாப்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. மன்னார் மாவட்டச் செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவு ஏற்பாடு செய்த சுனாமி நினைவேந்தல் நிகழ்வு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இடம்பெற்றது.

காலை 9.27 மணியளவில் சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன் போது தீபம் ஏற்றி,மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.






குறித்த நினைவேந்தல் நிகழ்வில் சர்வமத தலைவர்கள், திணைக்களத்தலைர்கள் கலந்து கொண்டனர்.

இதே வேளை மன்னார் கலங்கரை கலை இலக்கிய நற்பனி மன்றத்தின் ஏற்பாட்டில், அதன் இயக்குனர் மோகன்ராஜ் தலைமையில் மன்னார் பிரதான பாலத்தடியில் சுனாமி நினைவேந்தல் இடம் பெற்றது.

இதன் போது சுனாமி அனர்த்தத்தில் உயிர் நீத்த உறவுகளை நினைவு கூர்ந்து சுடர் ஏற்றப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

குறித்த நினைவேந்தல் நிகழ்வில் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

**- மன்னார் நிருபர்**

# மன்னார் – தாராபுரம் பிரதான வீதி விபத்தில் இளம் குடும்பஸ்தர் பலி

## கைது செய்யப்பட்ட பொலிஸ் சாரதி விளக்கமறியலில்



மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி, தாராபுரம் பகுதியில் வியாழக்கிழமை (29) காலை 10 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில் மன்னார் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட பேசாலை பொலிஸ் நிலைய வாகன சாரதியை எதிர்வரும் 9 ஆம் திகதி (09-01-2023) வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவான் வியாழக்கிழமை (29) மாலை உத்தரவிட்டார்.

உயிரிழந்தவர் மன்னார் பனங்கட்டுகொட்டு பகுதியை சேர்ந்த இளம் குடும்பஸ்தரான ஆனந்த் கன்பியூசியஸ் விஜய் (வயது 32) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மன்னாரில் இருந்து பேசாலை நோக்கி பயணித்த பொலிஸ் டிபென்டர் ரக வாகனமும், பேசாலை வீதியூடாக மன்னார் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த இளம் குடும்பஸ்தர் ஒருவரின் மோட்டார் சைக்கிலும் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளது.



குறித்த விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் வீதியில் தூக்கி வீசப்பட்ட நிலையில், படுகாயமடைந்த நிலையில்,வீதியால் சென்றவர்களின் உதவியுடன் மீட்கப்பட்டு ஆம்புலன்ஸ் வண்டி மூலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

எனினும் குறித்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்ட நிலையில் வியாழக்கிழமை (29) மாலை குறித்த பொலிஸ் டிபென்டர் ரக வாகனத்தின் பொலிஸ் சாரதியை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட நீதவான் குறித்த பொலிஸ் சாரதியை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

மேலும் உயிரிழந்த இளம் குடும்பஸ்தரின் சடலம் சடலப் பரிசோதனைக்கு பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# கிளிநொச்சி பெண்கள் வாழ்வுரிமைச் சங்க நிறுவனத்தின் அலுவலகம் உடைப்பு – பல்வேறு ஆவணங்கள் திருட்டு



கிளிநொச்சியில் இயங்கி வரும் பெண்கள் வாழ்வுரிமைச் சங்க நிறுவனத்தின் அலுவலகம் புதன்கிழமை (28) இரவு இனம் தெரியாத நபர்களினால் உடைக்கப்பட்டு காரியாலய தொழில்நுட்ப உபகரணங்கள் உள்ளிட்ட ஆவணங்கள் பல களவாடப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக குறித்த அமைப்பு நிர்வாகத்தினர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் வியாழக்கிழமை (29) காலை முறைப்பாடு செய்துள்ளனர்.

கிளிநொச்சியில் இயங்கி வரும் குறித்த நிறுவனமானது கடந்த 2018 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை யுத்தத்தினாலும், இயற்கை மற்றும் தேசிய பேரிடரான கோவிட் தாக்கத்தினாலும், தற்கால பொருளாதார நெருக்கடி மற்றும் வறுமை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீண்ட கால உணவுத் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கோடும் உரிமை ரீதியாகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பெண்கள் மற்றும் சிறுவர்கள் மத்தியில் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வந்தது.

அந்த வகையில் இச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது கடந்த காலத்தில் பல அச்சுறுத்தல்கள் சவால்களை எதிர் நோக்கியே மக்களுக்கான சேவையை வழங்கி வந்துள்ளனர்.

இந்த நிலையில் புதன்கிழமை (28) மாலை 4.30 மணியளவில் அலுவலக வேலைகளை முடித்து அலுவலகத்தைப் பூட்டிவிட்டு பணியாளர்கள் சென்றிருந்தனர்.

பின்னர் மறு நாளான வியாழக்கிழமை (29) காலை 9 மணியளவில் மீண்டும் அலுவலகப்பணிக்காக மீண்டும் திறக்கப்பட்ட போது குறித்த பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தின் அலுவலகம் உடைக்கப்பட்டு இருப்பதை அவதானித்துள்ளனர்.

இதன் போது அலுவலகத்தில் இருந்த 2 மடிக்கணணிகள், அலுவலக கணினி பொருட்கள், கண்காணிப்பு கெமராவின் (C.C.TV) கண்காணிப்பு பெட்டி, முக்கிய ஆவணங்கள் என்பன அலுவலகம் உடைக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இச் செயற்பாடுகளானது எதிர் காலத்தில் தாம் முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ள எமது பாதிக்கப்பட்டு மிகவும் தேவையுடைய மக்களுக்கு தாம் ஆற்றும் அளப்பெரிய சேவையை முடக்கும் நோக்கோடும் மக்களின் உரிமைசார் பிரச்சனைகளுக்கு குரல் கொடுக்கும் எமது குரலையும் குரல்வளையை யும் நசுக்கும் நோக்கோடு முன்னெடுக்கப்பட்ட செயற்பாடாகவே அதை கருதுவதாக கிளிநொச்சி பெண்கள் வாழ்வுரிமைச் சங்க நிறுவனத்தின் இணைப்பாளர் வாசுகி வல்லிபுரம் தெரிவித்தார்.



இவ்வாறான செயற்பாடுகள் நபர்களால் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டுள்ளது டன் இவ்வாறு நாசகாரச் செயலை தாம் வன்மையாக கண்டிப்பதாக தெரிவித்துள்ளனர்.

மக்களுக்காக சேவையாற்றும் எம்மைப் போன்ற சமூக சேவை அமைப்புகளும் அதன் பணியாளர்களும் அச்சுறுத்தப்படுவதென்பது ஏற்றுக்கொள்ள முடியாத துடன் இதுபோன்ற செயல்களுக்கு வன்மையான கண்டனத்தை தெரிவிக்கின்றோம் என கிளிநொச்சி பெண்கள் வாழ்வுரிமைச் சங்க நிறுவனத்தின் இணைப்பாளர் வாசுகி வல்லிபுரம் மேலும் தெரிவித்தார்.



**- மன்னார் நிருபர்**

# 2023: தமிழ்க்கட்சிகளின் ஆண்டுப் பலன்?



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

**பு**திய ஆண்டு பேச்சுவார்த்தைகளோடு தொடங்குகின்றது. புத்தாண்டு பிறந்த கையோடு மூன்று நாட்களுக்கு தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக மூன்று நாட்கள் என்பதே வெளியுலகத்தை கவர்வதற்கான ஒரு ஏற்பாடுதான். அரசாங்கம் பேச்சுவார்த்தைகளில் சீரியஸ் ஆக இருக்கிறது என்பதை காட்டுவதற்கான ஓர் உத்தி அது. அவ்வாறு காட்ட வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு உண்டு. ஏனெனில் இப்பொழுது நடக்கும் பேச்சுவார்த்தைகள் தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வைத்தர வேண்டும் என்பதை விடவும், பொருளாதார நெருக்கடியில் இருந்து அரசாங்கத்தைப் பிணை எடுக்கக்கூடிய நாடுகளை கவர்வதற்கான ஒரு ஏற்பாடுதான்.

மோதலில் ஈடுபடும் தரப்புகள் அல்லது பிணக்கிற்கு உட்பட்ட தரப்புகள் எப்பொழுது பேச்சுவார்த்தைக்கு வரும் என்றால், அரசியல் வலுச்சமநிலை மாறும் போதுதான். அரசியல் வலுச்சமநிலையை போரின் மூலமும் மாற்றலாம். மக்கள் போராட்டங்களின் மூலமும் மாற்றலாம். தேர்தல் முடிவுகளின் மூலமும் மாற்றலாம். இலங்கைத்தீவின் வலுச்சமநிலை பொருளாதார நெருக்கடியின் விளைவாக தோன்றிய தன்னெழுச்சி போராட்டத்தின் மூலம் மாற்றப்பட்டு விட்டது. தன்னெழுச்சி போராட்டங்கள் சிங்கள பௌத்த கடுந்தேசிய வாதத்தை பதுங்க செய்துவிட்டன. சிங்கள பௌத்த கடுந்தேசிய வாதமானது சிங்கள பௌத்த லிபரல் முகமூடியின் பின் மறைவெடுத்து நிற்கிறது. தாமரை மொட்டு கட்சி ஒற்றையானைக்கு பின் பதுங்கி நிற்கின்றது. இதனால் ஏற்பட்ட வலுச்சமநிலை மாற்றம்தான் ரணில் விக்கிரமசிங்கவின் பேச்சுவார்த்தைக்கான அழைப்புக்குக் காரணம்.

இதைத் தமிழ்த் தரப்பின் நோக்கு நிலையில் இருந்து சொன்னால், பேச்சுவார்த்தைக்கான அரசியல் வலுச்சமநிலை இலங்கை தீவில் உருவாக காரணம் தமிழ் தரப்பின் போராட்டங்கள் அல்ல. தமிழ்த்தரப்பு பலமடைந்ததாலும் அல்ல. மாறாக சிங்களத் தரப்பு தனக்குள்தானே மோதி பலவீனம் அடைந்ததே காரணம். இவ்வாறு சிங்களத் தரப்பு பலவீனமடைந்ததால் இலங்கைத்தீவின் அரசியல் வலுச்சமநிலை மாற்றம் கண்டுள்ளது. இதை பயன்படுத்தி வெளிநாடுகள் இலங்கை தீவின் மீதான தமது பிடியை மேலும் இறுக்க முற்படும் பொழுது இத்தீவின் அரசியல் ராணுவ பொருளாதார வலுச்சமநிலையில் மேலும் மாற்றம் வரலாம்.

அதைத்தான் கஜேந்திரக்குமாரும் வேறுவிதமாகச் சொன்னார். அதாவது பொருளாதார நெருக்கடி காரணமாக சிங்களத் தரப்பு பலவீனம் அடைந்து விட்டது, அதனால் பேச்சு வார்த்தைக்கு இறங்கி வருகிறது, எனவே தமிழ்த் தரப்பு தனது பேரத்தை பலப்படுத்த வேண்டும் என்று.

ஆனால் இது தமிழ்த்தரப்பின் போராட்டத்தாலோ அல்லது அதிகரித்த பலத்தாலோ ஏற்பட்ட வலுச்சமநிலை மாற்றம் அல்ல. இந்த வலுச்சமநிலை மாற்றத்தில் அரசாங்கத்துக்கு உதவி புரியும் நாடுகளின் அழுத்தமும் ஓரளவுக்கு உண்டு. பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான உதவிகளும் இனப்பிரச்சனைக்கான தீர்வும் ஒரே பொதிக்குள் வைக்கப்பட வேண்டும் என்று மேற்கு நாடுகள் வலியுறுத்துகின்றன. அதேசமயம் நடந்து முடிந்த ஜெனிவா கூட்டத்தொடரில் இந்தியாவின் நிலைப்பாடும் அதுவாக இருந்தது. எனவே பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு இனப்பிரச்சினைக்கான தீர்வை கண்டுபிடிக்க வேண்டும் என்ற அழுத்தம் அரசாங்கத்தின் மீது உண்டு. அதுவும் அரசாங்கம் பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன என்று ஒரு தோற்றத்தை கட்டி எழுப்பக் காரணம். எனவே இதில் தமிழ்த்தரப்பின் பேரபலம் என்பது முதலாவதாக சிங்களத்தரப்பின் வீழ்ச்சியாகவும், இரண்டாவதாக வெளி உலகத்தின் அழுத்தமாகவும் காணப்படுகிறது.

அதனால் பேச்சுவார்த்தையை எதிர்பார்ப்போடு பார்க்கும் வெளியுலகத்திற்கு தமிழ்த்தரப்பு அதில் ஈடுபடும்-என்கேஜ்-engage-பண்ணும் என்ற செய்தி கொடுக்கப்பட வேண்டும். இதன் பொருள் மேற்கு நாடுகள் ஒரு தீர்வை பெற்று தரும் என்பதல்ல. மாறாக நவீன ராஜதந்திரவியல் எனப்படுவது என்கேஜ்மென்ட் தான். இந்த அடிப்படையில் தரப்பு பேச்சுவார்த்தையில் என்கேஜ் பண்ண வேண்டும். தவிர தமிழ்த்தரப்பிடம் நாட்டில் சொந்தமாகப் பலம் எதுவும் கிடையாது. அந்த பலத்தின் காரணமாக வலுச்சமநிலை மாறவும் இல்லை. எனவே தன் பலம் எதுவென்று கண்டு தமிழ்த்தரப்பு பேச்சில் ஈடுபட வேண்டும். அதன்பொருள் பேச்சுவார்த்தையை இதயபூர்வமாக நம்ப வேண்டும் என்பதல்ல. இதுவிடயத்தில் என்கேஜ் அண்ட் எக்ஸ்போஸ் அதாவது ஈடுபட்டு அதை அம்பலப்படுத்துவது என்ற ஒரு தந்திரத்தை தமிழ்த்தரப்பு கடைப் பிடிக்க வேண்டும்.

சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தின் கடும்போக்குவாதிகள் லிபரல் முகமூடி அணிந்த ஒற்றை யானைக்கு பின் பதுங்குகிறார்கள். அவர்களுக்கு உலக அங்கீகாரத்தை பெறுவதற்கு அந்த ஒற்றை யானையின் ஏற்பாடுசெய்யும் பேச்சுவார்த்தை என்ற தோற்றமாயை தேவை. எனவே அதைப் பயன்படுத்தி பதுங்கியிருக்கும் சிங்களபௌத்த பெருந்தேசியவாதத்தின் கடும்போக்காளர்களை ஒரு தீர்வை நோக்கி வளைத்தெடுக்கலாம் என்று மேற்கு நாடுகள் நம்பக்கூடும்.

அந்த நம்பிக்கை தமிழ் மக்களின் சுமார் ஒரு நூற்றாண்டு கால அனுபவத்துக்கு பொருந்தி வரவில்லை என்பதனை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு தமிழ்த் தரப்புக்கு உண்டு.எனவே பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு எதிர்த் தரப்பை அம்பலப்படுத்த வேண்டும். ஒரு தரப்பாக சிந்தித்தால் ஒரு தேசமாக சிந்தித்தால் என்கேஜ் பண்ண வேண்டும். அதுதான் இப்பொழுது உயர்ந்திருக்கும் தமிழ் தரப்பின் பேரத்தை தொடர்ந்து உயர்வாக வைத்திருக்க உதவும்.

பன்னாட்டு நாணய நிதியத்தின் உதவிகள் எதிர்பார்த்த வேகத்தில் கிடைக்கவில்லை. மேலும் அந்த உதவிகள் கடனை அடைக்க போதுமானவை அல்ல.ஆனால் அந்த உதவிகள் கிடைத்தால் ஏனைய நாடுகளிடம் உதவி பெறத் தேவையான அங்கீகாரம் அரசாங்கத்திற்கு கிடைக்கக்கூடும். எனவே அந்த அங்கீகாரத்தை நோக்கி உழைக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு உண்டு. இந்த அடிப்படையில் பார்த்தால் அரசாங்கம் மேற்கு நாடுகளை சமாளிக்க வேண்டிய நிலையில் உள்ளது.

அதனால் ரணில் விக்கிரமசிங்க முன்பு 2015 இல் இருந்து 2018 வரையிலும் முன்னெடுத்த நிலைமாறுகால நீதிப் பொறிமுறையை ஒரு புதிய வடிவத்தில் முன்னெடுக்க முயற்சிப்பதாக தெரிகிறது. தென்னாபிரிக்கப் பாணியிலான நல்லிணக்கப் பொறிமுறை என்ற உரையாடல் அதைத்தான் குறிக்கிறது. ஆனால் நிலை மாறுகால நீதி என்பது இலங்கைத் தீவைப் பொருத்தவரையிலும் ஓர் அழகிய பொய்யாகிவிட்டது. ரணிலோடு நிலைமாறு கால நீதியின் பங்காளியாகச் செய்யப்பட்ட கூட்டமைப்பின் பேச்சாளர் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அவனியாவில் வைத்து சொன்னார்... "6 ஆண்டுகளாக ஒரு பரிசோதனையை முயற்சி செய்தோம். அதில் தோற்று விட்டோம்." என்று. அவ்வாறு ஏற்கனவே இந்த நாடு பரிசோதித்து தோல்வி கண்ட ஒரு விடயத்தை மீண்டும் ரணில் விக்கிரமசிங்க கையில் எடுக்கப் போகிறாரா?

முன்னைய நிலைமாறு கால நீதிச் செய்முறைகளின்போது கூட்டமைப்பு அரசாங்கத்தோடு இணைந்து யாப்புருவாக்க முயற்சிகளில் ஈடுபட்டது. ஒரு புதிய யாப்புக்கான இடைக்கால வரைபு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அமர்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா கூறிய வார்த்தைகளை இங்கே தமிழ்த் தரப்பு மீட்டுப் பார்க்க வேண்டும். சம்பந்தரின் காலத்திலும் தீர்வைப் பெறவில்லை என்றால் இனி எப்பொழுதுமே தீர்வை பெற முடியாது என்ற தொனிப்பட அவர் தெரிவித்திருந்தார். அது உண்மை. ஏனென்றால் அந்தளவுக்கு சம்பந்தர் விட்டுக் கொடுத்தார். பிளவுபடாத பிரிக்கப்பட முடியாத நாட்டுக்குள் தீர்வு என்று சம்பந்தர் காயத்திரி மந்திரம் போல திரும்பத் திரும்பச் சொன்னார். ஆனால் அது எதுவுமே மகிந்த அணிய சமாதானப்படுத்தவில்லை. அவர்கள் யாப்புருவாக்க முயற்சியை இடைக்கால வரைபோடு குழப்பினார்கள்.

இப்பொழுது மறுபடியும் சம்பந்தர் விட்டுக் கொடுக்கப் போகிறாரா இல்லையா என்பதனை தமிழ்மக்கள் உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். டிலான் வழங்கிய பாராட்டு பத்திரத்தை விடவும் தமிழ் மக்கள் கடந்த பொதுத் தேர்தலில் சம்பந்தருக்கு வழங்கிய தண்டனை பெரியது.

எனவே கூட்டமைப்பு இம்முறை ஏனைய கட்சிகளோடு இணைந்து திட்டவட்டமாக சில முடிவுகளை எடுக்க வேண்டும். முதலாவதாக பேச்சுவார்த்தைக்கான கட்டமைப்பை மறுகட்டமைப்பை செய்ய வேண்டும் இப்பொழுது நடந்து கொண்டிருப்பது சர்வகட்சி மாநாடு. அது வெளித்தோற்றத்திற்கு எல்லாக் கட்சிகளின் கருத்துக்களையும் கேட்கும் ஒரு ஜனநாயக ஏற்பாடாக தோன்றலாம். ஆனால் கடந்த 75 ஆண்டுகால அனுபவம் என்னவென்றால், இனப் பிரச்சினைக்கான தீர்வு பொறுத்து எல்லா சர்வ கட்சி மாநாடுகளும் ஏமாற்று வித்தைகளே. எனவே பேச்சுவார்த்தைகளை பிணக்குக்கு உட்பட்ட தரப்புகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தைகளாக மாற்ற வேண்டும். அதன்படி தமிழ்த்தரப்பு சிங்களத் தரப்புடனும் முஸ்லிம் தரப்புடனும் பேச வேண்டும். அரசாங்கமே சிங்களத் தரப்பை பிரதிநிதித்துவப் படுத்த வேண்டும். எல்லா கட்சிகளையும் கூட்டிக்கொண்டு வந்து சர்வகட்சி மாநாடு என்று சொல்லி குழப்பியடிக்க முடியாது. சிங்களக் கட்சிகளை சமாளிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்குரியது. அரசாங்கத்தோடு நிற்கும் தமிழ்க் கட்சிகளையும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அரசு தரப்பாகவே பார்க்க வேண்டும். இவ்வாறு பேச்சுவார்த்தைகளை மறு கட்டமைப்பு செய்ய வேண்டும்.

அடுத்த கட்டமாக மூன்றாவது தரப்பை உள்ளே கொண்டு வர வேண்டும். இந்தியாவும் உட்பட மேற்கு நாடுகளை இணைத்தலைமை நாடுகளாக உள்ளே இறக்க வேண்டும். அண்மையில் முன்னாள் சமாதான தூதுவரான எரிக் சொல் ஹெய்ம் கூறியிருக்கிறார். மூன்றாவது தரப்பு தேவை இல்லை என்று அது அவருடைய தனிப்பட்ட அபிப்பிராயம். அதுவே தமிழ் தரப்பின் அபிப்பிராயமாக இருக்கத் தேவையில்லை.

இவ்வாறு பேச்சுவார்த்தைகளை மறுக்கட்டமைப்பு செய்துவிட்டு பேசத் தொடங்கலாம். ரணில் விக்கிரமசிங்க தயாரிக்கும் நாடகத்தில் பங்காளிகளாக இணைவதா அல்லது தமது மக்களுக்கு விசுவாசமாக இருப்பதா என்பதை தமிழ் கட்சிகள் தீர்மானிக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. போன தடவை நிலை மாறு கால நீதியின் பங்காளிகளாக மாறப் போய் ஆறு ஆசனங்களை இழந்த கூட்டமைப்பு இனிமேலும் பிளவுபடாத பிடிக்கப்பட முடியாத இலங்கைத் தீவுக்குள் என்று உச்சாடனம் செய்யத் தேவையில்லை. டிலான் பெரேராக்களின் பாராட்டுப் பத்திரமா, அல்லது தமது சொந்த மக்களின் தலைவிதியா என்பதனை தீர்மானிக்க வேண்டிய ஆண்டு இது.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# வவுனியா புளியங்குளம் இந்துக் கல்லூரியின் "திறன் வகுப்பறைத் திறப்பு விழா"



வவுனியா கனகராயன்குளம் மகாவித்தியாலய பழைய மாணவன் திரு. S.தவமோகன் அவர்களும், UK - இரட்ணம் பவுண்டேசனும் இணைந்த நிதிப்பங்களிப்பில் எமது பாடசாலைக்கு வழங்கிய திறன் வகுப்பறை ஒன்று இன்று (22.12.20022) திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலையின் அதிபர் திரு. ச. பரமேஸ்வரநாதன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக எமது பிரிவின் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. வே. கிருபானந்தன் அவர்களும், கௌரவ விருந்தினராக தவமோகன் அவர்களின் தாயார் திருமதி. மல்லிகாதேவி சிவசுப்பிரமணியம் அவர்களும், சிறப்பு விருந்தினராக எமது கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் (ICT) திரு. சி.சிவராஜா அவர்களும், திருமதி. றோ. யூட் நேசராஜா அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.




இந்த 'Smart Board" ஆனது தற்கால கற்பித்தலுக்கு மட்டுமல்ல எதிர்காலத்தில் கல்வி அமைச்சினால் நடைமுறைப்படுத்தவுள்ள புதிய கல்விச் சீர்திருத்த கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்கும் மிகப் பயனுள்ள ஒன்றாகும். திறன் வகுப்பறைக் கற்பித்தலானது மாணவர்கள் விரும்பிக் கற்கும் வகுப்பறையாக மாறியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

அந்த வகையில் இதனைத் தந்துதவிய, தவமோகன் அவர்களுக்கும், இரட்ணம் பவுண்டேசன் - UK ஸ்தாபகர் கலாநிதி இரட்ணம் நித்தியானந்தன் அவர்களுக்கும் நன்றி கூறுவதுடன், இரட்ணம் பவுண்டேசன் ஆற்றிவரும் மனித நேய அர்ப்பணிப்பான சேவைகளுக்கு பாடசாலைச் சமூகம் சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

# சீன மக்களின் அன்பளிப்பாக வழங்கப்பட்ட உலர் உணவு பொதிகள் மன்னாரில் தெரிவு செய்த குடும்பங்களுக்கு வழங்கி வைப்பு



சீன மக்களிடம் இருந்து சீன அரசின் ஊடாக இலங்கை மக்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட ஒரு தொகுதி உலர் உணவு பொதிகள் புதன்கிழமை (28) காலை 10 மணியளவில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் வைத்து வைபவ ரீதியாக வழங்கி வைக்கப்பட்டது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் கிளையின் அமுலாக்கத்தில் குறித்த உலர் உணவு பொதிகள் வைபவ ரீதியாக வழங்கி வைக்கப்பட்டது.



இதன்போது இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் பொறுப்பாளர், பிரதித் தூதுவர் ஹுவெய் (Hu Wei,) இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் தலைமை அரசியல் அதிகாரி மற்றும் தூதரகத்தின் செய்தித் தொடர்பாளர் லுவோ சோங், இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் மூன்றாம் நிலை செயலாளர் வென்சாங், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியா கிளை தலைவர் சிரேஸ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் கிளை தலைவர் ஜே.கெனடி, ராணுவ உயர் அதிகாரிகள் இணைந்து குறித்த உலர் உணவு பொதிகளை வழங்கி வைத்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து வரிய, பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் விசேட தேவைக்கு உள்ளான 1380 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் முதல் கட்டமாக 300 பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது. ஏனையவர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**- மன்னார் நிருபர் (28-12-2022)**


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CRR PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.




MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

# கனடா கவிஞர் உயிரவனுக்கு தமிழ்நாட்டில் தமிழ்மாமணி விருது

கனடிய செய்திகள் Canadian News



கனடாவிலிருந்து சென்னைக்கு இலக்கியப் பயணமாக வருகை தந்த பாட்டருவிக. உயிரவன் தமிழ்ப்பணியைப் பாராட்டி நந்தவனம் பவுண்டேசன் தமிழ் மாமணி விருது வழங்கி கௌரவித்துள்ளது.

இனிய நந்தவனம் வாசகர் வட்டம் கல்வெட்டுப் பேசுகிறது திங்களிதழ் இணைந்து ஏற்பாடு செய்திருந்த படைப்பாளர்கள் கலந்துரையாடல் நிகழ்வில் மேற்கண்ட விருது வழங்கப்பட்டுள்ளது.

சென்னையில் 27-12-2022 அன்று எழுத்தாளர் வே. எழிலரசு தலைமையில் நடைபெற்றி இந்நிகழ்வில் நந்தவனம் சந்திரசேகரன் அறிமுக உரையாற்றிட பாட்டருவி உயரவன் சிறப்புரையாற்றினார், வேணு குணசேகரன், முனைவர் ச. அமுதவல்லி, வழக்கறிஞர் பா. வே. கோ, கவிஞர் நிமோஷினி, கவிஞர் உமாபாரதி, உளநல ஆலோசகர் கே. நித்தியானந்தன், முனைவர் அன்பு சிவா, கவிஞர் எம்.ஜலாலுதீன், சிங்காரம் சுகுமாரன், கே.அன்பழகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

கவிஞர் சொர்ணபாரதி அனைவரையும் வரவேற்று நிகழ்ச்சியை ஒருங்கிணைத்திருந்தார்.

# "சிவஸ்ரீ சிவானந்த சர்மா அவர்கள் சமய அறிவியலையும் சமூக அறிவியலையும் சமாந்தரமாக தனது கைகளில் எடுத்துக் கொண்டவர்"

## "உதயன்" பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் புகழாரம்



"யாழ்ப்பாணம் கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தொடர்ச்சியாக அந்த மண்ணிலேயே வாழ்ந்து வருபவருமான "கோப்பாய் சிவம்" என்ற புனைபெயரைக் கொண்ட சிவஸ்ரீ சிவானந்த சர்மா அவர்கள் சமய அறிவியலையும் சமூக அறிவியலையும் சமாந்தரமாக தனது கைகளில் எடுத்துக் கொண்டவர்ள அத்துடன் அவற்றை தொடர்ச்சியாக நன்கு மதித்தும் பேணியும் வருபவர். இவ்வாறான ஒரு படைப்பாளியையோ அன்றி பேச்சாளரையோ அன்றி எழுத்தாளரையோ இவரோடு ஒப்பிட்டுச் சொல்வதும் மிகவும் சிரமமான ஒரு காரியமாகும்".

இவ்வாறு புகழாரம் சூட்டினார் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் முன்னாள் தலைவருமான லோகன் லோகேந்திரலிங்கம் அவர்கள்.

சிவஸ்ரீ சிவானந்த சர்மா அவர்கள் எழுதிய "அந்தணர்க்கு அருங்கலம், அடியார்க்கு அருட்கலம்" நூல் வெளியீட்டு விழா. கடந்த 25ம் திகதி திங்கட்கிழமை கனடா கந்தசுவாமி ஆலய கலாச்சார மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. ஆலயத்தின் நிர்வாக சபைத் தலைவர் திரு. சு. முத்துராஜலிங்கம் (முத்து) தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் சிவாச்சாரியப் பெருமக்களும் ஏனைய துறை சார்ந்த பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

அங்கு நட்புரை வழங்கிய லோகன் லோகேந்திரலிங்கம் அவர்கள் தொடர்ந்து தனது உரையில், "யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் வருகை தரும் விரிவுரையாளராகவும் பணியாற்றி உலகெங்கும் தமிழ் மக்கள் வாழும் நாடுகளுக்கு பயணித்து சமய உரைகளையும் சிவாகம பணிகளையும் செவ்வனே





ஆற்றிவருபவருபவர் தான் சிவஸ்ரீ சிவானந்த சர்மா அவர்கள் அத்துடன். யாழ்ப்பாணத்தில் "கோப்பாய் சிவம்" என்ற பெயரில் படைப்பிலக்கியத் துறையில் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக அறியப்பட்டவருமான சிவஸ்ரீ சிவானந்த சர்மா அவர்கள் தற்போது கூட சமய அறிவியலையும் நெறிகளையும் எவ்வாறு மதிக்கின்றாரோ அந்தளவிற்கு சமூகம் சார்ந்த படைப்புக்களையும் தொடர்ச்சியாக வாசித்து வருகின்றார் என்பதை அறிந்து அவரை நான் வாழ்த்துகின்றேன்" என தெரிவித்தார்.

தொடர்ந்து வெளியீட்டுரை ஆற்றிய டாக்டர் சிவஸ்ரீ சோமாஸ்கந்தக்குருக்கள் அவர்கள் நூலையும் நூலாசிரியரையும் விதந்து பாராட்டிசபையோருக்கு விளங்கும் வண்ணம் பல கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

"சைவப் பெருமக்களுக்கு பயன் தரும் வகையில் படைக்கப்பட்ட சிவாகமங்கள் மற்றும் சமயக் கிரியைகள் ஆகியவை தொடர்பாக மக்களுக்கும் மற்றும் சிவாச்சாரியப் பெருமக்களுக்கும் உள்ள சந்தேகங்களைப் போக்கும் முயற்சிகளில் பலரும் துணிந்து ஈடுபடுவதில்லை. நான்கு திசைகளிலும் எதிர்ப்புக்கள் கிளம்பும் என்பதால் அவ்வாறு அவர்கள் முன்வருவதில்லை. ஆனால் இவ்வாறான காரியங்கள் சைவைப் பெருமக்களின் சமய ஈடுபாட்டுக்கு மிகவும் முக்கியமானவை என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். இந்த விடயத்தில் துணிந்து தனது கருத்துக்களை தனது உரைகளில் தெரிவித்தும் நூல்களின் மூலம் பதிப்பித்தும் வெளிக்கொணர்ந்து வரும் சிவஸ்ரீ சிவானந்த சர்மா அவர்களை நான் பாராட்டுகின்றேன்" என்றார் அவர்.

பேராசிரியர் கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்கள் அறிமுக உரையாற்றும் போது. ஊ"சிவஸ்ரீ சிவானந்த சர்மா அவர்கள் எழுதிய" "அந்தணர்க்கு அருங்கலம், அடியார்க்கு அருட்கலம்" நூல் எமது சமயத்தவர்களின் வீடுகளில் அவசியம் இருக்க வேண்டிய ஒன்று என குறிப்பிட்டார்.

நூலின் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டு உரையாற்றிய சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்கள் தனது உரையில் சிவஸ்ரீ சிவானந்த சர்மா அவர்கள் எழுதிய இந்த அரிய நூலை படைப்பதற்கு அவர் எவ்வளவு சிரமப்பட்டிருப்பார் என்பதை நான் அறிவேன். ஏடுகளில் பதியப்பட்டவையாக இருந்த சைவம் சார்ந்த உண்மைகளையும் விபரங்களையும் எழுத்துவடியில் மீளவும் படைத்து அவற்றை அச்சில் பதிப்பித்து எமக்கு அளித்துள்ளார். அதற்காக அவர் எத்தனை மணித்தியாலங்களை அல்லது நாட்களை செலவு செய்திருப்பார் என்பதை நான் அறிவேன். நூலாசிரியர் அவர்கள் எழுதிய சமய நூல்கள் பல தமிழ் நாட்டில் பல வோதாகம பாடசாலைகளில் பாட நூல்களாகவும் சான்றுகளாகவும் பயன்படுத்தப்படுகின்றன என்பதை நான் அறிந்து பெருமைப் படுகின்றேன். உதாரணமாக தமிழ்நாட்டில் உள்ள பிள்ளையார்பட்டி ஆலயத்தின்









பிரதம குரு சிவஸ்ரீ பிச்சைக் குருக்கள் அவர்கள் தலைமையில் அங்கு சிவஸ்ரீ சிவானந்த சர்மா அவர்களின் நூல் வெளியீட்டு விழா ஆலயத்தின் வேதாகம பாடசாலையில் நடைபெற்றது என்பதையும் நான் பெருமையோடு பகிர்ந்து கொள்கின்றேன்" என்றார்.

தொடர்ந்து நூலின் பிரதிகளை பல அன்பர்கள் விருப்பத்தோடு பெற்று மகிழ்ந்தார்கள். இறுதியில் சிவஸ்ரீ சிவானந்த சர்மா அவர்களின் பதிலுரையும் இடம் பெற்றது.

**- செய்தியும் படங்களும் சத்தியன்**

# உணவுப் பொருட்களின் விலையேற்றத்தால் பெரும் நெருக்கடியில் இலங்கை




விவசாயப் பொருட்கள் மற்றும் தானியங்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ள நிலையில், உலகில் உணவுப் பொருட்களின் விலையேற்றத்துடன் கூடிய முதல் பத்து நாடுகளில் இலங்கையும் இடம்பெற்றுள்ளது.

உலக வங்கியினால் வெளியிடப்பட்ட உணவுப் பாதுகாப்பு தொடர்பான அண்மைய புதுப்பிக்கப்பட்ட அறிக்கைக்கு அமைய தெற்காசியாவில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடாக இலங்கை காணப்படுகின்றது.

Table 1: Food Price Inflation: Top 10 List

| Country | Nominal food inflation (%YoY) | Country | Real food inflation (%YoY) |
|---|---|---|---|
| Zimbabwe | 321 | Zimbabwe | 52 |
| Lebanon | 203 | Lebanon | 45 |
| Venezuela | 158 | Iran | 32 |
| Türkiye | 102 | Rwanda | 31 |
| Argentina | 92 | Hungary | 21 |
| Iran | 84 | Türkiye | 18 |
| Sri Lanka | 74 | Uganda | 17 |
| Rwanda | 65 | Colombia | 15 |
| Suriname | 51 | Montenegro | 13 |
| Hungary | 44 | Lithuania | 13 |

Source: International Monetary Fund, Haver Analytics, and Trading Economics.
Note: Food inflation for each country is based on the latest month from August to November 2022 for which the food component of the Consumer Price Index (CPI) and overall CPI data are available. Real food inflation is defined as food inflation minus overall inflation.

டிசம்பர் 15ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிக்கைக்கு அமைய 2022 நவம்பர் மாதத்திற்குள் இலங்கையின் வருடாந்த பெயரளவிலான உணவுப் பணவீக்கம் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 74%ஐ எட்டியுள்ளது.

நாட்டின் மக்கள் தொகையில் சுமார் மூன்றில் ஒரு பகுதியினர் இந்த நிலைமையை சமாளிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

அதிகரித்த காலநிலை மாற்ற அதிர்ச்சிகள், வெளிநாட்டு நாணய கையிருப்பு குறைவு மற்றும் உள்ளூர் நாணயங்களின் மதிப்பிழப்பு காரணமாக, பொதுவாக தெற்காசியாவில் உணவு விலைகள் இந்த ஆண்டு இயல்பை விட அதிகமாக உள்ளதோடு, தெற்காசியாவிலும் ஆரோக்கியமான உணவுக்கான அணுகல் பொதுவாக குறைந்துள்ளதாக உலக வங்கி அறிக்கை காட்டுகிறது.

மோசமான பணவீக்கத்தை எதிர்கொண்டுள்ள இலங்கையில், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2022 நவம்பரில் உணவுக்கான நுகர்வுப் பொருட்களின் பணவீக்கம் 73.7 சதவீதமாக உள்ளதோடு, நெருக்கடிகளை சந்தித்துள்ள ஏனைய தெற்காசிய நாடுகளில் பாகிஸ்தானில் நுகர்வோர் பொருட்களின் பணவீக்கம் 31.2 சதவீதமாகவும், பங்களாதேஷில் 8.1 சதவீதமாகவும், நேபாளத்தில் 8.1 சதவீதமாகவும் அமைந்துள்ளது.

இலங்கையில் காணப்படும் உரத் தட்டுப்பாடு, உரங்களின் விலை அதிகரிப்பு, தென் மற்றும் மத்திய மாகாணங்களில் மழையின்மை போன்ற காரணங்களால் எதிர்வரும் பருவத்தில் விளைச்சல் 50 வீதம் குறையும் அபாயம் உள்ளதாக அறிக்கை கணித்துள்ளது.

நாடு எதிர்கொள்ளும் பொருளாதார சவால்களால் இறக்குமதி செய்யப்பட்ட தானியங்களின் குறிப்பிடத்தக்க பற்றாக்குறை (2.2 மில்லியன் தொன்களில் 1.27 மில்லியன் தொன்கள்) மற்றும் அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடுகள் பண்ணை மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்களுக்கான தேவையான பொருட்களில் பற்றாக்குறையை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் டிசம்பர் 2021 முதல் நவம்பர் 2022 வரையிலான உணவுப் பணவீக்கம் (சதவீத மாற்றம், கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது) தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ளதை உலக வங்கியின் தரவுகள் காட்டுகின்றன. அந்த புள்ளி விவரங்கள் இலங்கை மத்திய வங்கியின் தரவுகளின் அடிப்படையிலேயே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.




கடந்த மே மாதம், உலக வங்கி குழு மற்றும் G7 ஆகியவை பட்டினியின் உலகளாவிய நெருக்கடிக்கு உடனடி மற்றும் கூட்டுப் பதிலை வழங்கும் நோக்கத்துடன் "உணவுப் பாதுகாப்பிற்கான உலகளாவிய கூட்டணி" கூட்டப்பட்டதோடு, இது பொதுவில் அணுகக்கூடிய உலகளாவிய உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு தரவுத்தளத்தை அறிமுகப்படுத்தியது.

இதற்கமைய டிசம்பர் 2022 இல், இலங்கையில் போதுமான உணவு நுகர்வுக்கான சந்தர்ப்பம் இல்லாமை மற்றும் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 30.99 வீதமான மக்கள் பலவீனமான மற்றும் குறைந்தளவு உணவுவை நுகர்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது.







TITLE SPONSOR
MAHESAN SUBRAMANIAM
REAL ESTATE BROKER
eXp REALTY BROKERAGE
POWERED BY
ASIYANS
Quality Forever
அனலை எக்ஸ்பிறஸ்
Analai Express HD TV
PRIMA DANCE SCHOOL
STARZ DANCE
Bharadhi Arts
பாரம்பரியம்
முத்தமிழோடு கலைஞர்களின் சங்கமம்
Chinese Cultural Centre 5183 Sheppard Ave E,
Scarborough, ON M1B 5Z5
SATURDAY
JAN 07 2023 @ 4.PM
GOLD SPONSOR
MORTGAGE ALLIANCE
ARI PARAMALINGAM
Mortgage Agent
SILVER SPONSOR
OAJC
UTHAYA'S SUPER MARKET
YAARL CAKE HOUSE INC
DR. M. SATHIYABALAN
BRONZE SPONSOR
CAN LANKA IMMIGRATION SERVICE INC.
HIMALAYA BANQUET SERVICE
PIC
VASANTHA JEWELLERY
VIBRANT HOSPITALITY GROUP
Y&A
YOGI AND ASSOCIATES
Mr. Digital Photo Lab
AGA
VCAN
CENTURY 21
Vijitha Mylvaganam B.Sc
TORBRAM FIRE PROTECTION
HOMELIFE
GLORIOUS
PRINT MEDIA PARTNER
உதயன்
ஈழநாடு
STREAMING PARTNER
IBC தமிழ்
RADIO SPONSOR
Yugam Radio & TV
FM 88.9
416-441-4100
OTHER SUPPORTINGSPONSOR
Easy 24 News
TAMIL EVENTS PHOTOS
ஐயா 2U
eet TV
GTA தமிழ்
Tamil Mirror

Majestic City
Tasty தமிழா
OATC OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
NEW SPICELAND SUPER MARKET

# CENTRE FOR YOUTH EMPOWERMENT & COMMUNITY SERVICES - TORONTO

*Presents*

For tickets, visit:
www.universe.com
universe a ticketmaster company



# நீயா நானா புகழ் கோபிநாத்துடன்

# ஒரு மாலைப்பொழுது

## Chinese Cultural Centre
## 5183 Sheppard Avenue East.

## Saturday January 14th, 2023 at 6:30 PM

- அனைவரையும் மகிழ்விக்கும் கனடிய இளம் வாத்தியக் கலைஞர்களின் இனிய இசையோடு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.
- பின்னர் நீயா? நானா? புகழ் கோபிநாத் அவர்களுக்கான உயரிய கௌரவம் வழங்கப்பெற்று தொடர்ந்து அவர் ஒரு மணி நேர பயனுள்ள உரையாற்றுவார்.
- இறுதியில் மேடையில் அவருடன் புகைப்படம் எடுப்பதற்குரிய சந்தர்ப்பம் அனைவருக்கும் வழங்கப்படும்.

**For information, visit http://www.cyecstoronto.ca or**
**Call 647 762 9512 or 647-891-7725**
**E-mail: admin@cyecstoronto.ca**

RE/MAX ACE 416-270-1111
CHAMPIONS OFF TRACK BETTING 416-457-4300
MAHAANS Pick & Press Oil Mill Inc.
ASSORTED SOUTH INDIAN SNACKS & SWEETS 514-833-8332

Tasty தமிழா ™

தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக உலகெங்கும்...


பனை வெல்லம்


தேன் நெல்லி
மரச்செக்கு எண்ணெய்கள்


சுக்கு மல்லி காபி தூள்
யாழ். கறித்தூள்

இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள் பாரம்பரிய உணவு வகைகள்..

கனடாவில்
Tasty தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..

MAHAANS PICK & PRESS OIL MILL INC
Organic Bulk Store & Water Filling Station
5635 Finch Ave East,
Unit 5, Scarborough M1B 5K9.

Call:
416 293 4010

MAHAANS
PICK & PRESS OIL MILL INC



அனைவருக்கும் இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

இலங்கையிலுள்ள உங்கள் உறவினர்கள்
கனடா வருவதற்கான விசா
ஏற்பாடுகளை இலகுவான முறையில்
விரைவில் செய்து தருபவர்கள்...

- STUDENT VISA
- BUSINESS VISA
- FAMILY VISIT VISA
- SPOUSE VISA - WORK PERMIT
- SUPER VISA
- REJECTION VISA APPEAL & MANY MORE . . .

CANADA VISA REFUSED?
Don't Worry We have Solution!
Call or visit us with your documents.

விசா பெற்றுக்கொள்வதற்கு தேவையான
Bank Balance சம்பந்தமான ஆலோசனைகள் வழங்கப்படும்.

FINANCIAL SPONSORSHIP
Fixed Deposit, Saving Deposit, Bank Statements,
Student Loans & Many more . . .


P. Vijay
Director - Flex Institute

P. Jegan
Director - Flex Institute

+94 77 77 613 46

Level 12, Parkland Building
33 Park St, Colombo 2,
Sri Lanka.

www.flexinstitute.lk

flexinstitute

flexinstitute

flex Institute
Step Towards a Bright Future
10 Years of Trusted Services

# மாறிவரும் நூல் வெளியீட்டு முறையால் கைக்கு வரும் முன்பே கசப்பாகும் நூல்கள்

அண்மைய நூல் வெளியீடு ஒன்றின் அனுபவ அடிப்படையில் இக்கட்டுரையை எழுத விளைகின்றேன். மிகுந்த பனிப்பொழிவால் கடும் குளிரும் வழுக்கலும் அதிகமாய் இருந்த நாள் அது. அழைப்பு வந்ததே என்றதற்காக மட்டும் அல்ல புது நூலைப் பெறும் ஆர்வமது உந்தியதால் கனமான அந்த நூலுக்கு கனகாசு கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் வேலைப்பளுவின் மத்தியிலும் வகுப்புக்களை இடைநிறுத்தி சொன்ன நேரம் போய்ச்சேர்ந்தோம். அங்கு போனபோது இருந்த ஆர்வம் வரும்போது இருக்கவில்லை.




இன்றைய காலத்தில் பல இடங்களிலும் நூல்கள் பல வெளியிடப்படுகின்றன. இதற்காக கடினமாக உழைக்கும் எழுத்தாளர்களைப் பாராட்டியே தீரவேண்டும். அதில் எந்த மாற்றுக்கருத்துக்கும் இடம் இல்லை. பலகாலம் செலவழித்து பல்வேறு பாடுபட்டு தமது கற்பனைவளத்தாலும், திறத்தாலும், விடாமுயற்சியாலும், பல்வகையான தேடல்களாலும் ஒரு நூலை உருவாக்குகின்றார்கள். அவர்கள் அந்நூலை வெளியிடுவதற்காக வெளியீட்டு விழா ஒன்றை வைப்பதும் வழக்கமானது.

அந்த வழக்கத்தைக் கைக்கொள்ளும்போது நூல்வெளியீட்டு விழா என்ற நிகழ்வை எல்லோரும் சரியான முறையில் நடத்தி முடிப்பதில்லை என்பது மனவருத்தத்திற்கு உரியது. அனுபவம் வாய்ந்த கல்வியாளர்களது வெளியீடுகள் வேறு. அதில் குறை கூற வரவில்லை. நூல்வெளியீட்டில் அனுபவம் குறைந்த சிலர் எடுக்கும் நூல்வெளியீட்டு நிகழ்வுகள் நூற் பிரியர்கள், நல்ல வாசகர்கள் மற்றும் விழாவில் கலந்துகொள்ளும் ஏனையவர்களுக்கும் அதிர்ப்தியை ஏற்படுத்துகின்றது.

இந்த நிலை மாறவேண்டும் என்பதற்காக நூல்வெளியீட்டில் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு சில விடையங்களை எனது அறிவிற்கு எட்டிய வகையில் கூறிக்கொள்ள விளைகின்றேன்.

ஒரு நூல் வெளியீட்டில் வழக்கமாக இறைவணக்கம் அதற்குப் பின்பே மங்கள விளக்கு ஏற்றல் வரவேற்புரை, ஆசியுரை, சிறப்புரை, நூல் அறிமுக உரை, நூல் வெளியீடு, முதற்பிரதி மற்றும்சிறப்புப் பிரதி வழங்கல், நூல் ஆய்வுரை, ஏற்புரை, பிரதமஅதிதியின் உரை இறுதியில் நன்றியுரை என்பன நடைபெறுவது வழக்கம். நூல் வெளியீட்டுக்கு வருபவர்களுக்கு இவ்வாறான உரைகள் நடைபெறும் என்று தெரியும் அல்லது தெரிந்திருக்க வேண்டும். எத்தனையோபேர் எத்தனையோ வேலைப்பளுக்களின் மத்தியில்த்தான் இவ்வாறான நிகழ்வுகளுக்கு வருகின்றார்கள். மாலை நேர நிகழ்வு எனில் அடுத்தநாள் பாடசாலைகள் இருக்கும் எனில் இப்படியான நீண்ட உரைகளின் மத்தியில் இடையிடையே ஆட்டங்களும் பாட்டுக்களும் இடம் பெறுகின்றன. இத்தகைய ஆட்டங்கள் மற்றும் பாடல்கள் ஒரு நூல் வெளியீட்டிற்கு உகந்ததாகத் தெரியவில்லை. அந்த நூலோடு தொடர்புடையன ஆயினும் அதை தெரியப்படுத்த வேறுமுறைகளைக் கையாள்வதே சாலவும் சிறந்தது.

மேலும் நிகழ்சியினைப் பொறுப்பேற்று நடத்திச் செல்பவர்கள் அடுத்துவரும் நிகழ்ச்சியினைக் கூறுவதற்கிடையில் தமது வித்துவத்தை வெளிக்காட்டும் வகையில் அந்த நிகழ்வுக்குச் சம்பந்தமில்லாத தேவையற்ற விடயங்களைக் கூறி வந்திருப்போரின் பொறுமையைச் சோதிக்கின்றார்கள். இத்தகைய விடயங்கள் ஒரு நூல் வெளியீட்டில் தவிர்க்கப்பட்டவேண்டியவை.

அடுத்ததாக நூலைப்பற்றி அறிமுகம் செய்பவர்கள் நூலின் அட்டைப்பட விளக்கம் தொடங்கி நூலின் அமைப்பு அல்லது வடிவம் வரையும் ஓரளவேனும் கூறிக்கொள்ளல் வேண்டும். நூல் கூறும் விடயங்களை (உள்ளடக்கத்தை) நூலுக்கு பிறர் கொடுத்த உரைகளைப்பற்றி ஒரு சில வார்த்தைகளேனும் கூறி அத்தோடு நூலசிரியரைப் பற்றி ஒரு சில விடயங்களைக் குறிப்பிடுவது வழக்கம் அதுவே முறையும் எனக் கருதுகிறேன். நூலின் அறிமுக உரையே நூலை வாங்கவேண்டும் என்ற உந்துதலை ஏற்படுத்த வேண்டும்.

அதுவும் வாசகனது அல்லது நல்ல நூல்களை நாடிவருபவர்களது எதிர்பார்ப்பாகும்.

அடுத்து நூலை ஆய்வுசெய்பவர் நூலை முழுமையாகப் படித்திருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒருவரால்த்தான் நூலைத் திறம்பட ஆய்வு செய்ய முடியும். அவர் நூலில் உள்ளடக்கப் பட்டுள்ள விடயங்கள் அதாவது இலக்கிய நூல் எனில் கூறப்பட்ட விடயம், கூறப்பட்ட பாங்கு, அதன் நடை, சுவை, அது வெளிப்டுத்தும் உணர்வு இலக்கியத்தின் ஊடாக வெளிக்கொணரப்படும் விடயம் என்பன போன்ற விடயங்களோடு அட்டைப் படத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து அவர் தனது ஆய்வுரையை மேற்கொள்ள வேண்டும் இப்பொழுதெல்லாம் அட்டைப்படத்தைப் பற்றிப் பேசுவதை சில நூல் வெளியீடுகளில் காணமுடிவதில்லை என்பதுவும் மனவருத்தத்திற்கு உரியது.

வெளியிடப்படும் நூல் இலக்கணம் சார்ந்ததாக இருப்பின் அந்த நூலிற்கு உரிய ஆய்வுரை செய்பவர் மிகுந்த இலக்கண அறிவு உடையவராக இருக்கவேண்டும் அப்படிப்பட்ட ஒருவரால் மட்டுமே அந்த நூலைக் கையில் எடுத்து ஆய்வுரை வழங்க முடியும். உதாரணமாக பிறப்பியல், புணரியல் தெரியாதவர் அல்லது அறியாதவர் இலக்கண நூலை ஆய்ந்து கூற முடியுமா?

“உந்தி முதலா முந்து வளி தோன்றி
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும்...”

எனும் தொல்காப்பியச் சூத்திரம் தெரியாத ஒருவர் பிறப்பியலைப் பற்றிய அந்நூல் சொல்லும் கருத்தை ஆழமாக ஆராய்ந்து தனது சிறந்த ஆய்வுரையை வழங்க முடியுமா? புரியவில்லை.

அவ்வாறாக சிறந்த ஆய்வுரைக்கு உரிய ஒருவர் இல்லாத இடத்தில் அதை ஆய்வுரை என்று கூறாது விடுதல் மிகவும் பொருத்தமானது.

அடுத்து ஏற்புரை. இப்பொழுதெல்லாம் சரியான ஏற்புரை நிகழ்வதற்கு வாய்ப்புக்கிடைப்பது பெரிதும் குறைவு. நூல்வெளியீட்டுப் படப்பிடிப்புக்கள் அவ்வுரைக்கு இடம் கொடுப்பதில்லை அல்லது வேறு ஆட்டமோ பாட்டோ இடையில் வந்து குறுக்கிடுகின்றன. அவ்வாறே ஏற்புரை நிகழ்ந்தாலும் இடையில் வரும் நிகழ்வுகளால் வாசகர்கள் சலிப்படைந்து வெளியேறுகின்றனர்.

நூல் வெளியீட்டில் ஆய்வுரை நிகழ்த்தப்பட்டால் ஏற்புரை வழங்கப்படல் வேண்டும். ஆய்வு செய்தவரின் உரைக்கு உட்பட்டு அவர் கூறிய கருத்துக்களுக்கான பதிலாக அல்லது ஏற்பாக அந்த ஏற்புரை அமைவதுண்டு. இவையெல்லாம் ஒருபுறம் இருக்க அடுத்து நூல்வெளியீடு.

நூல் வெளியீடானது அறிமுக உரையை அடுத்து நடைபெறுவது. அந்நிகழ்வில் பிரதமஅதிதி முதற் பிரதியைப் பெற்றுக்கொள்ள அதைத் தொடர்ந்து முக்கிய பிரமுகர்களை அழைப்பதுண்டு. இதில் மிக முக்கியமான விடயம் முக்கிய பிரமுகர்கள் நூல் சம்பந்தமான அறிவு அல்லது நூலின் பெறுமதி தெரிந்தவராக இருந்தால் கொடுக்கப்படும் நூலிக்கும் மரியாதை அதை எழுதிய எழுத்தாளருக்கும் மரியாதை. அதனால் நூல் வெளியீட்டை நிகழ்த்துபவர்கள் அல்லது நூலாசிரியர்கள் முக்கிய பிரமுகர்களைத் தெரிவு செய்யும் பொழுது ஓரளவு இலக்கிய ஆளுமைகள், இலக்கிய அறிவு அல்லது ஈடுபாடு உள்ளவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும். அதுவே வரவேற்கத்தக்கதும் கூட. அல்லது அழைப்புக் கொடுத்தவர்களையேனும் கூப்பிடலாம். அதைவிடுத்து அந்த முக்கிய பிரமுகர்கள் என்ற பிரிவுக்குள் வர்த்தகப் பிரமுகர்களே அடக்கப்படுவதைக் காணும்போது பார்வையாளராக இருக்கும் மக்களுக்குமட்டுமல்ல (பெரியவர்கள்) இளைய தலைமுறையினர் கூட “இது புத்தக வெளியீடா அன்றி வர்த்தகமா? அன்றி விளம்பரமா?” என்றெல்லாம் கதைக்கும் அளவிற்கு சில இடங்களில் நூல் வெளியீடுகள் அமைந்துவிடுகின்றன. அன்றும் சிலர் அவ்வாறே பேசினார்கள்.

இப்படியான செயற்பாடுகள் எப்படியான தரமான நூலாக இருந்தாலும் அந்நூல் மக்களின் கைகளுக்குப் போய்ச்சேரும் முன்பே எண்ணத்தால் அதன் மதிப்பீடு குறைகின்றது. இதனை வெளியீட்டாளர்களோ அன்றி நூலின் உரிமையாளர்களோ நிச்சயமாகக் கருத்தில்கொள்வது மிகவும் அவசியமாகின்றது.

**- உமா மோகன்** (M.A) CANADA

வன்னிச் சங்கம் - கனடா.
VUnited Care for Kids Inc.
Organization - Reg # 1913383. Charitable Organization.
Head office address: 8-3500 McNicoll Ave, Toronto (ONT), M1V4C7.
Secretary@vcarekids.org info@vcarekids.com 416-644-1113.

21-12-2022,
**அனைத்து பொதுச்சபை உறுப்பினர்களுக்கும்,**
VUnited Care For Kids Inc Ontario ( வன்னிச் சங்கம்.)

**அன்புடையீர்!**

**பொதுச்சபை உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்கும் பொச்சபைக் கூட்டம் 2023.**

சமகாலத்தில் VUnited Care For Kids Inc Ontario பற்றிப் பலவிதமான குற்றச்சாட்டுக்கள் கனேடிய தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் தவறாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. இவ்வமைப்பினது நன்மதிப்புக்கு களங் கம் ஏற்படுத்தப்படுகின்றது. இவ்வாறு எங்கள் சமூகத்தவர்மத்தியில் தவறாக முன்வைக்கப்படுகின்ற கருத்துக்கள் அனைத்துக்கும் ஆதாரங் களுடனான விளக்கங்களைத் தருவதற்காக இப் பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே தாங்கள் அனைவரும் இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு உங்கள் ஐயப்பாடுகளைத் தெளிவுபடுத்திக் கொள்வதோடு உங்கள் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் எங்களுக்கு வழங்குமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

இடம்: 8-3500 McNicol Rd, Scarborough (ONT). காலம்: தை 28, 2023 மாலை 2.00 மணி.(சனிக்கிழமை)

To all members of the General Assembly.
VUnited Care For Kids Inc Ontario ( வன்னிச் சங்கம்.)

Dear all!
General Meeting for explanations among members of the General Assembly.
Currently, many allegations are being made about VUnited Care For Kids Inc Ontario among the Canadian Tamil community. Thus, the reputation of this organization is constantly being tarnished. This public meeting is to provide evidence explanations to all the misrepresented propaganda in our society. All members should participate and raise your questions and advice please.

Place: 8-3500 McNicol Rd, Scarborough (ONT). Time: January 28, 2023, மாலை 2.00 மணி. (Saturday)

Thank you.

Mr. R. Sivakumaran
President
VUnited Care For Kids Inc On

Mr. P. Sivasuthan
Secretary
VUnited Care For Kids Inc On

குறிப்பு: 2022ம் ஆண்டுக்கான சந்தாப்பணத்தினைச் செலுத்தாத அங்கத்தவர்கள் தை 15, 2023ம் திகதிக்கு முன்னதாக பொருளாளருடன் தொடர்பு கொண்டு அதனைச் செலுத்தியபின் இக் கூட்டத்தில் கலந்துகொள்ளமுடியும் என்பதனைக் கவனத்தில் கொள்ளவும்.

# வடக்கிற்கு தொடரும் சீன விஜயம் இந்தியா மீது குறியா?

- நடராசா லோகதயாளன்




தமிழர்கள் இந்தியாவிற்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதை கண்டு சீனா அநாவசியமாக அஞ்ச வேண்டியதில்லை என்று தமிழர் தரப்பு ஒன்று சீனாவிற்கு தெரிவித்துள்ளது.

ஈழத்தமிழர்கள் இந்தியாவின் கலாச்சாரத்தை ஒத்தவர்கள் என்பதனால் தாங்கள் இந்தியாவை நாடி நிற்பதால் அது தொடர்பில் சீனா அஞ்ச வேண்டிய தேவை கிடையாது என சீனத் துணைத் தூதுவரிடம் யாழ்ப்பாணம் பிரதிநிதிகள் எடுத்துரைத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திற்கு 28ஆம் திகதி மாலை வந்த சீனாவின் துணைத் தூதுவரை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆறுபேர் ஓர் விடுதியில் சந்தித்தனர். இதன் போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இதேநேரம் போரின்போது பாதிக்கப்பட்ட தரப்புடன் அன்றி பாதிப்பை ஏற்படுத்திய தரப்புடனேயே சீனா நின்றமை வருத்தமளிக்கின்றது என்றும் சீனக்குழுவை சந்தித்தவர்கள் கூறியுள்ளனர்.

விடுதலைப் புலிகளுடனான இறுதிப் போரின்போது சீனா மட்டுமல்ல இந்தியா, அமெரிக்கா உட்பட பல நாடுகள் அரசிற்கு உதவியமையும் எமக்குத் தெரியும் ஆனால் அவர்கள் தற்போதேனும் மாற்றிக்கொண்டாலும் சீனா இன்றுவரை அதனை மாற்றவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ தயார் இல்லை என்பதுதான் தமிழர்களின் கவலை என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சீனாவிற்கும் இலங்கைக்குமான உறவு என்பது அரசிற்கு அரசு என்பதாகவே இருக்கும் என்பதே சீனத்தரப்பு தொடர்ந்தும் வலியுறுத்துகின்றது என தெரிவித்துள்ளனர். அதன்போது இலங்கை வாழ் மக்களிற்கு தம்மாலான உதவிகளை அரசினூடாக தாங்கள் செய்து வருவதாகவும் சீனாவின் துணைத் தூதர் சுட்டிக்காட்டியதாக அறிய முடிகிறது.

எனினும், தற்போது இலங்கை அரசிற்கும் தமிழர் தரப்பிற்கும் இடையில் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் நோக்கில் பேச்சுவார்த்தை ஏற்பாடுகள் வேகமாக இடம்பெறுகின்ற சூழலில் அந்தப் பேச்சுவார்த்தை வெற்றியளிக்க வேண்டும் என்றாவது ஓர் அறிக்கையை சீனாவால் வெளியிட முடியுமா எனக் கேட்டபோதும் சீன அதிகாரிகள் மறுத்து விட்டனர் என அந்த கலந்துரையாடலில் பங்குபெற்ற வல்வெட்டித்துறையை சேர்ந்த மூத்த நிர்வாக அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை வடக்கிலே இயங்கும் பல ஊடகங்கள் பக்கச் சார்பான அல்லது சில தவறான புரிதலுடன் செய்திகளை வெளியிடுகின்றனர் என்ற கவலையை சீன அதிகாரி வெளியிட்டபோது தெல்லிப்பளையைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவர் அது தவறானது என்றும் மக்கள் சார்ந்த விடயங்களை ஊடகங்கள் தமக்குரிய நெறிமுறைகளின்படி வெளியிடுவதாகவும் கூறியுள்ளார். எனினும் வெளியாகும் செய்திகள் தவறாகவோ அல்லது உண்மைக்குப் புறம்பாகவோ இருப்பதாகக் கருதினால் அல்லது அறியப்பட்டால் அதனை உடன் தூதரகம் சுட்டிக்காட்டும் சமயம் வெளியான




செய்திக்கு வழங்கிய அதே முக்கியத்துவம் வழங்கப்பட்டு சீனத் தூதரகம் அனுப்பும் செய்தியும் உரிய கவனம் அளிக்கப்பட்டு வெளியிடப்படும். ஆனால் இன்றுவரை தூதரகம் அவ்வாறான அறிக்கை ஏதும் அனுப்பவில்லை என்று வலியுறுத்தியுள்ளார். அவ்வாறு தூதரகம் மறுப்பு அறிக்கை அனுப்பியும் ஊடகம் அதனை வெளியிடாத சந்தர்ப்பத்திலேயே தூதரகம் இவ்வாறான குற்றச்சாட்டை முன்வைக்க முடியும் அதுவரை இதனைக் கருத்தாக கொள்ளமுடியாது எனவும் சுட்டிக்காட்டினார்.

வடக்கிற்கு இரு நாள் பயணமாக வருகை தந்த சீனக் குழுவினர் மன்னார் மற்றும் யாழ்ப்பாணத்தில் பல்வேறு நிகழ்வுகளில் பங்குகொண்டிருந்தனர். முதலில் மன்னார் பகுதிக்குப் பயணித்த அவர்கள் அங்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் 300 குடும்பங்களிற்கான வாழ்வாதார உதவியை வழங்கி வைத்தனர். நாடு கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் நிலையில் தமிழர் தாயகப் பகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட விஜயத்தை மேற்கொண்டு சிலருக்கு மட்டுமே உதவிகளை வழங்கியுள்ளது பல கேள்விகளை எழுப்புகிறது என்று தமிழர் தரப்பு சிவில் சமூகத்தினர் கவலை வெளியிட்டுள்ளனர்.

மேலும் சீனக் குழுவுடன் மன்னாரில் மதிய உணவுடன் கூடிய ஓர் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. அதன் பிறகு மன்னார் மாதோட்டப் பகுதியில் ராஜமகா விகாரையில் குடிநீர்த் தாங்கி அமைக்க அத்திவாரம் இடும் நிகழ்வு விகாராதிபதியின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. இந்த நிகழ்வின்போதும் 150 குடும்பங்களிற்கு உதவிப்பொதி வழங்கப்பட்டது. அதில் அதிகமாக பெரும்பான்மை இன மக்களே கலந்துகொண்டனர்.

சீனக் குழுவினரின் உதவியளிக்கும் நிகழ்ச்சி திட்டமிட்ட வகையில் விளம்பரப்படுத்தப்பட்டது என்ற விமர்சனமும் எழுந்துள்ளது.



மன்னார் நிகழ்வுகளையடுத்து யாழ்ப்பாணத்திற்கு பயணித்த சீனக் குழுவினர் யாழ்ப்பாணம் கோட்டைக்குப் பயணித்து அதைப் பார்வையிட்டனர். இதனையடுத்து இரவு உணவுடன் யாழ் விடுதியில் ஓர் சந்திப்பும் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பிலேயே முன்னர் கூறிய கருத்துக்களும் பரிமாறப்பட்டன. 29ஆம் திகதியும் சீன தூதரக அதிகாரிகள் குடாநாட்டிலே பல நிகழ்வுகளில் பங்குகொண்டிருந்தனர்.

இலங்கையில் போரின் பின்னர் பல நாடுகள் தமது ஆளுமை மற்றும் ஆதிக்கத்தைச் செலுத்த முயல்வதைக் காண முடிகிறது. அதிலும் குறிப்பாக வடக்கு-கிழக்கில் ஆதிக்கத்திற்காக இந்தியாவும் சீனாவும் போட்டிப் போட்டு நன்கொடைகளை இறைக்க முயல்கின்றனர். இரு நாடுகளுமே குறிப்பாக மன்னாரிலும் யாழ்ப்பாணத்திலும் தமது பிடியை இறுக்க முயன்றாலும் யாழ்ப்பாணத்தைப் பொறுத்த மட்டில் இந்தியாவின் ஆதிக்கம் பலமாகவுள்ளதோடு தற்போதைக்கு அதனை பலவீனப்படுத்த சீனாவால் முடியவில்லை. ஆனாலும் அந்த பிடியைத் தளர்த்த அல்லது தகர்க்க சீனா கையாலும் உத்திக்கு இந்தியாவால் ஈடுகொடுக்க முடியுமா என்கின்ற கேள்வியும் தற்போது எழுகிறது. சீனாவின் முன்னெடுப்பைத் தடுக்கும் வகையிலோ அல்லது அதற்கு ஈடு கொடுக்கவோ இந்தியா வடக்கில் மேலும் அதிக உத்திகளையும் முயற்சியினையும் கையாலும் என்பதில் சந்தேகம் இல்லை. இருப்பினும் அவர்களின் நடவடிக்கையே இந்த விடயத்தில் வெற்றியை தீர்மானிக்கும்.

இதேநேரம் மன்னார் மாவட்டத்தின் நிலைமை வேறாகவுள்ளது. அங்கே சீனாவின் பிடி அல்லது தந்திரம் மேலோங்கவும் வாய்ப்பு காணப்படுகின்றது இதனை இந்தியாவும் உணர்ந்திருக்கலாம் இதனால் இராஜதந்திர நெருக்கடிகள் அதிகரிக்கலாம் என்றே கருதப்படுகின்றது.

யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதிக்குச் சென்ற சீன துணைத் தூதுவர் அதையும் சுற்றியுள்ள பகுதிகளையும் படமாக்கி தமது டிவிட்டரில் பதிவேற்றியுள்ள இரு படங்களில் யாழிலே இந்திய நிதியில் அமைக்கப்பட்டுள்ள கலாச்சார மண்டபத்தை குறிவைத்துள்ளமையும் புலனாகின்றது.

சீனா வடக்கே காத்திரமாகக் காலூன்ற காய்களை நகர்த்தினாலும், தாங்கள் கலாச்சாரத்தையோ மதத்தையோ அன்றி நட்பையே வளர்க்க விரும்புவதாக யாழ். மாவட்டச் செயலகத்தில் உலருணவுப் பொதி வழங்கும்போது சீன உதவித் தூதுவர் உரையாற்றியதும் கவனிக்கத்தக்கது.



அதுமட்டுமின்றி வடக்கு கிழக்குப் பகுதிகளிற்கு இந்தியத் தூதரக அதிகாரிகள் விஜயம் செய்வதைவிட சீனத் தூதரக அதிகாரிகள் கூடுதலாக தொடர்ந்து பயணிக்கின்றனர் என்பதையும் கவனத்தில் எடுக்க வேண்டும். சீனவிற்கு அப்பாற்பட்டு பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளும் அண்மைய காலத்தில் வடக்கிற்கான விஜயத்தை அதிகரித்துள்ளனர். சீனா மற்றும் பாகிஸ்தான் தூதரக அதிகாரிகள் கடலிற்கும் இறங்கி குறிப்பிட்ட தூரம் பயணித்துள்ளனர் என்பதையும் அவதானிக்க முடிகிறது.

அடிக்கடி வடக்கிற்கான விஜயத்தை மேற்கொள்வது, பொதுமக்களிற்கு நேரடியாக உதவிகளை வழங்குவது அரச அதிகாரிகள் மற்றும் தொண்டு அமைப்புடன் கலந்துரையாடுவது போன்ற நகர்வுகளை சீனா திட்டமிட்டு முன்னெடுக்கிற அதேவேளை சீனாவின் இப்படியான நகர்வுகளை இந்தியா அவதானித்துள்ளதா, அப்படியென்றால் என்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளது அல்லது எடுக்கப் போகிறது என்று தெரியவில்லை.

மொழி, இன, மத மற்றும் கலாச்சார தொடர்புகளிற்கு அப்பாற்பட்டு ஈழத்தமிழர்களுக்கும் இந்தியாவிற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது என்பதையும், இந்தியாவின் பாதுகாப்புடன் தமிழர் தாயக பெருநிலப் பரப்புடன் தொடர்பு கொண்டது என்பதை இந்தியா முழுமையாக உணர்ந்துள்ளதா என்பது தெரியவில்லை. ஆனால் அதை உணர வேண்டும், அதன் அடிப்படையில் செயல்பட வேண்டும் என்பதே ஈழத் தமிழர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது என்று பலதரப்பினர் கருதுகின்றனர்.



இலங்கை தொடர்ச்சியாக கேந்திர ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக மாறி வருகிறது. அதே வேளை ஆசியப் பிராந்தியத்தில் வல்லரசுகளாகத் திகழும் இந்தியா மற்றும் சீனாவிற்கு இடையேயான கேந்திர ரீதியான ஆளுமையைப் பரிசோதிக்கும் ஒரு களமாக மாறி வருகிறது. அதில் குறிப்பாகத் தமிழர்கள் பகடைக்காய்களாகப் பயன்படுத்தப்படுகிறார்கள் என்பது கசப்பான உண்மை.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 1029



## புற்றளை சித்திவிநாயகர் ஆலயம்
## புற்றளை, பருத்தித்துறை

**"விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்**
**விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே**
**விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்**
**கண்ணிற் பணிமின் கனிந்து."**

இவ்வாறான தத்துவங்களுள் ஒன்றாக விளங்கும் சித்தி என்ற அடைமொழியைக் கொண்டு அமைந்திருக்கும் புற்றளை சித்திவிநாயகர் ஆலயம் அமைந்திருக்கும் இடம், 1720 ஆம் ஆண்டளவில் பள்ளமான ஒரு வயல் நிலமாக விளங்கியுள்ளது. இந்நிலத்திலே ஒரு மாமரம் காணப்பட்டது. இம்மாமரத்தைச் சுற்றிவரப் புற்றும், இப்புற்றை மூடி நொச்சிப் பற்றையும் அமைந்திருந்தன. இவ்வயல் சிதம்பர விநாசியார் என்பவருக்குச் சொந்தமாகக் காணப்பட்டது. இவர் சிறந்த தெய்வ பக்தராகவும், ஆசாரசீலராகவும் விளங்கியுள்ளார்.

ஒருநாள் சிதம்பர விநாசியார் வயலை உழுவதற்காக நொச்சிப்பற்றையைஅகற்றி புற்றை வெட்டியபோது, கல்லாலான அழகிய விநாயகர் திருவுருவமொன்று வெளித்தோன்றியது. விநாயகர் திருவுருவம் கிடைத்த செய்தி ஊரெங்கும் பரவியது. இதனைத் தொடர்ந்து சிதம்பர விநாசியாரும், ஊரவர்களும் ஒருங்கு சேர்ந்து குடிசையொன்றமைத்து, அதில் விநாயகரை எழுந்தருளச் செய்து வழிபாடியற்றி வந்தனர். தன்னை வணங்கியவர்க்கெல்லாம் சித்திகளைக் கொடுப்பவராக விளங்கிய காரணத்தால் சித்திவிநாயகர் என்ற அடைமொழியோடு புற்றளையிலுள்ள விநாயகர் அழைக்கப்பட்டார்.

புற்றளையிலுள்ள சித்திவிநாயகர் ஆலயத்தை ஊரவர்கள் பிள்ளையார் கோவில் என அழைத்து மகிழ்வர். புற்றளை சித்திவிநாயகருக்கு குடிலமைத்து எழுந்தருளச் செய்த சிதம்பர விநாசியார் சிவபதமடைய, அவரது பிள்ளைகளான சீதேவன், வள்ளியார் என்போர் ஆலயப்பொறுப்பை ஏற்றனர். இவர்கள் அயலூரான வதிரியில் வசித்த ஒருவரிடம் இவ்வாலயத்தின் பூசைப்பொறுப்புக்களை ஒப்படைத்தனர். ஆயினும் எதிர்பார்த்தமுறையில் ஆலயத்தில் பூசை வழிபாடுகள் ஒழுங்காக இடம்பெறவில்லை. இதனால் சிதம்பர விநாசியாரின் பிள்ளைகள் மனம் நொந்து ஆலயத்திலே பூசை வழிபாடுகள் சிறப்பாக நடைபெற அருள்புரிய வேண்டும் என விநாயகரிடம் வேண்டினர். மனமுருகி வேண்டும் பக்தர்களின் துயர் துடைத்த பிள்ளையாரின் கதைகள் பல புராணங்களிலே கூறப்பட்டுள்ளது. சிதம்பர விநாசியாரின பிள்ளைகளின் வேண்டுதலும் நிறைவேறும் காலம் நெருங்கியது.

இவ்வாறான நிலையில் வேதாரணியத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பண்டாரம் ஒருவர் மருதங்கேணிக்கும் ஆனையிறவுக்கும் இடையே அமைந்த மண்டலாய் திருப்பதியில் பூசை செய்துகொண்டிருக்கும் தனது பேரனைக் காணவேண்டி, புற்றளை சித்திவிநாயகர் ஆலயம் அமைந்திருக்கும் பாதையால் சென்றார். அப்போது இவ்வாலயம் அமைந்திருக்கும் குடிசைக்கு அண்மையில் வந்தபொழுது பசியினால் களைப்புற்றுக் காணப்பட்டார். அப்பொழுது அவ்விடத்திலே மாடுமேயத்துக்கொண்டிருந்த சிறுவனிடம் சென்று, அவ்விடத்திலே வாழ்வோரைப்பற்றிக் கேட்டறிந்தார். ஆலயச்சூழலிலே வாழும் சிதம்பர விநாசியாருடைய வழிவந்தோர் ஆசாரசீலர்கள் என்பதை அறிந்து அவர்களிடம்சென்று தன்நிலையைக் கூறி, சமைத்துச் சாப்பிட பாத்திரங்களும், பண்டங்களும் தந்துதவுமாறு கேட்டுக்கொண்டார்.

பெரியவர் பண்டாரத்தினுடைய வேண்டுதலுக்கிணங்க சிதம்பர விநாசியாருடைய பிள்ளைகள் அவருக்குப் பாத்திரங்களும், பண்டங்களும் கொடுத்து, புற்றளை சித்திவிநாயகர் ஆலயத்திற்கு அவரை அழைத்துச்சென்று, அங்கு எழுந்தருளியிருக்கும் விநாயகர் தோன்றிய வரலாற்றினை எடுத்தக்கூறி, அவ்வாலயத்திலேயே பொங்கிப் படைத்து பூசை செய்து உணவருந்துமாறு வேண்டினர்.

பெரியவர் பண்டாரமும் சிதம்பர விநாசியாருடைய பிள்ளைகளின் வேண்டுதலுக்கு உடன்பட்டு, அவ்வாலயத்திற்குச் சென்று அவ்விடத்திலேயே சமைத்து உணவுண்டார். இவ்வாறு தங்கியிருந்த பெரியவரிடம், இவ்வாலயத்தின் பூசையைத் தாங்களே மேற்கொள்ள வேண்டும் என சிதம்பர விநாசியாருடைய பிள்ளைகள் பணிவாக வேண்டினர். பெரியவர் அவர்களின் வேண்டுகோளை ஏற்கவில்லை. ஆயினும் சித்திவிநாயகருடைய அருளினால் அவருக்கு அருட்குறிப்புகள் பல ஏற்பட்டது. இதனால் மனம்மாறி, மீண்டும் சித்திவிநாயகர் ஆலயத்திற்கு வந்து பூசைப்பொறுப்புக்களை மகிழ்வோடு ஏற்றுக் கொண்டார்.

*வளரும்...*




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court -Unit 300
Scarborough ON M1B 3C6

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# புத்தாண்டு கொண்டாட்டத்தில் போதை பொருள், ஆபாச நடனம் கூடாது சென்னை காவல் ஆணையர் எச்சரிக்கை



ஆங்கில புத்தாண்டு கொண்டாட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து சென்னை வேப்பேரியில் உள்ள ஆணையர் அலுவலகத்தில் காவல் ஆணையர் சங்கர் ஜிவால்நேற்றுசெய்தியாளர்களிடம்கூறியதாவது: ஆங்கில புத்தாண்டு கொண்டாட்டம் எவ்வித அசம்பாவிதமும் நடக்காமல் மகிழ்ச்சியுடன் அமைவதற்குத் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை சென்னை காவல் துறை செய்துள்ளது. பாதுகாப்புப் பணியில் 16 ஆயிரம் போலீஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஊர்காவல் படையைச் சேர்ந்த 1,500 பேரும் ப'ணியாற்றுவார்கள். 368 இடங்களில் வாகன தணிக்கை நடைபெற உள்ளது.

மது போதையில் வாகனம் ஓட்டினாலோ, அதிவேகமாக வாகனங்களை இயக்கினாலோ வழக்குப் பதிவு செய்து வாகனம் பறிமுதல் செய்யப்படும். ஓட்டுநர் உரிமமும் ரத்து செய்யப்படும். மது போதையில் விபத்து உயிரிழப்பை ஏற்படுத்தினால் கொலை வழக்குக்கு நிகரான பிரிவில்வழக்கு பதியப்படும். 18 வயதுக்கு உட்பட்டோர் வாகனம் ஓட்டினால் பெற்றோர் மீது நடவடிக்கை பாயும்.பைக் ரேஸைத் தடுக்க 25 கண்காணிப்பு சோதனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், 100 முக்கிய கோயில்கள், தேவாலயங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.31ம் தேதி மாலை முதல் ஜன. 1ம் தேதி வரை பொதுமக்கள் கடலில் இறங்கவோ, குளிக்கவோ அனுமதி கிடையாது. மேலும் முக்கிய இடங்களில் ட்ரோன்கள் மூலம் கண்காணிக்கப்பட உள்ளது. கொண்டாட்டம் முடிந்த பின்னர் பொதுமக்கள் எளிதாக வீடு திரும்ப தனியார் நிறுவனத்துடன் இணைந்து வாகன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக ஆங்காங்கே 'கியூ.ஆர் கோடு' ஸ்டிக்கர் ஒட்டப்பட்டுள்ளது.பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நட்சத்திர விடுதிகள், பண்ணை வீடுகளிலும் உரிய அனுமதி பெற்றே கொண்டாட்டத்தில் ஈடுபட வேண்டும்.

கொண்டாட்டத்தின்போது போதைப் பொருட்கள் பயன்படுத்துவது தெரிந்தால் நிகழ்ச்சி உடனடியாக ரத்து செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட இடத்துக்கு சீல் வைக்கப்படும். 1ம் தேதி அதிகாலை 1 மணிக்குள் கொண்டாட்டத்தை முடித்துக்கொள்ள வேண்டும். தமிழக அரசின் கரோனா வழிகாட்டுதல் நெறிமுறைகளைக் கடைபிடித்து, புத்தாண்டைக் கொண்டாட வேண்டும்.1ம் தேதி அதிகாலை 1 மணியுடன் நட்சத்திர ஓட்டல்கள், கேளிக்கை விடுதிகளில் உணவு வழங்குதல் மற்றும் மதுபான விற்பனையை நிறுத்திக்கொள்ள வேண்டும். இங்கு வரும் வாகனங்கள் முறையாகச் சோதனைசெய்யப்பட வேண்டும். அனைத்து நுழைவாயில்கள் மற்றும் தேவைப்படும் இடங்களில் சிசிடிவி கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு, வளாகத்துக்குள் வரும் நபர்கள்மற்றும் வாகனங்களின் விவரங்கள் பதிவு செய்யப்பட வேண்டும்.

அரங்கத்துக்குள் 80 சதவீதத்துக்கு மேல் நபர்களை அனுமதிக்கக் கூடாது.நீச்சல் குளத்தின் மீதோ அருகிலோ தற்காலிக மேடைகளை அமைக்கக் கூடாது. கஞ்சா, போதை மருந்து உள்ளிட்ட போதைப் பொருட்கள் விநியோகம், உட்கொள்வதை ஓட்டல் நிர்வாகத்தினர் கண்காணிக்க வேண்டும். இதுகுறித்து காவல் துறைக்கு உடனேதகவல் கொடுக்க வேண்டும். கலாச்சார நடனங்கள் தவிர ஆபாச நடனம் மற்றும் அருவருக்கத்தக்க கேளிக்கை நடனங்கள் நடைபெறாமல் கண்காணித்து தடை செய்ய வேண்டும். மது அருந்தி வெளியே வரும் விருந்தினர்களை, மாற்று வாகனம் மூலம் அனுப்பி வைக்க, ஓட்டல் நிர்வாகம் ஏற்பாடு செய்ய வேண்டும். காவல் துறை கூறிய விதிமுறைகளை மீறும் நட்சத்திர ஓட்டல், கிளப், பார் மற்றும் கேளிக்கை விடுதிகளின் நிர்வாகத்தின் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.மெரினா காமராஜர் சாலை, போர் நினைவிடம் முதல் கலங்கரை விளக்கம் வரை மற்றும் கடற்கரை உட்புற சாலை ஆகியவை 31ம் தேதி இரவு 7 மணி முதல் 1ம் தேதி காலை 6 மணிவரை மூடப்படும். கடற்கரை உட்புறசாலையில் 31ம் தேதி இரவு 7 மணி முதல் வாகனங்கள் நிறுத்த அனுமதிக்கப்படாது.

வாகனங்களை நிறுத்த மெரினா மற்றும் பெசன்ட் நகரைச் சுற்றி சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு காவல் ஆணையர் தெரிவித்தார். மணற்பகுதிகளுக்கு செல்ல தடை: இதற்கிடையே புத்தாண்டு கொண்டாட்டத்தின்போது கடற்கரை மணற்பகுதிகளுக்கு பொதுமக்கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக காவல்துறை வெளியிட்டுள்ள செய்தியில், ''பொதுமக்கள் நலன் மற்றும் பாதுகாப்பை கருத்தில் கொண்டு 31ம் தேதி இரவு 8.00 மணிக்கு மேல் சென்னை பெருநகர காவல்துறை எல்லைக்குட்பட்ட மெரினா, சாந்தோம், பெசன்ட் நகர்எலியட்ஸ், நீலாங்கரை, பாலவாக்கம், காசிமேடு, திருவொற்றியூர் உள்ளிட்ட அனைத்து கடற்கரை மணற்பகுதிகள், கடற்கரை ஓரங்களில் பொதுமக்களுக்கு அனுமதி இல்லை. ஆகவே, மணற் பகுதிக்கு யாரும் வரவேண்டாம்'' என்று கூறப்பட்டுள்ளது.

# வட மாநிலத்தவர்களால் தமிழர்கள் அடுத்தடுத்து கொலை; கண்காணிக்க தனித்துறை தேவை: வேல்முருகன்



வட மாநிலத்தவர்களால் தமிழர்கள் அடுத்தடுத்து கொலை செய்யப்படுவதைக் கட்டுப்படுத்த மற்றும் கண்காணிக்க தனித்துறை தேவை என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது: தமிழகத்தில் வடமாநிலக் கொள்ளையர்கள் அடுத்தடுத்து நடத்திவரும் கொலை மற்றும் கொள்ளை நிகழ்வுகள் பொதுமக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. தர்மபுரி மாவட்டம் பொம்மிடி குறிஞ்சிப்பாடியை சேர்ந்தவர் சந்தோஷ். இவர், சேலம் மாவட்டம் தீவட்டிப்பட்டியில் கம்பி மற்றும் சிமெண்டு மொத்த வியாபார கடை நடத்தி வந்துள்ளனர்.

இந்த கடையில், பிஹார் உள்ளிட்ட வடமாநிலங்களை சேர்ந்த இருவர் வேலை பார்த்து வந்துள்ளனர். இந்நிலையில், சந்தோஷிடம் இருந்த 4 இலட்சம் ரூபாய் பணம் பறிக்க முயன்ற அந்த வடமாநிலத்தவர்கள், அவரை கொடூரமான முறையில் குத்தி கொலை செய்துள்ளனர். இத்தகைய நிகழ்வு பேரதிர்ச்சி அளிக்கிறது.சமீபத்தில், கடந்த 06.04.2022 ஈரோடு மாவட்டத்தில் தொழிற்சாலை ஒன்றில், பேச்சுவார்த்தைக்கு சென்ற காவல்துறையினரை வடமாநிலத்தினர் விரட்டி விரட்டி தாக்கினர். இதற்கு முன்பு, கடந்த 20.02.2022 பெரம்பலூரில் பயணச்சீட்டு எடுக்கச் சொன்ன அரசுப் பேருந்து நடத்துனரை வடமாநிலத்தினர் பேருந்திலிருந்து தள்ளிவிட்டு தாக்கினர்.

இவ்வாறு, மிகை எண்ணிக்கையில் தமிழ்நாட்டிற்கு வந்துள்ள வடமாநிலத்தினர் தமிழ்நாட்டில் இதுபோல் தாக்குதல்களில் ஈடுபடுவதும், கொலை கொள்ளை போன்ற சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவது அதிகரித்துள்ளது.இது ஒருபுறம் இருக்க, தமிழகத்தில் பெண்கள், குழந்தைகள் என முன்பதிவு செய்து செல்லும் பெட்டிகளில் முறையான பயணசீட்டு இன்றி அதிக அளவிலான வடமாநிலத்தவர்கள் பயணம் செய்யும் போக்கு, நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கடந்த இரு நாட்களுக்கு முன்பு, அசாம் மாநிலத்திற்கு செல்லும் பெங்களூரு விரைவு ரயிலில் டிக்கெட் எடுக்காமல் சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட வடமாநிலத்தவர் முன்பதிவு செய்திருந்த பெட்டிகளில் மூட்டையை கட்டிக்கொண்டு ஏறியுள்ளனர்.இதனால் பாதிக்கப்பட்ட தமிழக மாணவர்கள், ரயில்வே காவல் துறைக்கு புகார் தெரிவித்ததையடுத்து திருவொற்றியூரில் ரயில் நிறுத்தப்பட்டு, 500க்கும் மேற்பட்ட வடமாநிலத்தவர்கள் வெளியேற்றப்பட்டனர்.

அடிப்படை ஒழுக்கமோ மனித அறமோ நேயமோ இல்லாத இப்படிப்பட்ட வடவர்களை தமிழ்நாட்டிற்குள் அனுமதிப்பது மிகப்பெரிய ஆபத்து என தமிழக வாழ்வுரிமைக் கட்சி தொடர்ந்து எச்சரித்து வருகிறது.பாஜக, ஆர்.எஸ்.எஸ் உள்ளிட்ட ஆரியத்துவ சங்கிகளை தமிழகத்தில் நிலைப்படுத்தவே இவர்கள் திட்டமிட்டு களமிறக்கப்படுகிறார்கள். இவர்களுக்காகவே ஒரே நாடு ஒரே ரேசன் திட்டம் தயாராகிறது. எனவே, தமிழகத்தில் வடமாநிலத்தவர்களால் நாளுக்கு நாள் அதிகரித்து வரும், இந்த அநீதியைத் தடுக்க, தமிழகத்தில் குடியேறும் வெளி மாநிலத்தவருக்கு வாக்காளர் அட்டை குடும்ப அட்டை ஆதார் அட்டை வழங்கக் கூடாது.நாகாலாந்து, மிசோரம், அருணாச்சலப் பிரதேசம், மணிப்பூர் மாநிலங்களில் உள்ளதைப் போல் வெளி மாநிலத்தவர் தமிழகத்திற்குள் நுழைய உள் அனுமதிச் சீட்டு முறை கொண்டு வர வேண்டும். தமிழகத்தில் அதிகரித்து வரும் வடமாநிலத்தவர்களின் எண்ணிக்கையை குறைக்கவும், கட்டுப்படுத்தவும், கண்காணிக்கவும், தனித் துறை உருவாக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

இதனை கருத்தில் கொண்டு, எதிர் வரும் சட்டப்பேரவை கூட்டத்தொடரில், இதற்கான தீர்மானத்தை தமிழக அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என தமிழக வாழ்வுரிமைக் கட்சி கேட்டுக் கொள்கிறது.தனித்துறையை உருவாக்கும் வரை, தமிழகம் முழுவதும் பரவியுள்ள வடமாநிலத்தவர்களை, மாவட்ட வாரியாக கணக்கெடுப்பை நடத்த வேண்டும். அவர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ள, வாக்காளர் அட்டை குடும்ப அட்டை ஆதார் அட்டைகளை திரும்ப பெற வேண்டும். சேலம் மாவட்டம் தீவட்டிப்பட்டியில் சந்தோஷ் கொலைக்கு காரணமான, வடமாநிலத்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.உயிரிழந்த சந்தோஷ்க்கு தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் இரங்கலை தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறேன்.'' இவ்வாறு வேல்முருகன் தெரிவித்துள்ளார்.

### புதுச்சேரியில் பொங்கலுக்குள் ஏழைப் பெண்களுக்கான ரூ.1,000 உதவித்தொகை திட்டம் தொடக்கம்: முதல்வர் ரங்கசாமி

அரசின் எந்த உதவியும் பெறாத 13,000 ஏழைப் பெண்களுக்கு மாதம் ரூ.1000 உதவித்தொகை தரும் திட்டம் பொங்கலுக்குள் தொடங்கப்படும் என்று முதல்வர் ரங்கசாமி தெரிவித்துள்ளார். புதுச்சேரி சட்டப்பேரவை வளாகத்தில் செய்தியாளர்களிடம் முதல்வர் ரங்கசாமி கூறியது: ''அரசின் மாதாந்திர உதவித்தொகை ஏதும் பெறாத 21 முதல் 55 வயதுக்குள் இருக்கும் ஏழைக் குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று பட்ஜெட்டில் அறிவித்திருந்தோம். இத்திட்டம் வரும் பொங்கலுக்குள் தொடங்கப்படும். அதேபோல் பள்ளி மாணவர்களுக்கு இலவச சைக்கிள், லேப்டாப் ஆகியவையும் ஜனவரி முதல் தரப்படும்.

# பிராயச்சித்தம் தேடிக் கொள்ள விழைகிறாரா ரணில்?

**சிவா பரமேஸ்வரன் - லண்டன்**



ஒப்பாரிக்கோச்சி, கசந்த கோப்பி, பஞ்சம் பிழைக்க வந்த சீமை, காலங்கள் சாவதில்லை போன்ற புத்தகங்களை வாசிக்க மனதில் தைரியமும் உறுதிப்பாடும் தேவை. அப்படியான வரலாற்றுப் பதிவுகள் 200 ஆண்டுகளாக நவகாலனித்துவ அடிமைகளாக இலங்கையின் தேயிலைத் தோட்டங்களில் முதுகெலும்பு முறிய, ரத்தத்தை நீராக்கி, வியர்வையை உரமாக்கி உழைத்த மக்களின் கண்ணீர் கதைகளை எக்காலத்திற்கும் தாங்கி வரும் காவியங்களாகும்.

படிப்பவர்கள் அதிர்ச்சி மற்றும் வேதனையில் உறைந்து போவார்கள். இப்படியான படைப்புகளை வாசிக்கும் போது அவை புனைவுகள் இல்லை இடம்பெற்ற கொடுமைகளின் கதை என்கிற உண்மை புரியும். இலங்கையின் தேயிலை மற்றும் ரப்பர் தோட்டங்களில் பிறந்து, வாழ்ந்து, உழைத்து, நாட்டிற்கு பன்னாட்டளவில் பெருமையும் அங்கீகாரமும் தேடித்தந்த சமூகம் இந்திய வம்சாவளியினர். அவர்களின் சொல்லொணா சோகக்கதைகளை அழியா காவியமாக்கியவர்கள் கோ.நடேசையர், தெளிவத்தை ஜோசப், மு.சிவலிங்கம், இராமையா சடகோபன், சாரல் நாடன் போன்ற பலர். அவர்கள் அனைவரின் ஒவ்வொரு படைப்பிலும் தோட்டத் தொழிலாளர்களின் அன்றாட வாழ்க்கைப் போராட்டம் ஆழமாக வெளிப்படும்.

இலங்கைக்கு இன்றைய நிலையில் சர்வதேசளவில் ஓரளவேனும் ஒரு பெயர் உள்ளது என்றால், அது அந்த மக்களின் உழைப்பில் விளைந்த "சிலோன் டீ" என்கிற வர்த்தக பெயரால் மட்டுமே. அதனையும் பார்க்க நாட்டிற்கு "மிகப்பெரிய" பெயரைப் பெற்றுக் கொடுத்தது உள்நாட்டு யுத்தமும் அத்துடன் இடம்பெற்ற பாரிய மனித உரிமை மீறல்களுமே ஆகும்.

அவ்வகையில் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வலு சேர்த்த சமூகத்தை மேம்படுத்துவதற்கான எண்ணம் ஏற்படுவதற்கே 200 ஆண்டுகள் ஆகியுள்ளன என்பதே ஒரு நாடு எந்தளவில் தனது மக்களின் நலனின் அக்கறை கொண்டுள்ளது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

இலங்கையில் போர்க் காலத்திற்கு முன்னர் பொருளாதார ரீதியாக சிறப்பாக முன்னேறுவதற்கு அதன் தேயிலைத் தோட்டங்களிலிருந்து வந்த வருமானம் மட்டுமே முக்கிய காரணம். அதன் மூலம் நாட்டில் பல வளர்ச்சிப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன என்பது வரலாறு. அந்தளவிற்கு தேயிலை நாட்டிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டுத்தந்தது. அதன் மூலம் பெறப்பட்ட நிதியாதாரங்கள் மூலம் சாலைகள், கல்விக்கூடங்கள், போக்குவரத்து அபிவிருத்திகள், மருத்துவமனைகள் போன்ற பல விஷயங்கள் சாத்தியமாயின என்பதை வரலாற்றை ஆழமாக வாசிக்கும் போது உணர முடிகிறது. அதே போன்று அண்மைய காலங்களில் ஆயத்த ஆடை உற்பத்தி, சுற்றுலாத்துறை போன்றவையும் நாட்டின் வருமானத்திற்கு கணிசமான பங்களிப்பைச் செய்து வந்தன. எனினும் போர்க்காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், பொறுப்புக்கூறல் முன்னெடுக்கப்படாமை, ஸ்திரமற்ற ஆட்சி, தவறான கொள்கைகள், இராணுவமயப்படுத்தப்பட்ட நிர்வாகம், தேவைக்கும் அதிகமான இராணுவத்தினரின் எண்ணிக்கை மற்றும் அதன் காரணமாக ஏற்படும் தொடர்ச்சியான செலவினங்கள் போன்றவற்றைச் சமாளிக்க தோட்டத் தொழிலாளர்களின் பங்களிப்பும் கறுத்துப்போன அவர்களின் கைகளால் பறிக்கப்படும் தேயிலையும் மிக முக்கியமான காரணமாகும்.

ஆனால், அரகலய போராட்டத்தின் மூலம் பதவியிலிருந்து விரட்டப்பட்ட கோட்டாபய ராஜபக்ச, இரானிடமிருந்து வாங்கிய கடனிற்காக லட்சக்கணக்கான தோட்டத் தொழிலாளர்களை அடமானம் வைத்து தேயிலை மூலம் கடனை அடைக்க ஒப்பந்தம் செய்தார். ஒரு நாடு வாங்கிய கடனிற்கு ஒரு சமூகம் மட்டுமே எப்படிப் பொறுப்பாக முடியும்? அது நியாயமானதா என்று எவரும் கேட்க முன்வந்ததாக நான் அறியவில்லை. தமிழ் அரசியல்வாதிகள்-குறிப்பாக யாழ்ப்பாணத்தை மையமாக வைத்து அரசியல் செய்பவர்களுக்கு மலையகத்தில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் இருந்தால் என்ன செத்தால் என்ன?



என்கிற என்கிற மனோபாவமே உள்ளது.

ராஜபக்சக்களின் ஆட்சி முடிவிற்கு வருவதற்கும் கோட்டா நாட்டைவிட்டு ஓடுவதற்கும் மின்வெட்டு மற்றும் அதனால் மக்கள் எதிர்கொண்ட பிரச்சனைகள் முக்கியமானதொரு காரணியாக இருந்தது. அத்துடன் சமையல் எரிவாயு, வாகனங்களிற்கான எரிபொருள் கிடைக்காமல் மக்கள் மணிக்கணக்கில் வரிசையில் நின்றது போன்றவையே அரகலயவிற்கு தூண்டுதலாக அமைந்தது.

இந்திய வம்சாவளி தமிழர்கள் எதிர்கொள்ளும் சமூக-பொருளாதார ரீதியிலான சவால்களும், பிரச்சனைகளும், சிறுமைப்படுத்தலும், தொடர்ந்து கொத்தடிமைகளாக வைக்கப்பட்டுள்ளதும் அனைவரும் அறிந்ததே. இன்று நாட்டில் பல மணி நேரங்கள் மின்வெட்டு என்பது வாடிக்கையாகியுள்ள நிலையில், மலையகத்தில் ஆரம்பக்காலம் முதலே நிலை மோசமாக இருந்துள்ளது. ஆனால் அது எவ்வளவு மோசமாக இருந்துள்ளது என்பதற்கு ஒரு சிறிய உதாரணத்தை மேற்கோள் காட்ட விரும்புகிறேன். அவர்களின் சமூக-பொருளாதார நிலையை நேரில் கண்டறிந்து அதை பிபிசி தமிழோசைக்கு நிகழ்ச்சித் தொடராக தயாரிக்க மலையகத்தின் பல பகுதிகளிற்கு பயணித்து அவர்களுடன் தங்கி, உண்டு, அதிகாலை உடன் சென்று பெற்ற அனுபவம் மற்றும் பதிவுகளின் அடிப்படையில் "மலருமா மலையக மக்களின் வாழ்க்கை" எனும் 15 வார தொடர் நிகழ்ச்சியைத் தயாரித்தேன்.

இந்திய வம்சாவளி மலையக மக்களின் ஏராளமான பிரச்சனைகளிற்கு அப்பாற்பட்டு ஒரு கிராமத்திலுள்ளவர்கள் தொடக்கக் காலம் முதலே மின்சாரம் இல்லாமல் வாழ்ந்து வருவது எனக்குள் பெரும் தாக்கத்தையும் நெருடலையும் ஏற்படுத்தியது. அதற்கு முக்கிய காரணம் அந்த தோட்டம் இருக்கும் இடம். இலங்கையின் முதலாவது நீர்மின் நிலையமான லக்சபானவிற்கு மிகவும் அருகிலுள்ள தோட்டம் சவுத் வனராஜா தோட்டம். அந்த கிராமத்தின் வழியாக மின்கம்பிகள் மூலம் நாட்டின் இதர பகுதிகளிற்கு மின்சாரம் எடுத்துச் செல்லப்பட்டாலும் அந்தத் தோட்டத்திற்கு மின் வசதி இல்லை. இதை அப்போது துணை அமைச்சராக இருந்த முத்து சிவலிங்கம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனின் பார்வைக்கு எடுத்துச் சென்றேன்.



இருவரும் அது குறித்து உடனே நடவடிக்கை எடுப்பதாகக் கூறினர். அவ்வகையில் மனோ கணேசன் அந்தத் தோட்டத்து மக்களை கொழும்பிற்கு அழைத்து வந்து உரியவர்களிடம் கூட்டிப் போய் எனது நிகழ்ச்சி ஒலிபரப்பான 100 நாட்களிற்குள் சவுன் வனராஜா தோட்டத்திற்கு மின்வசதி கிடைக்கச் செய்தார். அதை "தமிழோசையால் ஒளிர்ந்த மலையகத் தோட்டம்" என்ற தலைப்பில் நான் பிபிசி தமிழோசையின் இணையத்திற்கு மீண்டும் ஒரு கட்டுரையாக எழுதினேன்.

மலையகப் பகுதிகளில் வாழும் இந்திய இந்திய வம்சாவளி மக்களே நாட்டில் மிகவும் பின் தங்கியவர்களாக உள்ளனர். இதை அரசின் சமூக-பொருளாதார தரவுகள் காட்டுகின்றன.

தமிழ்நாட்டில் சமூக ரீதியாக மிகவும் பின் தங்கியிருந்த மக்களே இலங்கையின் காப்பி மற்றும் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்ய ஆங்கிலேயர்களால் கொண்டுவரப்பட்டனர். அவர்கள் அவ்வகையில் இலங்கைக்கு வந்து அடுத்தாண்டு (2023) இருநூறு ஆண்டுகள் நிறைவடைகின்றன.

கடந்த 200 ஆண்டுகளாக நவகாலனித்துவ அடிமைகளாகவே தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வரும் இவர்கள் தேசிய பொருளாதாரத்திற்கு ஆற்றியுள்ள பங்கினை அங்கீகரிக்க அதிகாரபூர்வமான மதிப்பீட்டை இலங்கை அரசு முடிவு செய்துள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங கூறியுள்ளார். மிக மிக காலதாமதமாக அந்த முன்னெடுப்பு வந்திருந்தாலும், அதை வரவேற்பதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் கூறுகிறார். ஆனால், அது அமைச்சரவை பத்திரம் தாக்கல் மற்றும் பேச்சுடன் நின்றுவிடாமல், ஆக்கபூர்வமாக முன்னெடுக்கப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். அந்த மதிப்பீட்டின் மூலம் இந்திய வம்சாவளி தமிழர்களின் வாழ்வு மேம்பட காத்திரமான திட்டங்கள் தீட்டப்பட்டு அவை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் ரணிலிடம் நேரடியாகத் தெரிவித்துள்ளார்.

மலையக மக்களின் வாழ்க்கை மேம்பட இலங்கையின் பொருளாதாரம்

இடங்கொடுக்கவில்லையென்றால், இந்தியாவின் உதவியை அரசு நாடிப் பெற வேண்டும், ஏனென்றால் இந்தியா மற்றும் தமிழ்நாடு அரசிற்கு இது தொடர்பில் தார்மீக பொறுப்புள்ளது என்று வாதிடுகிறார் மனோ கணேசன். அதில் நியாயமுள்ளதாகவும் நான் உணர்கிறேன். இந்தியா மற்றும் தமிழ்நாட்டிற்கு அப்பால் பிரித்தானிய அரசிற்கும் இது தொடர்பில் ஒரு பொறுப்புள்ளது. தமது பொருளாதார நலனிற்காக இம்மக்களைத் தோட்டங்களில் வேலை செய்ய அழைத்துச் சென்றவர்கள் பிரித்தானியர்களே என்பதை யாரும் மறக்க முடியாது.



மலையக மக்களின் பிரச்சனைகளில் கவனம் செலுத்தவுள்ளதாகக் கூறியுள்ள ரணில், அதே நேரம் இலங்கையில் பல தசாப்தங்களாகப் புரையோடியுள்ள இனைப்பிரச்சனைக்கான தீர்வையும் தான் முன்னெடுக்க விரும்புவதாகக் கூறியுள்ளார். 13ஐ மையமாக வைத்தே இதை அவர் செய்ய முயல்கிறார். இதற்காக தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளிற்கு அவர் அழைப்பும் விடுத்துள்ளார். ஆனால் இனப்பிரச்சனைக்கன தீர்வு விஷயத்தில் அவர் இந்திய வம்சாவளி மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளையும் உள்வாங்க வேண்டும் எனும் எதிர்பார்ப்பு மேலோங்கி வருகிறது. அதேவேளை இலங்கையில் இதுகாலம் வரை மூவின மக்கள் வாழ்வதாகவும் அனைத்து அம்சங்களும் அவர்களை மையப்படுத்தியே இருந்த நிலையில், இப்போது மலையகத்தில் வாழும் இந்திய வம்சாவளி மக்களை நாட்டில் நான்காவது இனமாக அங்கீகரிக்க வேண்டும் என்ற குரல்கள் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்துள்ளன.

ஆனால், அடுத்தாண்டு பிப்ரவரி 4 ஆம் திகதி இலங்கை தனது சுதந்திர தினத்தின் பவள விழாவை அனுசரிக்கவுள்ள நிலையில் அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வை காண வேண்டும் என்று ரணில் விரும்புகிறார். இதுவே தமக்கான கடைசி சந்தர்ப்பம் என்றும் அவருக்குத் தெரியும். அவரது அரசியல் வாழ்க்கை முடிவிற்கு வருகிறது என்கிற யதார்த்தத்தை அவர் உணர்ந்துள்ளார் என்றே எண்ணத் தோன்றுகிறது.

எனினும், இன்னும் 40 நாட்களிற்கும் குறைவான காலத்தில் அவரால் என்ன செய்துவிட முடியும் என்ற கேள்வியும் எழாமல் இல்லை. ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தைகளில் பங்கு பெறுவதிலேயே தமிழ் கட்சிகளிடையே உடன்பாடில்லை. வடக்கு கிழக்கு தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் பிளவுபட்டு நிற்கின்றன. அவர்களிடையே ஒற்றுமையில்லை என்பது சிங்கள ஆட்சியாளர்களிற்கும் தெரியும். அதுவே அவர்களின் பலமும் ஆகும். தீர்வை அளிக்க நாங்கள் தயார், ஆனால் அதற்கான பங்களிப்பைச் செய்ய தமிழ் கட்சிகள் தவறிவிட்டன என்கிற பரப்புரையை அவர்களால் செய்ய முடியும் என்பதை இரு தரப்பும் அறிந்துள்ளன.



உள்நாட்டுப் பிரச்சனைக்கு உள்நாட்டிலேயே தீர்வு என்கிற தென்னிலங்கை நிலைப்பாட்டை தமிழர் தரப்பு ஏற்க தயங்குகிறது. சர்வதேசம் மற்றும் புலம்பெயர்ந்த தமிழர்களும் இதில் உள்வாங்கப்பட வேண்டும் என்று தமிழ் அரசியல் கட்சிகள் எண்ணுகின்றன.

இதற்கு அப்பாற்பட்டு ரணிலுக்கு ஐக்கிய (மில்லாத) தேசியக் கட்சியை மீண்டும் தூக்கி நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தமும் உள்ளது. அவர் இன்னும் ராஜபக்சக்களின் கைப்பாவையாகவே உள்ளார் என்பதே யதார்த்தம். அவருக்கு இவர் தேவை, அவரை மீறி இவரால் எதையும் செய்ய முடியாது என்பதும் உண்மை.

இந்நிலையில் "பின்வாசல்" வழியாக, நேரடியாக மக்கள் ஆணையைப் பெறாமல், பொதுத் தேர்தல் மூலம் ஜனாதிபதியாகாமல், எதிர்பாராமல் அதிர்ஷ்ட சீட்டில் பரிசு விழுந்தது போல் பதவிக்கு வந்த ரணில் விக்ரமசிங்க ஒரே நேரத்தில் பல தொப்பிகளை அணிந்துகொண்டு அனைவருக்கும் நல்லவராகக் காட்டிக்கொள்ள விழைகிறார்.


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# மலேசியத் தமிழ்ப் பத்திரிகையாளர் குடும்பங்கள் பரிதாபம்: தேவேந்திரன் தீர்வு காண்பாரா?



நக்கீரன்

**கோ**லாலம்பூர், டிச.28:

மலேசியத் தமிழ்ப் பத்திரிகையாளர் சங்கத்திற்கு கு.தேவேந்திரன் இரண்டாவது தவணைத் தலைவராக டிசம்பர் 27-இல் நடைபெற்ற சங்கத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு கனடிய பருவ-இணைய ஊடகமான உதயன் சார்பில் முதற்கண் வாழ்த்து தெரிவிக்கப்படுகிறது.

கோலாலம்பூரின் பாரம்பரிய அடையாளமாகத் திகழும் ரோயல் சிலாங்கூர் கிளப்-இல் அதிகாரப்பூர்வமாக தொடங்கப்பட்ட இந்தச் சங்கம், தற்பொழுது 9-ஆவது ஆண்டை எட்டியுள்ளது.

அமைச்சர்கள் உள்ளிட்ட அரசாங்கத் தரப்பில் இருந்து மானியத் தொகையைப் பெற்று பங்கு போட்டுக் கொள்வதைத் தவிர இந்த அமைப்பிற்கு வேறொன்றும் தெரியவில்லை. அதுவும், புதிய உறுப்பினர்களை இதில் இணைத்துக் கொள்வதில்லை. தொடக்கத்தில் பதிவான உறுப்பினர்களை மட்டும் தற்காத்துக் கொண்டு, வேறு எந்த முற்போக்கு நடவடிக்கையும் பார்வையும் அற்ற நிலையில்தான் இந்தச் சங்கம் நகர்கிறது.

ஆண்டுக்கொரு முறை கலைநிகழ்ச்சி-விருந்தோம்பலுடன் குடும்பதின விழா நடத்தியதும் கொரோனா பரவலால் நின்றுபோனது. ஏழை எளிய பத்திரிகையாளர்களுக்கு பண்டிகைக் காலங்களில் நிதி உதவி அளிப்பது அணுகூலமாகத்தான் இருக்கும் ஆனாலும், அதைக் கடந்து எழுச்சிபெறும் வகைக் குறித்தும் சிந்திக்க வேண்டுமல்லவா?

இந்த ஒன்பது ஆண்டுகளில் ஏறக்குறைய 150 பேர்தான் இதில் உறுப்பியம் பெற்றுள்ளனர். தமிழ் ஊடகத்தினர் அனைவரையும் இணைத்து-அரவணைத்துக் கொண்டு ஒரு வலிமைபெற்ற அமைப்பாக உருவாக வேண்டும் என்றோ தேசிய வங்கி ஊழியர் சங்கத்தைப் போன்று தேசிய தமிழ்ப் பத்திரிகையாளர் சங்கம் என உருமாற்றம் அடைய வேண்டும் என்ற முற்போக்கு முனைப்போ இல்லாத அமைப்பாகத்தான் இது செயல்படுகிறது.

நாடு முழுவதும் வட்டார செய்தியாளர்கள் உள்ளனர். அவர்களைப் பற்றிய ஈடுபாடும் அக்கறையும் இல்லாமல் இந்த 9 ஆண்டுகளில், இந்த அமைப்பு ஒரு மண்டல அமைப்பைப் போல சுறுங்கிக் கிடக்கிறது.



உண்மையில், மலேசியத் தமிழ் ஊடகத்தைச் சேர்ந்த, குறிப்பாக அச்சு ஊடகத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர்களும் அவர்களின் குடும்பத்தினரும் பரிதாபத்திற்கு உரியவர்கள்.

மிகக் குறைவான ஊதியம், மிகக் குறைந்த விடுமுறை நாட்கள், வார விடுமுறை என்பதையே அறியாத வாழ்க்கை என பற்பல இன்னல்களுக்கு மத்தியில் வாழும் தமிழ்ப்பத்திரிகையாளர்களை முதலாளியர் தரப்பு பொதுவாக மதிப்பதில்லை கிள்ளுக்கீரையென அலட்சியம் காட்டுகின்றனர்.

ஏறக்குறைய 2 மாதங்களுக்கு முன், தீபாவளி பண்டிகை கொண்டாடப்பட்ட நேரத்தில் ஒரு பத்திரிகை நிருவாகம் மிகவும் தாமதமாக ஊதியம் வழங்கியது.

அக்டோபர் 24-இல் தீபாவளி என்ற நிலையில், நாட்டில் உள்ள மாதச் சம்பள ஊழியர்கள் அனைவரும் மாதத் தொடக்கத்திலேயே முதல் மாத ஊதியத்தைப் பெற்றுக் கொண்டு, பண்டிகைக் கால போனஸ் என்னும் ஊக்கத் தொகையையும் பெற்று தீபாவளிக்கு ஆயத்தமாகி வந்த நிலையில், ஒரு பத்திரிகை நிருவாகம் செப்டம்பர் மாத சம்பளத்தை அக்டோபர் 14-ஆம் நாள் பிந்நேரத்தில்தான் வழங்கியது.

இது பச்சையான அக்கிரமம் ஊழியர்களுக்கு எந்தத் தகவலும் தெரிவிக்கப்படாத நிலையில், இன்று கிடைக்குமா? சம்பளம் நாளைக்காவது கிடைக்குமா என்று ஒன்றும் புரியாமல் ஒவ்வொரு நாளும்-ஒவ்வொரு பொழுதும் பரிதவித்த வேதனை, சம்பந்தப்பட்டவர்களுக்குத்தான் தெரியும்.

இவர்களில், இல்லத்தரசிகளின் நிலை மிகமிக அவலமானது. இதைப் பற்றி இந்த சங்கம் வாயேத் திறக்கவில்லை. இந்த முறைகேடு குறித்து, அரசாங்கத்தின் கவனத்திற்காவது தெரியுமா என்றால் அதுவும் தெரியவில்லை.

21-ஆம் நூற்றாண்டில், சரியாக குறிப்பிட வேண்டுமென்றால், 2008-இல் ஒரு செய்தியாளர், அவர் பணிபுரிந்த பத்திரிகை முதலாளியிடம், ஆயிர வெள்ளி சம்பளம் போதவில்லை இன்னம் கொஞ்சம் கூட்டித் தர முடியுமா என்று கேட்டதற்கு, குளிரூட்டி அறையில் வேலை பார்ப்பவர்களுக்கு இது போதும் என்று மறுமொழி கூறப்பட்டது.




சம்பந்தப்பட்ட செய்தியாளர், செய்தி எழுதும்போதுதான் அலுவலகத்தில் இருப்பார். மற்ற வேளைகளில், செய்தி சேகரிப்பதற்காக, மழை-வெய்யில் இரவு-பகல் என கருதாமல் வெளியில்தான் சுற்ற வேண்டி யிருக்கும் என்பதை அந்த பிற்போக்கு முதலாளி கருத்தில் கொள்ளவில்லை.

இந்தச் சம்பவம் நடைபெற்றபோது, தமிழ்ப் பத்திரிகையாளர் சங்கம் உருவாகவில்லைதான் ஆனால், உருவானபின், 2016 ஜனவரி 6-ஆம் நாளில் ஒரு பத்திரிகை மூடப்பட்டது. அதில் வேலை பார்த்தவர்களுக்கு அன்று மாலையில் தெரிவிக்கப்பட்டு, நாளை முதல் பணிக்கு வரவேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டது.

பத்திரிகையை மூட வேண்டும் என்ற எண்ணம் இருந்தால், அதை டிசம்பர் 31-இல் செய்திருக்கலாம் அத்துடன், அதற்கு குறைந்தது ஒரு வாரத்திற்கு முன்பாவது பத்திரிகையை நிறுத்தப்போவது குறித்து அறிவித்து இருந்தால், அங்கு வேலை செய்தவர்கள் அடுத்த மாதம் முதல் மாற்று வேலைக்கு முயற்சி செய்ய ஏதுவாக இருந்திருக்கும். ஆனால், புது ஆண்டும் புது மாதமும் தொடங்கியிருந்த வேளையில் திடீரென்று நிறுத்தினால், குடும்பப் பெண்கள் உள்ளிட்ட பணியாளர்கள் தடுமாறி நிற்பார்களே என்ற அக்கறையும் கடமை உணர்வும் அந்த நிருவாகத்திடம் இல்லாமல்போனது.

இதைவிடக் கொடுமை, ஊதியத்தில் வெட்டிய ஈபிஎ.ஃப் என்னும் ஊழியர் நல நிதி, சொக்சோ கட்டணம் உட்பட எதையும் இன்றுவரை செலுத்தாமல் ஏமாற்றி வருகின்றனர்.

காரணம், தமிழ்ப் பத்திரிகை பணியாளர்கள் என்றால் பொதுவாக எல்லா நிருவாகங்களுக்கும் அத்தனை அலட்சியம்.

இன்னொரு நாளேடு, நாட்டின் மூத்த நாளிதழ் என்ற மகுடத்துடன் வெளிவந்து கொண்டிருந்தது. அதை நிருவகித்தவர்கள், அந்தப் பத்திரிகை மூலம் அடைந்த பயன் சொல்லி மாளாது ஆனாலும், இன்னும் 5 ஆண்டுகள் நடத்தினால், அந்த நாளிதழ் நூற்றாண்டை எட்டுமே என்பதையும் தங்களுக்கு ஏதும் சிரமம் இருந்தால், அதைத் தொடர்ந்து நடத்துவது குறித்து மாற்றியும் யோசிக்காமல் பொட்டென நிறுத்திவிட்டனர். இதனால், நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் நூற்றுக் கணக்கானவர்கள் இவர்களுக்கெல்லாம் வாழ்வில் என்ன நீதி கிடைக்கப்போகிறது?

இவை யாவும் மாதிரிக்கு ஒன்று-இரண்டு அவ்வளவுதான். இப்படி யெல்லாம், ஏராளமான பாதிப்பை ஏராளமான தமிழ்ப் பத்திரிகை பணியாளர்கள் எதிர்கொண்டுதான் வருகின்றனர்.

இதைப்பற்றி யெல்லாம் புகார் சொல்லவோ அல்லது நாடுமுழுவதும் பாதிக்கப்படும் தமிழ் ஊடகக் குடும்பத்தினர் அண்டி நிற்கவோ, குறைந்த-பட்சம் தங்களின் சங்கடத்தை எடுத்துக்கூறவோ ஒரு அலுவலகத்தைக் கட்டமைக்க வேண்டும் என்ற முனைப்பு தமிழ்ப் பத்திரிகையாளர் சங்கத்திடம் இல்லை. மிகக் குறைந்த அளவில் ஒரேவோர் ஊழியரைக் கொண்டாவது ஒரு அலுவலகம் சிறிய அளவில் உருவாக்கப்பட வேண்டும் என்ற எண்ணம், இதன் தலைவர்களுக்கு ஏற்படவில்லை. பொறுப்பில் உள்ள ஒரு சிலரிடம் தொடர்புகொள்ள முயன்றால், எத்துணைத் தடவை அழைத்தாலும் எடுப்பதில்லை பேசுவதில்லை ஒருவேளை, அந்த நேரத்தில் அவர்களுக்கு பேச முடியாமல் இருந்தால், பின்னராவது அழைக்க வேண்டுமே என்ற பொறுப்பும் சம்பந்தப்பட்டவர்களிடம் இல்லை.

கிடைக்கின்ற நிதி எதுவாயினும் பாதியைப் பயன்படுத்திக் கொண்டு, மீதியை சேமித்து ஓர் அறவாரியத்தை சிறிய அளவில் தொடங்கலாம் தவிர, மாதந்தோறும் இதன் உறுப்பினர்களிடம் ஒரு நாளைக்கு ஒரு வெள்ளியென நிர்ணயித்து, மாதந்தோறும் 30 வெள்ளியை வசூலித்து ஒரு கூட்டுறவு அமைப்பை உருவாக்கலாம்.

தமிழ்ப் பத்திரிகையாளர்களில் செய்தியாளர்களாகப் பணியாற்றுபவர்களுக்கு கல்வித் தகுதி என்னவாக இருந்தாலும், ஐந்து ஆண்டு சேவைக்குப் பின், அவர்கள் ஊடகத்துறையில் பட்டயக் கல்வி அல்லது இளங்கலைப் பட்டம் பெறுவதற்கு ஏதுவாக பொது பல்கலைக்கழங்கங்களில் குறிப்பிட்ட அளவிற்கு இடம் கேட்டு அரசாங்கத்திடம் கோரிக்கை வைக்கலாம்.

எவ்வித சலுகையும் அணுகூலமும் இன்றி தமிழ்ப் பத்திரிகைத் துறையில் உழைப்பவர்கள், 50 ஆண்டுகளை எட்டியபின் அல்லது பணியிலிருந்து விலகியபின் அவர்களுக்கு மாதந்தோறும் உதவி நிதி வழங்கும்படி அரசாங்கத்திடம் கோரிக்கை வைக்கலாம்.

இவ்வாறெல்லாம் திட்டமிட்டு, புதுப்புது பாங்குடன் வெவ்வேறு முனைப்பு காட்டி தமிழ்ப் பத்திரிகைக் குடும்பத்தினரின் எதிர்கால அரணாக விளங்க இந்த சங்கம் இனியாவது அகலக் கால்வைத்து ஆழமான நடவடிக்கையை முடிக்கிவிட்டால், அதனால் ஆயிரக் கணக்கானோர் பயன்பெறுவர் என்பது திண்ணம்.

கடந்த முறை வெற்றி வாய்ப்பைத் தவறவிட்ட தயாளன் சண்முகம், இந்த முறையும் தலைவர் பொறுப்பிற்கு களம் இறங்கினார். தலைவர் உள்ளிட்ட அனைத்து பொறுப்புகளுக்குமான வாக்களிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், தயாளன் சொன்ன கருத்து நெஞ்சைத் தொட்டது.

தான் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அடுத்த முறை கூட்டம் நடைபெறும்போது சங்கத்தின் சொந்தக் கட்டடத்தில் நடைபெறும் என்றும் விடுபட்டிருக்கும் அனைவரையும் உறுப்பினராகச் சேர்க்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் நம்பிக்கைக் குழுமத்தின் மேலாளருமான தயாளன் தெரிவித்தார்.

ஜெயபக்தி மாளிகையில் நடைபெற்ற இத்தேர்தலில் சொற்ப வாக்குகள் பெரும்பான்மையில் தேவேந்திரன் வென்றதைக் கருதும்பொழுது போட்டி கடுமையாக இருந்ததை ஊகிக்க முடிகிறது.

வென்றபின் கருத்துரைத்த தேவேந்திரன், வெளி மாநிலங்களில் உள்ளவர்கள் எல்லாம் உறுப்பினராவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும் தமிழ்ப் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் பொறுப்புக்கு 2 தவணை என நிர்ணயம் செய்யப்படும். அந்த வகையில் அடுத்த முறை தான் போட்டியிடாமல் மற்றவர்களுக்கு வழிவிட்டு ஒதுங்கிக் கொள்வேன் பத்திரிகைத் துறையில் இருந்து ஓய்வு பெறுபவர்களுக்கு அரசாங்க உதவி நிதி பெற முயல்வேன் தேர்தல் முடிந்துள்ள நிலையில் இனி வேறுபாடுகளை மறந்து அனைவரும் ஒன்றாக செயல்படுவோம் என்றெல்லாம் மக்கள் ஓசை நாளிதழ் ஆசிரியர்களில் ஒருவரான தேவேந்திரன் கருத்துரைத்தார்.

பொறுத்திருந்து பார்ப்போம்.

துணைத் தலைவராக மலேசிய நண்பனின் நா. பார்த்தீபன், துணைச் செயலராக மலேசிய நண்பனின் ஆர்.குணா செயலவை உறுப்பினர்களாக தமிழ் மலரின் ரவி முனியாண்டி, கா. தர்வின் ஆகியோர் புதிய நிருவாகியராக அடுத்தத் தவணைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளராக தமிழ் லென்ஸ் ஊடகத்தின் வெற்றி விக்டர், பொருளாளராக கிறிஸ்ட் ஆகிய இருவரும் வேட்பு மனுத்தாக்கல் இடம்பெற்ற டிசம்பர் 7-இல் போட்டியின்றி தேர்வாகி இருந்தனர்.



நிறைவாக, மலேசியத் தமிழ்ப் பத்திரிகையாளர் சங்க உறுப்பினர்களின் சிந்தைக்கு ஒன்று: இருமுறை வெற்றி வாய்ப்பைத் தவறிவிட்ட தயாளன், அடுத்த முறை போட்டியின்றி ஒருமனதாக வெற்றிபெற வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டால் நன்று என்பது அந்த ஒன்று!

**நக்கீரன்** - Nakkeeran 013-244 36 24

சினிமா

# படத்தை பார்த்து கடிதம்போட்ட வெளிநாட்டு ரசிகை சங்கீதா. கரம்பிடித்து மனைவியாக்கிக்கொண்ட நடிகர் விஜய்



நடிகர் விஜய் நடிக்க வந்த புதிதில் பல அவமானங்களை எதிர்கொண்டு வந்திருக்கிறார். அவரது திரைப்படங்களை விமர்சித்த பத்திரிக்கைகள் விஜய்யை உருவகேலி செய்து மோசமாக எழுதிய சம்பவங்கள் எல்லாம் உண்டு. ஆனாலும் தனது நம்பிக்கையை விடாமல் ரசிகர்களின் இதயங்களில் குடியிருக்கும் இளைய தளபதியாக உயர்ந்தார் விஜய்.

அதன் பின் காதல், ஆக்சன், குடும்ப சென்டிமென்ட் போன்ற பல்வேறு சினிமா எலெமன்ட்டுகளால் ரசிகர்களின் மனதில் தனி இடம் பிடித்தார் விஜய். குறிப்பாக குழந்தைகளுக்கு விஜய்யை மிகவும் பிடித்துப்போனது. இவ்வாறு தனக்கென தனி ரசிகர்கள் கூட்டத்தை அமைத்துக்கொண்ட விஜய், தற்போது ரசிகர்களின் தளபதியாக உயர்ந்திருக்கிறார். இவ்வாறு ரசிகர்களின் தளபதியாக உயர்ந்துள்ள நடிகர் விஜய், தற்போது மனைவியாக இருக்கும் சங்கீதாவை கடந்த 1999 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். விஜய் சங்கீதாவை திருமணம் செய்து கொண்ட கதை மிகவும் சுவாரஸ்யமான ஒன்று.

விஜய் திரைப்படங்கள் பலவற்றை பார்த்து விஜய்யை பிடித்துப்போன சங்கீதா தொடக்கத்தில் வெளிநாட்டில் இருந்து ரசிகை போலவே கடிதம் அனுப்பிக்கொண்டிருந்தார். இந்த கடிதப்போக்குவரத்து பின்னாளில் நெருக்கமான உறவாக மாறியிருக்கிறது. அதன் பின் ஒரு நாள் சங்கீதா விஜய்யிடம் "உங்களை சந்திக்கலாமா?" என கேட்டிருக்கிறார். அதற்கு விஜய்யும் ஒப்புக்கொள்ள இருவரும் சந்தித்திருக்கிறார்கள். ஒரு கட்டத்தில் சங்கீதா தனது தந்தையிடம் சென்று தான் நடிகர் விஜய்யை திருமணம் செய்து கொள்ளப்போவதாகவும், அவர் வீட்டிற்குச் சென்று மாப்பிள்ளை கேளுங்கள் எனவும் கூறியிருக்கிறார்.

இதனை தொடர்ந்து ஒரு நாள் விஜய்யின் வீட்டிற்கு சங்கீதா தனது குடும்பத்துடன் சென்றிருக்கிறார். அப்போது சங்கீதாவின் தந்தை எஸ்.ஏ.சியிடம் "எனது பெண் விஜய்யை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என பிடிவாதமாக இருக்கிறாள். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என கேட்டிருக்கிறார். எஸ்.ஏ.சிக்கும் அவரது மனைவி ஷோபாவுக்கும் சங்கீதாவை பார்த்தவுடனே பிடித்துப்போய்விட்டதாம். அதன் பின் சில மாதங்களிலேயே சங்கீதாவும், விஜய்யும் திருமணம் செய்து கொண்டார்களாம்.

# கணவனே கண்கண்ட தெய்வமாக இருந்த விஜயகுமாரி!.. எஸ்.எஸ்.ஆரை பிரிய காரணம்



தமிழ் சினிமாவில் அந்த காலங்களில் பல முன்னனி நடிகைகள் இருந்திருந்தாலும் இலச்சிய நடிகையாக வாழ்ந்தவர் நடிகை விஜயகுமாரி. நடிப்பில் மிகப்பெரிய சாதனையை செய்து காட்டியவர் விஜயகுமாரி. எப்படி சிவாஜிக்கு பராசக்தி படத்தில் வரும் வசனம் பெருமையை வாங்கிக் கொடுத்ததோ அதே போல தான் விஜயகுமாரிக்கும் பூம்புகார் படத்தில் அவர் பேசும் வசனம் மிகப்பெரிய புகழை பெற்றுத் தந்தது. ஆனால் இரண்டுமே மு.கருணாநிதி எழுதிய வசனங்களாகும். சினிமாவிற்குள் வருவதற்கு முன்னரே விஜயகுமாரி எம்ஜிஆரின் தீவிர ரசிகையாக இருந்திருக்கிறார். சினிமாவில் நடிக்க வேண்டும் என்ற தன் ஆசையை வீட்டில் சொல்ல முதலில் எதிர்ப்புகள் கிளம்பியிருக்கின்றது. அதன் பிறகு அவர் ஜாதகத்தில் சினிமாவில் ஒரு மாபெரும் நடிகையாக வருவதற்கு வாய்ப்பு இருப்பதாக கூறியதால் சம்மதித்திருக்கின்றனர். அதன் காரணமாகவே படத்தில் நடிக்க ஆரம்பித்தார். அவர் நடித்த முதல் படம் குலதெய்வம். நடித்த முதல் படத்திலேயே வருங்கால கணவரை தேர்ந்தெடுத்தார். ஆம் அந்த படத்தில் விஜயகுமாரிக்கு ஜோடியாக எஸ்.எஸ்.ஆர் தான் ஹீரோ. எஸ்.எஸ்.ஆருக்கும் பார்த்ததும் விஜயகுமாரியை பிடித்து போக காலப்போக்கில் திருமணத்தில் முடிந்தது. கல்யாணத்திற்கும் பிறகும் இருவரும் சேர்ந்து பல படங்களில் நடித்திருக்கின்றனர். மேலும் கணவர் சொல்வதே மந்திரம் என்றே தன் வாழ்க்கையை பயணித்திருக்கிறார் விஜயகுமாரி. ஒரு கட்டத்தில் விஜயகுமாரி ஹீரோயின் என்றால் நான் தான் காரணமாகவே மாபெரும் வெற்றிப் படமாக அமைந்த "கற்பகம்" படத்தில் நடிக்க விஜயகுமாரியால் முடியாமல் போனது. அதன் பின் அந்த கதாபாத்திரத்தில் கே.ஆர்.விஜயா நடித்து நல்ல வரவேற்பை பெற்றார். இதே போல் வெற்றிக்காவியமாக நெஞ்சில் ஓர் ஆலயம் படத்தின் வாய்ப்பும் பறிபோனது. இதற்கு காரணமும் அவரது கணவர் தான். என்னவெனில் இயக்குனர் ஸ்ரீதர் விஜயகுமாரியை மனதில் வைத்தே இந்த படத்திற்கான கதையை எழுதியிருக்கிறார். அவரிடம் போய் சொன்னதும் என் கணவரிடம் ஒரு வார்த்தை கேட்டு சொல்கிறேன் என்று விஜயகுமாரி கூறியிருக்கிறார்.

ஆனால் எஸ்.எஸ்.ஆர் என்னிடம் வந்து கதையை சொல்ல சொல் என்று கூற கடுப்பாகி போன ஸ்ரீதர் அந்த வாய்ப்பை நடிகை தேவிகாவிற்கு வழங்கியிருக்கிறார். அந்த படம் எப்படி ஒரு வெற்றியை பெற்றது என சொல்லி தெரியவேண்டிய அவசியமில்லை. இப்படி சில பல பிரச்சினைகள் தான் அவர்கள் திருமண முறிவிற்கு காரணமாக இருந்திருக்கிறது. அதன் பிறகு வீட்டை விட்டு வெளியேறி, எம்ஜிஆர் மூலமாக படங்களில் நடிக்க வாய்ப்பு வந்திருக்கிறது



# 2023 இல் நாம் எங்கே போகிறோம்?

- கலாநிதி லக்சிறி பெர்னாண்டோ

இது பாரிஸா அல்லது கொழும்பா?

இலங்கையின் நிலைமை அல்லது நெருக்கடியை பகுப்பாய்வு செய்வதில் நாம் வழக்கமாக செய்யும் ஒரு தவறு, அதைத் தனிமைப்படுத்திச் செய்வதுதான். துரதிட்டவசமாக இலங்கை ஒரு உலக அமைப்பின் ஒரு கூறு மட்டுமே. இந்த நிலைமை மற்ற எல்லா நாடுகளுக்கும் செல்லுபடியாகும் என்றாலும் சிறிய அல்லது பலவீனமான ஒரு நாடு மீது வெளிப்புறக் காரணிகளின் விளைவுகள் பெரியவை. மூலோபாய முக்கியத்துவமும் சமன்பாட்டின் ஒரு பகுதியை வகிக்கிறது. கொலனித்துவத்திற்கு முன்பே, முக்கிய அல்லது பெரிய நாடுகளில் இருந்து சுற்றியுள்ள பகுதிகளுக்கும் மற்றும் நாடுகளுக்கும் நாகரிக விரிவாக்கங்களின் அலைகள் இருந்தன. இவை காலனித்துவத்தின் வருகை வரை பிராந்திய சூழல்களில் நடந்தன.

கொலனித்துவமும் அதனுடன் இணைந்த முதலாளித்துவமும் உலகை ஒருவருக்கொருவர் தொடர்புடைய ஒரு அமைப்பிற்கு கொண்டு வந்த முக்கிய போக்குகளாகும், . இதில் மேற்கத்திய நாடுகள் இன்று வரை ஆதிக்கம் செலுத்துகின்றன. இருப்பினும் சீனா, உருசியா மற்றும் மத்திய கிழக்கின் பல பகுதிகள் சந்தை பொருளாதாரங்கள் மற்றும் முதலாளித்துவத்தின் அடிப்படையில் மேற்கு மற்றும் அவர்களுக்கிடையில் தெளிவான சமநிலை இருப்பினும், மேற்கத்திய செல்வாக்குகளை எதிர்த்துப் போராடுகின்றன. இதில் இந்தியாவின் பங்கு மிகவும் நுணுக்கமானது.

உலகளாவிய உண்மைகள்?

**Are there possibilities of socialism in Sri Lanka or any other country soon? It is quite unlikely although the country's name remains as the 'democratic socialist republic.' What might be appropriate is to promote 'socialist' or 'social democratic' values within society and economy beginning with the educational system. Although this advocacy may appear theoretical, given the enormous problems that the poor and the disadvantaged people face today, there is space and need for such a promotion. This could be done both in the name of socialism and/or human rights in the socio-economic sphere. Nordic countries are the best examples that Sri Lanka or any other country could follow. Australia and New Zealand also give examples. However, to follow those footsteps the economy should be sustainably developed.**

இலங்கையிலோ அல்லது வேறு எந்த நாட்டிலோ விரைவில் சோசலிசம் வரக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதா? நாட்டின் பெயர் "ஜனநாயக சோசலிசக் குடியரசு" என்று இருந்தாலும் அது சாத்தியமில்லை. கல்வி முறையிலிருந்து தொடங்கி சமூகத்திலும் மற்றும் பொருளாதாரத்திலும் "சோசலிச" அல்லது "சமூக ஜனநாயக" மதிப்புகளை ஊக்குவிப்பது பொருத்தமானதாக இருக்கலாம். இந்தக் கோட்பாடு செயல்முறை சாத்தியமில்லாத ஒன்றாகத் தோன்றினாலும், இன்று ஏழைகள் மற்றும் நலிவடைந்த மக்கள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சிக்கல்களைக் கருத்தில் கொண்டு, அத்தகைய உயர்வுக்கான இடமும் தேவையும் உள்ளன. இது சோசலிசத்தின் பெயரிலோ அல்லது சமூக - பொருளாதாரத் துறையில் மனித உரிமைகள் என்ற பெயரிலோ செய்யப்படலாம். வடக்கு **(Nordic)** நாடுகள் (ஸ்காண்டிநேவியா, பின்லாந்து, ஐஸ்லாந்து மற்றும் பரோயே தீவுகள்) இலங்கை அல்லது வேறு எந்த நாடும் பின்பற்றக்கூடிய சிறந்த எடுத்துக் காட்டுக்கள் ஆகும். அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளும் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கின்றன. எவ்வாறாயினும், அந்த அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதற்கு நிலையான பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும்.

உலகமும் மனித குலமும் இன்று ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் உள்ளன. நாம் இப்போது நிறைவு செய்துகொண்டிருக்கும் 2022 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்னரே, உலகமும் மனிதகுலமும் எதிர்கொள்ளும் உயிர்வாழும் நெருக்கடிகள் வெளிப்படையானவை.

நிச்சயமாக, அரசியல்வாதிகள் மற்றும் தொழிலதிபர்கள் கொடுக்கும் சம்பளத்தில் வாழும் அறிவியலாளர்கள், மக்கள் இந்தப் பூமியில் வாழமுடியாத இடமாக மாறினால், அவர்களில் சிலரை நிலாவுக்கு கொண்டு செல்ல முடியும். சில பகுதிகள் ஏற்கனவே சமூக ரீதியாக வாழ முடியாதவை.

**The over-exploitation of nature and the earth is the main reason for this situation. The climate change has gone in the direction of global warming. Not only the temperatures have changed, but also the weather patterns. The main reasons are the burning of fossil fuels (coal, oil, and gas) and cutting down of forests. At present, Americas are facing extreme cold or ice waves.**

இயற்கையையும் பூமியையும் அதிகமாக சுரண்டுவதுதான் இந்த நிலைக்கு முக்கிய காரணம். பருவநிலை மாற்றம் புவி வெப்பமடைதலை நோக்கிச் சென்றுள்ளது. தட்பவெப்ப நிலைகள் மட்டுமல்ல, காலநிலையும் மாறிவிட்டன. புதைபடிவ எரிபொருட்களை (கரி, எண்ணெய், எரிவாயு) எரிப்பது மற்றும் காடுகளை வெட்டுவது போன்றவை முக்கிய காரணங்கள் ஆகும். தற்போது, அமெரிக்கா கடும் குளிர் அல்லது பனி அலைகளை எதிர்கொள்கிறது.

அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் கூட கட்டுப்படுத்த முடியாத காட்டுத் தீ மற்றும் பேரழிவு தரும் வெள்ளம் ஏற்பட்டுள்ளன. அமெரிக்காவும் மற்ற பல நாடுகளும் அப்படித்தான். மற்றக் காரணிகளில், புறக்கணிக்கப்பட்ட அல்லது ஒப்புக்கொள்ளப்பட்ட புவியியல் மாற்றமாகும். இன்று உலகில் வாழும் மக்களின் அதிகபட்ச எண்ணிக்கை எட்டு பில்லியனுக்கும் (800 கோடி) அதிகமாகும். நிச்சயமாக அவர்களின் வாழ்க்கை நிலைமைகள் பணக்கார நாடுகளிலிலும் ஏழை நாடுகளிலும் சமமற்றதாக உள்ளது. அவர்களின் தேவைகளுக்காக வீடுகள் மற்றும் பிற கட்டிடங்களைக் கட்டுவது குறித்து எந்த ஐயமும் இல்லை. ஆனால், உலக நாடுகள் மழைநீரைப் பூமி உறிஞ்சிக் கொள்ளாமல் நிலத்தை கான்கிரீட் மற்றும் சிமெந்தால் மூடி நகரங்களையும், பெருநகரங்களையும் போட்டிபோட்டுக் கொண்டு கட்டி வருகின்றன. அதன் விளைவு கட்டுப்படுத்த முடியாத வெள்ளம் ஆகும்.

ஊக்குவிக்க வேண்டிய சில கோட்பாடுகள்

சமையலுக்கு எரிவாயு, போக்குவரத்துக்கு எண்ணெய், மின்சாரத்திற்கு நிலக்கரி நியாயமான விலையில் வாங்க முடியாத இருப்பது இலங்கையில் சாதாரண மக்கள் கண்ணியமான வாழ்க்கையை வாழ முடியாது இருக்கிறது. இருப்பினும், இந்தப் பற்றாக்குறைகள் மற்றும் விலை உயர்வு அனைத்துக்கும் காரணம் புவி வெப்பமடைதல் மற்றும் காலநிலை மாற்றம் ஆகும். உக்ரைனில் இழுபட்டுக் கொண்டு போகும் போர், இன்று உலக சமூகம் எதிர்கொள்ளும் நெருக்கடியைக் காட்டுகிறது. இந்தப் பற்றாக்குறைகள் மற்றும் விலை உயர்வு அனைத்துக்கும் காரணம் உக்ரைனில் நடக்கும் போரை மட்டும் குற்றம் சொல்ல முடியாது. உக்ரைனில் தொடர்ந்து நீடித்து வரும் யுத்தம் இன்று உலக சமூகம் எதிர்கொள்ளும் நெருக்கடியைக் காட்டுகிறது. அமைதி காத்தல் மற்றும் அமைதியை ஊக்குவித்தல் போன்ற விடயங்களில் ஐ. நா. மோசமான முறையில் தோல்வியடைந்துள்ளது.

உலகம் பயங்கர நெருக்கடியில் உள்ளது. இலங்கை மட்டுமல்ல, இது நமது மக்களாட்சி விழுமியங்கள் மற்றும் கொள்கைகளை உறுதியுடன் ஊக்குவிக்கும் அதே வேளையில் நமது பதில்களை மட்டுப்படுத்தல் வேண்டும். நமது கொள்கைகள் என்னவாக இருக்க முடியும்? எனது கருத்துப்படி அவற்றில் சில பின்வருமாறு.

1. இன, மத, பாலின, தலைமுறை மற்றும் பிற வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு நாட்டில் வாழும் அனைத்துக் குடிமக்களையும் ஒன்றிணைத்தல். மேற்கூறிய பிரதேச அல்லது வரலாற்று வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் மற்ற நாடுகளின் குடிமக்களுடன் மீண்டும் ஒன்றிணைதல். இந்தியா நமது மிக நெருங்கிய நட்பு நாடு. அனைத்துச் சமூகங்களின் பண்பாட்டு உரிமைகளையும் பிராந்திய பன்முகத்தன்மையையும் பாதுகாக்கும் அதே வேளை-யில் பொதுவான மனித நேயம் மற்றும் உலகளாவியவாதம் **(universalism)** ஆகியவை நமது கொள்கைகளாக இருக்க வேண்டும்.

2. ஏழைகள் மற்றும் அவர்களின் குறைகள், பின்தங்கிய, ஒதுக்கப்பட்ட மற்றும் புறக்கணிக்கப்பட்ட பிரிவினரை மையமாகக் கொண்டு நமது கொள்கை முன்னுரிமைகளாக இருக்க வேண்டும். பெண்களின் உரிமைகளை வலியுறுத்துவது மட்டுமல்லாமல், அவர்களைப் பாதுகாப்பதற்கான நடைமுறைத் திட்டங்களுக்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டும். பெண்கள் மட்டுமின்றி குழந்தைகளுக்கு எதிரான குடும்ப வன்முறையும் ஒழிக்கப்பட வேண்டும். கல்வி மற்றும் உரையாடல் மூலம் ஆண்களின் மதிப்புகள் மற்றும் நடைமுறைகளை சீர்திருத்துவது ஒரு பகுதியாக இருக்க வேண்டும்.

3. அரசியல் துறையில் மக்களாட்சி மற்றும் மக்களாட்சி விழுமியங்களின் பாதுகாப்பு முக்கியத்துவம் பெற வேண்டும். இது அரசியல் துறையில் மட்டுமல்லாமல் குடும்பம், கல்வி முறை, தொழில்துறை உறவுகள் மற்றும் தனிப்பட்ட விடயங்களிலும் மக்களாட்சி முறைமை நடைமுறைப்படுத்தல் வேண்டும். தேர்தல்கள் முறையாகவும் சரியான நேரத்திலும் நடத்தப்பட வேண்டும். மனிதனால் உருவாக்கப்பட்ட பொருளாதார நெருக்கடி அல்லது இக்கட்டுக்கள் தேர்தல்களை தாமதப்படுத்துவதற்கு அல்லது நடத்தாமல் இருப்பதற்குச் சாட்டாக இருக்கக்கூடாது.

4. தற்போதைய மற்றும் அண்மைய அரசியல் நெருக்கடிக்கு பொருளாதார நெருக்கடிதான் முக்கிய காரணம். பொறுப்புள்ள அமைச்சர்கள், செயலாளர்கள் மற்றும் பிற முக்கிய அதிகாரத்துவத்தினர் (அரச இயந்திரத்தை நகர்த்துவதில் விதிகள் மற்றும் நடைமுறைகளை மிகக் கண்டிப்பாகப் பின்பற்றுபவர்கள்) திறமையின்மை எண்பிக்கப்பட்டுள்ளது (ஏடுத்துக்காட்டு மத்திய வங்கியின் ஆளுநர்). நாட்டின் பொருளாதாரம், கொடுப்பனவுக் கணக்கு மற்றும் வருவாய் - செலவு அல்லது வரவு - செலவுத் திட்டத்தை நிர்வகிப்பதில் பொறுப்பு. வெளிநாட்டுக் கடன் விடயத்தில், கடந்த கால அரசாங்கங்கள் முறையான பதிவுகளைக் கூட வைத்திருக்கவில்லை என்பது தெரியவந்துள்ளது. இந்தப் பொறுப்பற்ற தன்மைக்குக் காரணம் என்ன? பொறுப்பற்ற தன்மையே ஒரு னாரணம். இதற்குப் பின்னணியில் அரசியல், அரசியல் சூழ்ச்சி, உள்ளான்று வைத்து புறமொன்று பேசுதல், இரண்டகம் ஆகியவை ஐயத்துக்கு இடமின்றி உள்ளன. இவை மற்ற நாடுகளுக்கு தெரியாதவை அல்ல. ஆனால் இலங்கை எளிதாகப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

5. இலங்கை இந்த அளவு கீழ்மட்டத்திற்குத் தள்ளப்பட்டது எப்படி? படித்தவர்கள் மத்தியிலும், மக்கள் மத்தியிலும் ஆழமான ஒழுக்கச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதாரப் பேரழிவிற்கு யார் முதன்மைப் பொறுப்பு என்பது குறித்து கலந்தாய்வுகள் நடந்துள்ளன. நிச்சயமாக, நாட்டின் இக்கட்டான நிலைக்கு மக்களும் பெரும் பொறுப்பு ஏற்க வேண்டும். ஆனால் அரசியல்வாதிகள் பொருளாதாரத்தை நிர்வகிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டதால் முதன்மைப் பொறுப்பை அவர்கள் ஏற்க வேண்டும். இலஞ்சம், ஊழல், மோசடி, தவறான பொருளாதார நிர்வாகம் ஆகியவற்றுக்கு எதிராக வலுவான இயக்கம் இருக்க வேண்டும். அது பொருளாதார மற்றும் அரசியல் நிர்வாகத்தின் அனைத்து மட்டங்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

*- கனடா நக்கிரன்*


ஒலி அலைகளில் புதுயுகம்
yugam radio & TV
24 மணிநேரமும் உங்களுடன்

நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள: 416.455.4343, 647.450.4345
தொலைபேசியூடாக நிகழ்ச்சிகளைக் கேட்க
416.623.8110
647.450.4345
இணையம்
www.yugamradio.com
www.webyugam.com

கணபதி ரவீந்திரன் 416 – 898 – 7284
Yugam Media Inc
2900 Markham Rd Unite U21, Toronto ON M1X 1E6
(Markham & McNicoll)
Tel: 416-297-5002

# இவ்வார ராசிபலன்

**30-12-2022 வெள்ளி தொடக்கம் 05-12-2022 வியாழன் வரையும்**




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்

'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377





**மேஷம்:** வம்பு தும்புகள் ஒழியும் வாரம். பயணம் தவிர்ப்பது நல்லது. ஆபரணப் பொருள் களவு போகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். வாகன மாற்றம் ஏற்படும். மனஅமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்களின் நலனில் அக்கறை தேவை. பணியில் கண்டிப்பு தேவை. வாக்குவாதங்கள் உருவாகும். தனவரவுகள் அதிகரிக்கும். எதிரிகளின் தொல்லை குறையும். பாதிப்புகள் அகலும். வெளியூர் பயணம் வெற்றி தரும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் கலைகட்டும். உறவினர் வருகை உண்டு. ஆறுதலான சூழ்நிலை அமையும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதித்ய பகவான், அதிர்ஷ்ட எண்: 5,2,8,3
அதிஷ்ட நிறம்: நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,U




**ரிஷபம்:** புதிய முயற்சிகளால் சாதனை படைக்கக்கூடிய வாரம். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். கடல் சார்ந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். இடமாற்றம் நன்மைத் தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். உத்தியோக உயர்வு கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உடன்பிறப்புக்களால் உதவி கிட்டும். முதுகில் வலி வந்து போகும். சக ஊழியர்கள் உதவி கிட்டும். சம்பள உயர்வு கிட்டும். காதல் கை கூடும். விவாக முயற்சிகள் வெற்றி தரும். அரசு வகையில் ஆதாயம் உண்டு. உறவினர்களால் அனுகூலம் உண்டு. நிதி நிலைமை சீராகும். பணிவான பேச்சு அவசியம். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். அற்புத வாய்ப்பு கிட்டும். வேலை வாய்ப்புக்கூடும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். ஆபரணச் சேர்க்கை உண்டு. ஞாபக மறதி ஏற்படும். மாணவர்களுக்கு படிப்பில் அதிக கவனம் தேவை. உழைப்பிற்கான பலன் கிடைக்கும். பால்ய நண்பர்களை சந்திக்க நேரிடும். புதிய சொத்து சேரும். பொறியியல் துறை லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 6,9,2,0
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,W





**மிதுனம்:** தடைகள் விலகும் வாரம். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். தன வரவுகள் உண்டு. குதூகல எண்ணம் அதிகரிக்கும். பெரிய வாய்ப்புகள் தேடி வரும். பூர்வீக சொத்துக் கிடைக்கும். நினைத்தது நடக்கும். தர்ம சிந்தனை மேலோங்கும். சுபச் செலவுகள் வரும். நண்பர்களால் பாராட்டு கிட்டும். உத்தியோக வாய்ப்பு உண்டு. வார்த்தைகளில் நிதானம் தேவை. மங்கலச் செய்தியால் மனம் மகிழும். பங்குச்சந்தை லாபம் தரும். பித்ருக்கள் சாபம் நீங்கும். திறமைகள் வெளிப்படும். சேமிப்பு பெருகும். பழைய கடன் குறையும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். அரசியலில் ஆதாயம் உண்டு. பிரச்சனைகள் முடிவுக்கு வரும். நீண்ட நாள் கனவு பலிதமாகும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் தேடி வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். திட்டமிட்ட செயல் வெற்றி பெரும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். பேச்சில் பணிவு தேவை. சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். பயணங்களால் பணம் கரையும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். பழைய பாக்கி வசூலாகும். தொழில் அபிவிருத்தி அடையும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். களவுப்போன பொருள் கைக்கு வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நட்ஷத்திர தேவதை, அதிர்ஷ்ட எண்: 6,5,1,4
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,X




**கடகம்:** வியாபாரம் விருத்தியாகும் வாரம். தேகப்பலம் கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். இல்லத்தில் அமைதி பெருகும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். வரவு திருப்தி தரும். நீண்ட நாளைய நோய் விலகும். உடல்நலத்தில் அக்கறை தேவை. தொட்ட காரியம் ஜெயமாகும். மங்கையருக்கு திருமணம் கைகூடும். உழைப்பிற்கான பலன் கிடைக்கும். வாழ்த்துச் செய்திகள் வரும். மறைமுக எதிர்ப்புகள் மாறும். பணம் புரளும். செல்வாக்கு மேம்படும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். கல்வியில் ஆர்வம் கூடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். தாராளமான வருமானம் உண்டு. சுபச்செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். பித்ருக்கள் சாபம் நீங்கும். அரசியலில் ஆர்வம் கூடும். நினைவாற்றல் பெருகும். உதவும் குணம் அதிகரிக்கும். பழையக் கடன் தீரும். உடல் சோர்வு ஏற்படும். ஆடம்பர பொருள் சேரும். திருஷ்டிகள் விலகும். தெளிவான முடிவுகள் உதயமாகும். வெற்றி வீடு தேடி வரும். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். மின்சாரம் கவனம் தேவை. குதூகல எண்ணம் உருவாகும். கௌரவம் உயரும். தெய்வீகப் பற்று கூடும். போட்டிகள் உருவாகி மறையும். வியாபார அபிவிருத்தி ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கந்தப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 1,9,8,2
அதிர்ஷ்ட நிறம்: பால் வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,K




**சிம்மம்:** சிம்மம்: வெற்றிகள் குவியும் வாரம். தாய், தந்தை உதவி உண்டு. பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். புதிய நட்பு உருவாகும். மனைவியால் மரியாதை உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கன்னிப்பெண்கள் கவனம் தேவை. கால்நடைகளால் லாபம் உண்டு. கண் நோய் வந்து போகும். கடன் வாங்க நேரிடும். கலைத்தொழில் லாபம் தரும். பதவி உயர்வு கிட்டும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். ஆடை, அணிகலன் சேர்க்கை உண்டு. முயற்சிகள் வெற்றிகள் தரும். தீர்த்த யாத்திரை உண்டு. வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். தொழில் லாபம் தரும். குடும்பத்தில் மேன்மைகள் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். பணியாட்கள் ஆதரவு அதிகமாகும். பாதகமான சூழ்நிலை விலகும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். தொழில் போட்டி உருவாகி மறையும். பணியில் உயர்வு கிட்டும். பணிவும், துணிவும் கூடும். கஷ்ட காலம் மறையும். மன அமைதி சீர்குலையும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். செய்தொழில் முன்னேற்றம் உண்டு. புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 8,1,9,2
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,D




**கன்னி:** புதிய முயற்சிகள் பலன் தரும் வாரம். தொழில் வளம் கூடும். திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளி போடுங்கள். உடல்நலம் சிறக்கும். முகப்பொலிவு கூடும். பொருளாதாரம் ஏற்றம் பெருகும். மன அமைதி கிட்டும். கடன் கச்சைகள் தீரும். மனைவி உறவில் ஒற்றுமை வளரும். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். சாதித்துக் காட்டும் சாதனையான காலம். பாராட்டுக்கள் கிடைக்கும். பெண்களுக்கு மனஅமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். செய்தொழில் முன்னேற்றம் உண்டு. உத்தியோக வாய்ப்பு கிட்டும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றியாகும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை காணப்படும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். ஆன்மீகவாதிகள் உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவர். ஒரு சிலருக்கு கௌரவப் பதவி தேடி வரும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருமாரி அம்மன், அதிர்ஷ்ட எண்: 1,5,7,4
அதிர்ஷ்ட நிறம்: இளம்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,K




**துலாம்:** ஆசைகள் நிறைவேறும் வாரம். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். போதிய தனவரவு இருக்கும். அத்தியாவசிய தேவைகள் பூர்த்தியாகும். நீண்ட கால எண்ணம் நிறைவேறும். உதவிகள் குவியும். வாழ்க்கை தரம் உயரும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பணியில் இடமாற்றம் ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். நண்பர்களால் மதிப்பு உயரும். எதிர்ப்புகள் தவிடுப்பொடியாகும். எண்ணம் வண்ணமயமாகும். கவனமுடன் செயல்பட வேண்டும். பொருளாதாரம் உயரும். நண்பகலில் நல்ல தகவல் வரும். அத்தியாவசிய செலவுகள் ஏற்படும். தான தர்மங்கள் பலன் தரும். வழக்குகள் தள்ளிப்போகும். உற்சாகம் அதிகரிக்கும். உடல்பொலிவு கூடும். புதிய முதலீடு தவிர்க்கவும். பணியில் பாராட்டு கிடைக்கும். கூட்டுத் தொழிலில் லாபம் தரும். உயர்வுகள் தாமதமாகும். பயணம் அனுகூலம் தரும். கண்ணாடிப் பொருட்கள் சேதமடையும். கலக்கமான மனநிலை காணப்படும். அணிகலன் சேர்க்கை ஏற்படும். சேமிப்பு அதிகமாகும். பொறுப்புக்கள் கூடும். பெண்களுக்கு யோகம் கூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். இல்லத்தில் அமைதி கூடும். தொட்ட காரியங்கள் ஜெயமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விஷ்ணு, அதிர்ஷ்ட எண்: 4,1,8,2
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,T





**விருச்சிகம்:** உடல்நலம் ஷேமம் தரும் வாரம். எதிர்ப்புகள் மாயமாய் மறையும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். அத்தியாவசிய தேவைகள் பூர்த்தியாகும். கலை ஆர்வம் கூடும். வளமான சிந்தனைகள் உருவாகும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். இடையூறுகள் அகலும். எதிரிகள் தொல்லை குறையும். உல்லாசப் பயணம் இனிக்கும். சுபகாரியம் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பணநடமாட்டம் கூடும். கன்னிப்பெண்களின் எண்ணம் ஈடேறும். வெளி வட்டார பழக்கம் நலம் தரும். நீண்ட நாளைய நோய் விலகும். பணவரவு திருப்தி தரும். இல்லத்தில் அமைதி கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். தேகப் பலன் கூடும். உடல்நலம் சீராகும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. ஞாபகத்திறமை அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். குடும்பத்தில் அமைதி உண்டு. நண்பர்கள் உதவி கிடைக்கும். முன் கோபத்தை குறைத்துக்கொள்ள வேண்டும். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். கஷ்டகாலம் மறையும். சந்தோஷமான காலம் உதயமாகும். பணியில் உயர்வு உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: நரசிம்மர், அதிர்ஷ்ட எண்: 3,9,6,8
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,K




**தனுசு:** திட்டமிட்ட காரியம் வெற்றி கிடைக்கும் வாரம். மதிப்பும், மரியாதையும் உயரும். உடன்பிறப்புக்களின் உதவி கிடைக்கும். பணவரவு திருப்தி தரும். பொதுவாழ்வில் புகழ் கூடும். வாகன மாற்றம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். புதிய நாட்டம் ஏற்படும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மறைமுக எதிர்ப்புகள் மாறும். வாழ்த்துச் செய்திகள் வரும். அரசுதுறையில் ஆதாயம் உண்டு. சுபிட்ஷங்கள் பெருகும். புதுமையை விரும்புவீர்கள். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். கடன் வசூலாகும். கல்வியில் மேன்மையுண்டு. வீடு, மனை யோகம் உண்டு. ஆபரணத்தொழிலில் கவனம் தேவை. பங்குத் தொழிலில் லாபம் தரும். வாயில் தேடி வாய்ப்புக்கள் வரும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். நீண்டநாள் முயற்சி நிறைவேறும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும். வங்கி சேமிப்பு உயரும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கல நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவீர்கள். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சரஸ்வதி தேவி, அதிர்ஷ்ட எண்: 4,2,9,1
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,T




**மகரம்:** தேக ஆரோக்கியம் மிளிரும் வாரம். எண்ணங்கள் பலிதமாகும். திருமண பேச்சு முடிவிற்கு வரும். கடன் விஷயத்தில் கவனம் தேவை. விவேகம் கை கொடுக்கும். செல்வச்செழிப்பு உயரும். திருஷ்டிகள் விலகும். உடல்சோர்வு ஏற்படும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. வரவுகள் மிகுதியாகும். உடல்நலம் சீராகும். மாற்று மருத்துவம் பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். தேவைகள் பூர்த்தியாகும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. நட்பு வட்டம் விரிவடையும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். வணிகத்தொழில் வளம் பெறும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். எதிரிகள் தொல்லை ஒழியும். உற்சாகம் மேலோங்கும். தொழில், போட்டி மறையும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். விபரீத எண்ணம் விலகும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். குளிர்பான தொழில் கவனம் தேவை. பணத்தேவை அதிகரிக்கும். பயணங்களால் வெகுமதி கூடும். மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 9,2,6,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,K

(தொடர்ச்சி 30 பக்கம்)

மலேசிய மடல்

# மூன்று மாதங்களில் அந்நிய தொழிலாளர் பிரச்சினைக்குத் தீர்வு:

## மலேசியா உணவக உரிமையாளர் சங்க ஆண்டுக் கூட்டத்தில் அமைச்சர் சிவக்குமார்



நக்கீரன்




**பெட்டாலிங்ஜெயா, டிச.28:**

நாட்டில் புதிதாக அமைந்துள்ள மத்திய கூட்டரசாங்கத்தை வழிநடத்தும் பிரதமர், இந்திய சமுதாயம் எதிர்கொள்ளும் அனைத்து வகையான பிரச்சினைகளுக்கும் விரைந்து தீர்வு காணும்படி கேட்டுக் கொண்டிருப்பதால், மலேசிய இந்திய உணவக உரிமையாளர் சங்க(பிரிமாஸ்)த்தினர் நீண்ட காலமாக எதிர்கொண்டிருக்கும் வெளிநாட்டுத் தொழிலாளர் பற்றாக்குறைப் பிரச்சினைக்கு ஏறக்குறைய மூன்று மாதங்களில் தீர்வு காணப்படும் என்று மனித வளத் துறை அமைச்சர் வி. சிவக்குமார் நம்பிக்கை தெரிவித்தார்.

முன்னதாக, மலேசிய இந்திய உணவக உரிமையாளர் சங்கம்(பிரிமாஸ்), நீண்டகாலமாக எதிர்கொண்டு வரும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்று மனித வள அமைச்சிடம் பிரிமாஸ் தலைவர் கோரிக்கை வைத்தார்.



மலேசிய இந்திய உணவக உரிமையாளர் சங்கத்தின் 22-ஆவது ஆண்டுக் கூட்டம் நேற்று டிசம்பர் 28 புதன்கிழமை, பெட்டாலிங் ஜெயா தோட்ட மாளிகையில் நடைபெற்றபோது, அதில் சிறப்புப் பிரமுகராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பேராக் சட்டமன்ற முன்னாள் சபாநாயகருமான சிவக்குமார், உணவகத் தொழில்துறை எதிர்கொண்டுள்ள தொடர் பிரச்சினை குறித்து தனக்கு நன்றாகத் தெரியும் காலை, பகல், மாலை, இரவு என எல்லா வேளைகளிலும் உணவுக் கடையைத்தான் நாடுகிறோம். தவிர, உணவகத் தொழிலில் நேரடியாக ஈடுபட்ட அனுபவமும் அண்மையில் தனக்கு ஏற்பட்டது என்றார்.

அதனால், தொழிலாளர் பற்றாக்குறைப் பிரச்சினை காரணமாக, பிரிமாஸ் உறுப்பினர்கள் எதிர் கொண்டிருக்கும் பிரச்சினை தனக்கு நன்றாகத் தெரியும் என்றும் அதற்காக, பிரிமாஸ் தலைவர் ஜி. கோவிந்தசாமி என்ற சுரேஷ் இப்படி கோரிக்கையை மழையைப் பொழிவார் என்று எதிர்பார்க்கவில்லை என்றும் சிவக்குமார் பிரிமாஸ் உறுப்பினர்களின் கைத்தட்டலுக்கு இடையில் குறிப்பிட்டார்.



இந்திய சமுதாயம், குறிப்பாக வர்த்தகர்கள் எதிர்கொண்டுள்ள அனைத்துவித சிக்கலையும் உடனுக்குடன் தீர்க்கும்படி பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராகிம் கேட்டுக் கொண்டுள்ளதால், தொழில் துறையினருக்குத் தேவையான அந்நிய தொழிலாளர்களை எளிய முறையில் தருவிப்பது குறித்து உள்துறை அமைச்சருடன் ஏற்கெனவே ஆலோசனை செய்யப்பட்டுள்ளது.

வரும் ஜனவரி 5-ஆம் நாள் மீண்டும் உள்துறை அமைச்சகத்துடன் இதன் தொடர்பில் பேச்சு நடத்த ஏற்பாடு ஆகியுள்ளது. அதனால், ஏறக்குறைய அடுத்த 3 மாதங்களில் உணவக உரிமையாளர்களின் தொழிலாளர் பற்றாக்குறை சிக்கலுக்குத் தீர்வு காணப்படும் என்றும் சிவக்குமார் உறுதி அளித்தார்.

முன்னதாக பிரிமாஸ் தலைவர் ஜெ. கோவிந்தசாமி என்ற சுரேஷ், தலைமையுரை ஆற்றியபோது, தற்பொழுது உணவகங்களில் பணிபுரிந்து கொண்டிருப்பவர்கள் தங்களின் தாய் நாட்டிற்குத் திரும்பும்போது, இயல்பாகவே மாற்றுத் தொழிலாளர்களை அமர்த்திக் கொள்வதற்கான வாய்ப்பு உள்துறையால் அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் இதன் தொடர்பில் அமைச்சர் உரிய பரிந்துரை செய்ய வேண்டும் என்றும் அமைச்சரைக் கேட்டுக் கொண்டார்.

அத்துடன், பத்து ஆண்டுகள்வரை உணவகங்களில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு பரந்த அனுபவமும் உணவகத் தொழிலின் தன்மையும் நன்கு தெரிந்திருக்கும் என்பதால், வயதுக் கட்டுப்பாட்டைக் காரணம் காட்டி அவர்களை திருப்பி அனுப்பாமல், அவர்கள் தொடர்ந்து சம்பந்தப்பட்ட உணவுக் கடைகளில் மேலும் பணிபுரிய வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தார்.

பிரிமாஸ் கௌரவத் தலைவர் டத்தோ ரெனா இராமலிங்கம், பிரிமாஸ் தலைவர் ஜெ. கோவிந்தசாமி என்ற சுரேஷ் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், தொழில் முனைவோர் மற்றும் கூட்டுறவு மேம்பாட்டுத் துறை துணை அமைச்சர் சரஸ்வதி கந்தசாமி, லோட்டஸ் குழுமத்தின் தலைமை நிர்வாக இயக்குனர் டான்ஸ்ரீ ரெனா துரைசிங்கம், மலேசிய இந்திய வர்த்தக தொழிற்சங்க சம்மேளனம்-மைக்கி தலைவர் டத்தோஸ்ரீ ந. கோபாலகிருஷ்ணன், கிள்ளான் முன்னாள் எம்பி சார்லஸ் சந்தியாகு, மைக்கி உறுப்பினர்களான சிகை அலங்கார நிலைய உரிமையாளர் சங்கத் தலைவர் சுதந்திரன், ஜவுளிக்கடை உரிமையாளர் சங்கத்தின் டத்தின் மகேசுவரி உள்ளிட்ட தலைவர்களும் இதில் கலந்து சிறப்பித்தனர்.

கொரோனா பரவல் காரணமாக கடந்த ஆண்டில் நடைபெறாமல் இருந்த பிரிமாஸ் ஆண்டுக் கூட்டம், இந்த ஆண்டு சிறப்பாக நடைபெற்றது.



**நக்கீரன் -** Nakkeeran **013-244 36 24**


உங்கள் திறமைக்கு அதிஷ்டம் காத்திருக்கிறது

**வெல்லுங்கள் 1,50,000 ரூபாய்கள்!**



**எழுத்தாளர் 'குரு அரவிந்தன் வாசகர் வட்டம்'**
**நடத்தும் உலகளாவிய திறனாய்வுப் போட்டி - 2023**



தமிழ் இலக்கிய உலகில் புகழ் பெற்ற எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களின் தமிழ் இலக்கிய சேவையைப் பாராட்டும் முகமாகவும், வாசிப்பு, எழுத்துப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கமாகவும் இடம்பெறும் குரு அரவிந்தன் எழுதிய நாவல், சிறுகதை தொடர்பான திறனாய்வுப் போட்டி.

15 பரிசுகள், மொத்தம் 1,50,000 ரூபாய்கள், இலங்கை ரூபாயில் வழங்கப்படும்.

| | |
|---|---|
| முதலாம் பரிசு இலங்கை ரூபாய்கள் | -30,000. |
| இரண்டாவது பரிசு இலங்கை ரூபாய்கள் | -25,000. |
| மூன்றாவது பரிசு இலங்கை ரூபாய்கள் | -20,000. |
| நாலாவது பரிசு இலங்கை ரூபாய்கள் | -15,000. |
| ஐந்தாவது பரிசு இலங்கை ரூபாய்கள் | -10,000. |
| 10 பாராட்டுப் பரிசுகள் இலங்கை ரூபாய்கள் தலா | -5,000. |

குரு அரவிந்தன் அவர்களின் படைப்புகளுக்கான திறனாய்வுப் போட்டி. குறைந்தது 2 புதினங்கள் அல்லது 4 சிறுகதைகள் பற்றி உங்களின் கருத்துரைகளைத் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் 5 பக்கங்களுக்குள் அல்லது 1500 சொற்களுக்கு மேற்படாமல் யூனிக்கோட் மற்றும் வேர்ட் *(Unicode and Word)* அச்சுப்பிரதியாக அனுப்பவும். மாணவ, மாணவிகளாயின் தனியாகக் குறிப்பிடவும். வயது வரம்பு இல்லை. ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே அனுப்பலாம். பரிசுபெற்ற கட்டுரைகளைத் திருத்தி நூலாக வெளியிடும் உரிமை வாசகர் வட்டத்திற்கு உரியது. மின்னஞ்சல் வழியாக ஆங்கிலத்தில் உங்களின் முழுப்பெயர், தெளிவான அஞ்சல் முகவரி, மின்னஞ்சல் முகவரி, செல்போன் எண் விபரங்களோடு அனுப்பவேண்டும்.

உங்கள் திறனாய்வு எமக்குக் கிடைக்க வேண்டிய கடைசி நாள்: 31.03.2023

போட்டி முடிவுகள் 2023 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி இணையத்தில் வெளியிடப்படும்.

மின்னஞ்சல் : ***kurufanclub@gmail.com*** இணையம் : ***kurunovelstory.blogspot.com***

***<https://canadiantamilsliterature.blogspot.com/>***

இந்த அறிவிப்பினை உங்களின் முகநூல் பக்கத்திலும் பகிர்க்குழுக்களிலும்; *(whatsapp)* பகிர்ந்து உதவுங்கள்.

நன்றி!

**சுலோச்சனா அருண்,**
செயலாளர், குரு அரவிந்தன் வாசகர் வட்டம்.

# யாழ்ப்பாணம் ஸ்ரீதர் திரையரங்கிற்கு மீண்டும் மின்சாரம்

**- எமது யாழ் செய்தியாளர்**



யாழ்ப்பாணத்தின் மையப் பகுதியில் பிரபலமாக இருந்த ஸ்ரீதர் திரையரங்கை வலிந்து கைப்பற்றி அதன் தமது தலைமையகமாகப் பயன்படுத்திவரும் ஈ.பீ.டி.பி கட்சி, மின் கட்டணம் செலுத்தாததால் துண்டிக்கப்பட்டிருந்த இணைப்பு மீண்டும் அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 40 நாட்களாக இருளில் மூழ்கியிருந்த ஸ்ரீதர் திரையரங்கத்தில் வியாழக்கிழமை (22) முதல் விளக்குகள் மீண்டும் எரிகின்றன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இயங்கும் ஸ்ரீதர் திரையரங்கிற்கான மின் இணைப்பு இந்தாண்டு நவம்பர் மாதம் 12 ஆம் திகதி அன்று துண்டிக்கப்பட்டது. 1998 ஆம் ஆண்டு முதல் இலங்கை மின்சார சபைக்குச் செலுத்த வேண்டிய கட்டணங்களை வட்டியுடன் செலுத்த தவறியதால் அங்கு மின் இணைப்பு நிறுத்தப்பட்டது.

அந்த வளாகத்திற்கான மின் கட்டணம் 1998ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 2014ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை செலுத்தப்படாமல் நிலுவையில் இருந்தது. அவ்வகையில் செலுத்தப்படவேண்டிய தொகைக்கான மின் இணைப்பின் கணக்கிலக்கமான 1698170408 இன் மீதி 2014ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் 85 லட்சத்து 50 ஆயிரத்து 982 ரூபா 75 சதம் காணப்பட்டதாகவும் 2014ஆம் ஆண்டிற்கு பின்பு தற்போது 2022 ஆம் ஆண்டுவரையில் மாத சிட்டைக்கான கொடுப்பனவு மட்டுமே செலுத்தப்பட்டபோதும் பழைய நிலுவைப் பணம் செலுத்தாத காரணத்தினாலேயே மின் துண்டிப்புத் தொடர்பில் இலங்கை மின்சார சபை அறிவித்தது.

தொடர்ச்சியாக 16 ஆண்டுகள் மின் கட்டணம் செலுத்தாத காரணத்தால் கட்டணத் தொகையான 85 லட்சத்து 50 ஆயிரத்து 982 ரூபா 75 சதத்திற்கும் 8 ஆண்டுக்கால வட்டிப் பணத்துடன் ஒரு கோடி ரூபாவினை தாண்டியதாகக் கணக்கிடப்பட்டது.

எனினும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக இயங்கிய காலத்தில் அமைச்சராக செயல்பட்ட பணிகள் கருதி மின்சாரக் கட்டணத்தை மட்டும் செலுத்தவும் வட்டிப் பணத்தை இரத்துச் செய்யவும் அமைச்சு மட்டத்தில் பேசப்பட்டு செலுத்த வேண்டிய தொகையில் முதல் கட்டமாக 25 லட்சம் உடனடியாகச் செலுத்தப்பட்டதன் அடிப்படையில் மீண்டும் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியிலுள்ள ஸ்ரீதர் சினிமா தற்போது ஆஸ்திரேலியாவில் வசித்துவரும் மஹேந்திரராஜவிற்கு சொந்தமானது.

உள்நாட்டுப் போர் 1990களின் தொடக்கப் பகுதியில் உச்சகட்டத்தை எட்டியிருந்த நிலையில் 1991 ஆம் ஆண்டு ஸ்ரீதர் சினிமாவை இழுத்து மூடும் நிலை ஏற்பட்டது. இதையடுத்து தனியார் நிறுவனம் ஒன்று அதை தமது கிடங்காகப் பயன்படுத்தி வந்தது. அந்த தனியார் நிறுவனம் அங்கிருந்து வெளியேறிய பிறகு தனிப்பட்ட பாதுகாப்பு நபர்களை தான் நிறுத்தியிருந்ததாகவும், அவர்களை துப்பாகி முனையில் மிரட்டி வெளியேற்றி 1996 ஆம் ஆண்டு தமது பூர்வீகச் சொத்தான அந்த இடத்தை ஈ.பி.டி.பி கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா வலிந்து ஆக்கிரமித்ததாக அதன் உரிமையாளர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அதை காலி செய்யுமாறு 25 கடிதங்கள் மற்றும் 1000 தொலைபேசி அழைப்புகளுக்கு மேலாகச் செய்தும் அமைச்சர் அதை மீண்டும் தம்மிடம் கையளிக்கவில்லை என்று மஹேந்திரரவிராஜ் ஆதங்கப்படுகிறார்.

அந்த இடத்தில் யாரும் இல்லை என்பதால் அதை கட்சி அலுவலகமாக தான் பயன்படுத்துவதாகவும், வலிந்த ஆக்கிரமிப்பு ஏதும் இடம்பெறவில்லை, அதை உரமையாளரிடம் மீண்டும் கையளிப்பதில் தங்களுக்குத் தயக்கம் ஏதுமில்லை இல்லை என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை மேற்கோள் காட்டி ஈ.பி.டி.பி கட்சி தெரிவித்துள்ளது.

## இவ்வார ராசிபலன்

(28 பக்கத் தொடர்ச்சி)




**கும்பம்:** பொன்னும், பொருளும் சேரும் வாரம். வார்த்தைகளில் கவனம் தேவை. பதவி உயர்வு தாமதமாகும். நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். கருத்து வேறுபாடுகள் விலகும். சகோதர வகையில் சகாயம் கிடைக்கும். விரயம் குறையும். வியாபாரம் சிறக்கும். பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். திடீர் பயணம் ஏற்படும். விவசாயம் லாபம் தரும். வீடு, மனை யோகம் உண்டு. புதிய வாய்ப்புகள் வரும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உடல் உஷ்ணம் அதிகரிக்கும். பாக்கிகள் வசூலாகும். பணவரவு மேலோங்கும். குடும்பத்தில் குழப்பம் தீரும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் கூடும். சேமிப்பு அதிகரிக்கும். பணியாட்களிடம் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். திட்டமிட்ட செயல்பாடு தேவை. சாதகமான சந்தர்ப்பங்கள் நிகழும். ஆழமான மேன்மைகள் அமையும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வேண்டாத நபர்கள் விலகுவர். விவாதம் வாக்குவாதங்களாக மாறும். நல்லச் செய்திகள் நாடி வரும். நீண்ட நாள் கனவுகள் நிறைவேறும். தடைகள் அகலும். உயர் பதவி யோகமுண்டு. உற்சாகம் களைகட்டும். மாற்றங்களை சந்திப்பீர்கள்.
வழிபட வேண்டிய தெய்வம்: மஹாலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 4,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,A




**மீனம்:** மாற்றுச் சிந்தனை உதயமாகும் வாரம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கடன் சுமை குறையும். தாய்வழி தகராறுகள் குறையும். கனவுகள் பலிதமாகும். கனிவான பேச்சு அவசியம். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். ஆலய தரிசனம் அமைதி தரும். இனம்புரியாத சந்தோஷம் ஏற்படும். பிள்ளைகளால் தன வரவு உண்டு. வெளியூர் பிரயாணம் வெற்றி தரும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. வெகுமானம் கிடைக்கக்கூடிய அற்புதமான காலம். ஆண்களின் அதிகாரம் உயரும். பெண்களால் பெருமை சேரும். எதிர்ப்புகள் உருவாகி மறையும். வறுமைகள் வாட்டம் குறையும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. பயணங்களால் பணம் கரையும். அரசு வழியில் ஆதாயம் கிடைக்கும். பழைய பாக்கி வசூலாகும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. தொழில் ரகசியம் காப்பாற்றப்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 1,7,6,2
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,L

# ஆறுமுகநாவலர்

கந்தப் பிள்ளை சிவகாமி கனிமகனாய்
கந்தன் குடிகொண்ட நல்லூரில்
வந்துதித்தார் வரம்பல பெற்ற புதல்வனாய்
வரலாறு படைத்த ஆறுமுகம்
ஆயிரத்து எண்ணூற்று இருபத்தி இரண்டில்
அறுதி மாதம் பதினெட்டில்
பாயிரம் படைத்திட பாரினில் தோன்றினார்
பாலகன் பார்வதி மைந்தன்.

ஐந்து வயதில் அழகாய் நடந்தது
அறிவு அளிக்கும் வித்தியாரம்
புந்தி புகட்ட சுப்பிரமணி உபாத்தியிடம்
பாரம் கொடுத்தனர் பெற்றோர்கள்
ஒன்பதாண்டில் தந்தை உயிரிழந்த போதிலுமே!
ஒழுக்கத்துடன் கல்வி கற்றாரே!
பன்னிரண் டகவையில் பாண்டித்தியம் பெற்றே!
பல்லோரும் போற்றும் மாணவரானார்.

மத்திய கல்லூரியில் மாணவனாக இணைந்து
மிகத்திறமை ஆங்கிலத்தில் காட்டினார்
பத்தொன் பதாவது பராயத்தில் ஆசிரியரானார்
பேர்சிவல் பாதிரியாருடன் இணைந்தே!
விவிலிய நூலைத் தமிழில் மொழிமாற்றி
வித்துவான் என்பதை காட்டினார்
அவருடன் அதிதியாக சென்னை சென்றே!
அழகாய் அச்சிட்டும் வந்தாரே!.

சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கல்வியில்
தமிழின் வளர்ச்சி நோக்கமாகவும்
சைவமதம் சிறப்பாக வளரும் பொருட்டும்
சைவப் பிரசங்கம் செய்தார்
மத்திய கல்லூரி மூன்றுபவுண் சம்பளத்தை
மதிக்காமல் பதவி துறந்தே!
சதாசிவம் பிள்ளையுடன் சென்னை சென்றே!
சிலகாலம் தங்கி இருந்தார்.

திருவாதுறை ஆதீனத்தில் தம்புலமை வெளிப்படுத்தி
சிறப்பாக நாவலர்பட்டம் பெற்றாரே!
உரைநூலான சௌந்தரி அலங்காரத்தை ஊறின்றியே!
ஊர்மெச்ச அச்சேற்றி வைத்தார்
அச்சுயந்திரம் ஒன்றை அவசரமாய் வாங்கியே!
அச்சுக்கூடம் ஒன்றை நிறுவினார்
வச்சிர தாண்டத்தை வசனநடையில் அச்சேற்றி
வரிசையாய்ப் பலநூல்களைப் பதிப்பித்தாரே.

சிவாலய தரிசனவிதி ஆத்திசூடி கொன்றைவேந்தன்
திருமுரு காற்றுப்படை யேசுமதபரிகாரம்
சைவசமய சாரம் திருவாசகம் வெளியிட்டே!
சிறந்த சேவையை ஆற்றினார்
இவரதுபணி இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் பரவிட
இறவாத பலநூல்களை அச்சேற்றினார்
அவர்செய்த அருமையான பிரசங்கத்தை மெச்சியே!
அழகான பல்லக்கில் ஏற்றினாரே.!

பக்கவாத் தியங்களுடன் பட்டணப் பிரவேசம்
பரிவட்டம், பூமாலையும் அணிவித்து
மக்கள் தம்பிரான்கள் ஓதுவார்கள் வாழ்த்திட
மரியாதை செய்து வழியனுப்பினர்
திருப்பெருந்துறை தலத்தை தரிசித்தே!
சிதம்பரம் சென்று சேர்ந்தார்
அரும்பெரும் சேவையை தமிழ்நாட்டில் ஆற்றியே!
அகமகிழ்வோடு தாயகம் திரும்பினாரே!.

தமது சொந்தச் செலவில் கோப்பாயில்
தரமான பாடசாலையை நிறுவினார்
நமது மாணவர்களின் நன்மை கருதியே!
நல்லதொரு ஆங்கிலப் பாடசாலையை
வண்ணார் பண்ணையில் வளமாக நிறுவியே!
வருமானம் வராதபோதும் நடத்தினார்
உண்மை அனுபவம் ஒன்றாக திரட்டியே!
ஊரறிய நூலொன்றை வெளியிட்டாரே! (யாழ்ப்பாணச் சமயநிலை)

ஆயிரத்து எண்ணூற்று எழுபத்தைந் தாண்டளவில்
அருமையான நூல்களை எழுதினார்
ஆயிரம் பெறுமதி ஆங்கிலதமிழ் அகராதியை
ஐயம்தெளிவுற அழகாக ஆக்கினார்
திருவிளையாடல் புராணம் சமஸ்கிருத அகராதி
தமிழ்அகராதி போன்றவற்றை வெளியிட்டார்
திருக்கோ யிலான நகுலேஸ்வரம் சிவாலயத்தை
திரும்ப உருவாக்க முயற்சித்தாரே!

ஆயிரத்து எண்ணூற்று எழுபத் தொன்பதில்
அருட்பாக்களை ஓதும்படி கூறியே!
தூய வாழ்வைத் தரணியில் துறந்தே!
தூயவன் திருவடி சேர்ந்தாரே!
ஆயுள் முழுவதும் அரியசேவை செய்தவர்க்கு
அஞ்சல்தலை வெளியிட்டது இலங்கையரசு
நேய வாழ்வை நெறியுடன் வாழ்ந்தார்க்கு
நல்லூரிலே மணிமண்டபம் அமைத்துள்ளார்.

1. பாயிரம்---சரித்திரம் 2.வித்தியாரம்----ஏடு தொடக்குதல் 3.புந்தி---அறிவு
4. அதிதி---விருந்தினர் 5. பட்டணப் பிரவேசம்---ஊர்வலம்
6. பரிவட்டம்---தலைப்பாகை 7. தூயவன்---திருமால்

(17.12.2022 ஆறுமுகநாவலரின் 200வது அகவை தினத்தை நினைவு கூர்ந்து, அவரது நினைவிடத்தில் நடந்த விழாவில், கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தால் நடத்தப்பட்ட கவிஅரங்கில் படிக்கப்பட்ட கவிதை.)


MORTGAGE FINANCIAL
Home / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
MERRY
CHRISTMAS
HAPPY
New Year
2023
“எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள்,
உறவினர் அவர்தம் குடும்பத்தினர் அனைவருக்கும்
நத்தார் புதுவருட வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக் கொள்கின்றோம் !”
SUBRA
MORTGAGE SOLUTIONS
Residential Mortgages
* 1st & 2nd Mortgages
* Refinance, Renewal & Switches
* Equity Line of Credit
Commercial Mortgages
* 1st & 2nd Mortgages
* Refinance, Renewal & Switches
* Equity Line of Credit
NESAN
416-908-5656
Off: 416-660-5656 | Fax: 647-351-3099
Toll Free: 1-844-878-2721
mortgage@subra.com
www.subra.com
Our off: 1585 Markham Rd, Unit # 406, Toronto, M1B 2W1, Canada
Powered by
MORTGAGE ALLIANCE
TD Canada Trust
RFA
WE DEAL WITH ALL BANKS
Scotiabank
EQUITABLE BANK
FIRST NATIONAL FINANCIAL LP
HOME TRUST
Brokerage # 10330
radius financial
RMG mortgages
MCAP

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்..
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

உதயம் 1395 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 30, 2022

# கனடாவில் இயங்கிவரும் "இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் – கனடா" நடத்திய "வர்த்தக தீபம்"







கடந்த 26-12-2022 ஞாயிற்றுக்கிழமை மாலை ஸ்காபுறோ கொன்வென்சன் சென்றர் விழா மண்டபத்தில் கனடாவில் இயங்கிவரும் "இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம்-கனடா" நடத்திய "வர்த்தக தீபம்" சிறப்பாக நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதியின் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம் கலந்து கொண்டார். இந் நிகழ்ச்சியை திரு. கென் கிருபா அவர்கள் சிறப்பான முறையில் தொகுத்து வழங்கினார்.

கனடாவில் புகழ்பெற்ற இசைக் குழுவான "மெகா ரீயுனர்ஸ் இசைக்குழுவின் மெல்லிசை இசை நிகழ்ச்சியும் இடம்பெற்றது. இந்த விழாவில் வர்த்தகத்துறையில் கனடாவில் சாதனைகள் படைத்த வண்ணம் மனித நேயப் பணிகள் ஆற்றிவரும் சிலருக்கு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றன. இங்கே காணப்படும் படங்களில் வர்த்தகத்துறை, பொதுச் சேவை மற்றும் கலைத்துறை ஆகியவற்றில் அர்ப்பணிப்போடு செயற்பட்டு வரும் சிலர் விருதுகளைப் பெறுவதைக் காணலாம்.






# சேவை வழங்கும் நிறுவனமான Frontline Community Centre நடத்திய நத்தார் தினக் கொண்டாட்டம்

கனடாவில் மூன்று வகையான அரசாங்கங்களினால் அங்கீகரிக்கப்பெற்ற சேவை வழங்கும் நிறுவனமான **Frontline Community Centre** நடத்திய நத்தார் தினக் கொண்டாட்டம் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது.பிரதம விருந்தினராக ஸ்காபுறோ வடக்கு தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சுவான் சேன் அழைக்கப்பட்டிருந்தார்.

நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் **(Executive Director)** திருமதி விஜயா குலா அவர்கள் தனது அலுவலக உதவியாளர்கள் மற்றும் தொண்டர்கள் அங்கத்தவர்கள் ஆகியோரோடு இணைந்து விழா ஏற்பாடுகளைச் செய்திருந்தார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

இங்கே காணப்படும் படங்களில் தொண்டர்கள் பாராளுமன்ற உறுப்பினரால் சான்றித்ழ் வழங்கிக் கௌரவிக்கப்படுவதையும் காணலாம்.

# ஊர்காவற்றுறை சென் ஜேம்ஸ் தேவாலய கழகத்தின் வருடாந்த நத்தார் தினக் கொண்டாட்டம்



கனடாவில் இயங்கிவரும் ஊர்காவற்றுறை சென் ஜேம்ஸ் தேவாலய கழகத்தின் வருடாந்த நத்தார் தினக் கொண்டாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று மார்க்கம் நகரில் உள்ள "றோயல் ஜெஸ்மின் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

விழாவை கலைஞரும் சமூக சேவையாளருமான குயின்ரஸ் துரைசிங்கம் அவர்கள் சிறப்பாகத் தொகுத்து வழங்கினார்.

ஊர்காவற்றுறை சென் ஜேம்ஸ் சமூகத்தைச் சேர்ந்த கனடா வாழ் அன்பர்கள் அனைவரும் தங்கள் குடும்பத்தினரோடு மகிழ்ச்சியோடு கலந்து சிறப்பித்தனர்.

அங்கே எடுக்கப்பெற்ற படங்கள் இங்கு காணப்படுகின்றன.

# "சிவஶ்ரீ சிவானந்த சர்மா சமய அறிவியலையும் சமூக அறிவியலையும் சமாந்தரமாக தனது கைகளில் எடுத்துக் கொண்டவர்"

## கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் புகழாரம்



"யாழ்ப்பாணம் கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தொடர்ச்சியாக அந்த மண்ணிலேயே வாழ்ந்து வருபவருமான "கோப்பாய் சிவம்" என்ற புனைபெயரைக் கொண்ட சிவஶ்ரீ சிவானந்த சர்மா அவர்கள் சமய அறிவியலையும் சமூக அறிவியலையும் சமாந்தரமாக தனது கைகளில் எடுத்துக் கொண்டவர்ள அத்துடன் அவற்றை தொடர்ச்சியாக நன்கு மதித்தும் பேணியும் வருபவர். இவ்வாறான ஒரு படைப்பாளியையோ அன்றி பேச்சாளரையோ அன்றி எழுத்தாளரையோ இவரோடு ஒப்பிட்டுச் சொல்வதும் மிகவும் சிரமமான ஒரு காரியமாகும்""

இவ்வாறு புகழாரம் சூட்டினார் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் முன்னாள் தலைவருமான லோகன் லோகேந்திரலிங்கம் அவர்கள். (உள்ளே விபரமான செய்தி 14ம் பக்கத்தில்)

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H.Selvanayagam Broker

புலம்பெயர் உறவுகளே! தாயகம் செல்லுகையில் இங்கு தங்கிப் பாருங்கள்..
தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் தரமான நட்சத்திர விடுதி
MaRadha HOTEL
COLOMBO - SRI LANKA
SALES@MARADHA.LK
+94112550136